CONNEMARA
1 3 MAR 1963
MADRAS


# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௩ | மலர் |
|---|---|---|
| ௩௮ | சுபகிருது, கார்த்திகை, மார்கழி, தை<br>1962 டிசம்பர், சனவரி, பிப்ரவரி | ௮, ௯, ௧௰ |


**கல்வெட்டாராய்ச்சி**

## 1. தமிழகத்திற்கப்பால்


கே. ஜீ. கிருஷ்ணன். M.A., B.T., Dip. Geo., Dip. Anthrop.
தொல்பொருட்டுறை, கல்வெட்டிலாகா
உதகமண்டலம்.


'திரைகடலோடியும் திரவியம்தேடு' என்ற பழமொழிக்கேற்ப தமிழன் பண்டைக்காலம் முதல் இன்று வரை கடல் கடந்து வாணிபம் செய்துவருவது யாவரும் அறிந்ததே. ஆயினும் பண்டைக் காலங்களில் தமிழன் தான் நிகழ்த்திய வாணிபத்தைப்பற்றி யாதொரு குறிப்பும் நாமறிய வரைந்துவைத்திருக்கவில்லை. வாணிபத்தால் ஏற்படும் பொருள்வளத்தையன்றி அதனல் விளையும் பண்பாட்டுக்கூறுகளை வரலாற்ருசிரியர்கள் உய்த்துணர்ந்து வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. அக்கூறுகளைத்தம்முள் அடக்கிய குறிப்புக்களும் ஒரு சிலவே. அவற்றுள் கல்வெட்டு இன்றியமையாததொன்று. ஆகவே முதற்கண் தமிழகத்திற்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் தமிழ்க்கல்வெட்டுக்களை இங்கே காலவகையால் நிரற்படுத்தி முறையாக ஆராய்வோம்.

க

தாய்லாந்து நாட்டில் தகோபா ஆற்றின் பழைய படுகையில் தாத்-நர்-முவா என்ற தளத்தில் வைணவச்சின்னங்கள் பல காணப்பட்டன. அவற்றுள் ஒரு உடைபட்ட கல்லில் தமிழ்க்கல்வெட்டொன்று காணப்பட்டது. பேராசிரியர் உல்ட்ச், நீலகண்ட சாத்திரியார், கோபிநாதராவ் என்ற மூவரும் அக்கல்வெட்டைப் படித்துக்

கொண்ட பாடங்களை ஒப்பிட்டதில் முடிவாகக்கண்ட பாடத்தைக் கீழே தருகின்றோம். பகரக்குறியிலுள்ள எழுத்துக்கள் ஐயத்திற் கிடமானவை.

1 .. யவர் ம[ந்] கு[ண]
2 . [மா]ந் தாந் நங்கூரயை. .
3 .த் தொட்டகுளம் பெர் ஸ்ரீ [அவநி]
4 நாரணம் மணிக்கிராமத்தார் [க்]-
5 கும் சேனா முகத்தார்க்கும்.
6 . [ப]தார்க்கும் அடைக்கலம்

இக்கல்வெட்டு எழுத்தமைதியால் ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். கல் உடைபட்டிருப்பதால் கல்வெட்டின் பாடமும் தடைப்படுகின்றது. ஆயினும் அதன் பொருளை உய்த்துணர்ந்து கூறலாம். ஸ்ரீ அவநிநாரணம் என்று பேரிடப்பட்ட குளம் ஒன்று வெட்டப்பட்டதாகவும் அக்குளம் மணிக்கிராமத்தாரிடம் அடைக்கல மாக அளிக்கப்பட்டதாகவும் அறியக்கிடக்கின்றது. மணிக்கிராமத் தாருடன் அவரோடு இயங்கிவரும் சேனாமுகத்தாருக்கும் அப் பொறுப்பு ஏற்பட்டது என்றும் காணக்கிடக்கிறது. மற்றுமொரு குழுவினருக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதன் பெயர் அழிந்து பட்டது.

'யவர்மந்' என்ற தொடர் ஒரு அரசனது பெயரின் பிற்பகுதி யாக இருக்கலாம் என்று தெளிய இடமிருக்கிறது. குளம் தொட்ட வரின் பெயரோ அழிந்த பகுதியில் அடங்கியிருக்கிறது. அடுத்த படியாக நங்கூர் என்ற சொல் ஒரு ஊரின் பெயரைக் குறிப்பதுபோல் காணப்படுகிறது. ஊர் என்னும் சொல்லை இறுதியாக உடைய பெயர் அந்நாட்டில் காணப்படுவது இயலாதாகையால் தமிழ்நாட்டில் சீர்காழி வட்டத்தில் உள்ள நாங்கூர் என்ற ஊரே அது என்று கொள்ளலாம். கல் வெட்டிலும் நாங்கூர் நங்கூர் என்று பிழைபட எழுதப்படுவது இயல்பே. தமிழ்நாட்டின் கீழ்க்கடற்கரைக்கு அணித்தே உள்ள இந்நாங்கூரிலிருந்து வங்கக்கடல் கடந்து தாய் லாந்தின் மேல் கடற்கரையில் உள்ள தகோபாவுக்கு வணிகர் குழு

1 கீழ்க்கண்ட குறிப்புப் புத்தகங்களில் இக்கல்வெட்டுக்கள் பதிப்பிக்கப்பட்டிருக் கின்றன :

1 Journal of Oriental Research, vol. VI
2 Epigraphia Indica, vol. VII

சென்றிருக்கலாம் என்ற கருத்தும் இதனையே வலியுறுத்துகின்றது. திருமங்கை மன்னன் நாங்கூர் திருமணிக்கூடத்துப் பெருமானைப் பாடிய பாசுரங்களில் 'ஒண்திறல் தென்னனோட வடவரசோட்டம் கண்ட திண்திறலாளர் நாங்கூர் திருமணிக்கூடத்தானே' என்ற பகுதி அவ்வூரிற் சிறந்தவீரரும் வாழ்ந்து வந்தனர் என்ற செய்தியை அறிவிக்கின்றது. நாராயணம் என்ற சொல்லின் சுருக்கமாகிய நாரணம் அக்குளத்தின் பெயராக அமைந்தது நாங்கூரின் வைணவத் தொடர்பையே குறிக்கின்றது. எனவே தகோபாவில் மணிக்கிராமத்தாரொடு சேனைமுகத்தாரும் இருந்தனர் என்று இக்கல்வெட்டால் அறியப்படும் செய்தியால் இந்நாங்கூரிலிருந்து வீரரும் சென்றனரோ என்று எண்ண இடமுண்டு. அல்லது மணிக்கிராமத்தாரால் நிறுவப்பட்ட சாரிகைக் கோட்டங்களையும் அன்னாரின் குடியிருப்புக்களையும் காத்துவருவதற்காக படையணி ஒன்று அங்கேயே வைக்கப்பட்டிருந்தது என்றும் கொள்ளலாம். மணிக்கிராமத்தார் என்ற குழுவினர் தமிழ் நாட்டுக் கல் வெட்டுக்களிலும் கேரளத்துக் கல் வெட்டுக்களிலும் வேறுசில வணிகர் குழுவினருடன் சேர்த்துப் பேசப்படுவதால் தமிழ் நாட்டு வணிகரே என்று தெரியலாம்.

உ

சுமாத்ரா தீவில் பாரோ பகுதியில் லோபோடோவா என்னும் ஊரில் கிடந்த கல்லில் ஒரு தமிழ்க்கல்வெட்டு காணப்பட்டது. அக்கல் உடைபட்டிருப்பதால் ஒருவாருக உணரப்பட்ட செய்திகளைக் கீழே தருகின்றோம். அக்கல்வெட்டின் காலம் சக வருடம் 1010 அதாவது கி. பி. 1088. 'ஆயிரத்தைஞ்ஞூற்றுவர்' என்றழைக்கப்படும் ஒரு குழுவினரால் அளிக்கப்பட்ட நன்கொடையை அக்கல்வெட்டு குறிப்பிடுவதாகத் தெரிகிறது. பேராசிரியர் நீலகண்ட சாத்திரியாரின் கருத்துப்படி இத்தொடர்க்கு முன் 'திசை' என்ற சொல் அமைந்திருக்க வேண்டும். தமிழ்க்கல் வெட்டுக்களில் இத்தொடர் பெரும்பாலும் 'நானு தேசித்திசை யாயிரத்தைஞ்ஞூற்றுவர்' என வழங்கிவருவது இதனை வலியுறுத்துகின்றது. எனவே வணிக மரபைச்சார்ந்த தமிழர் பலர் அங்கு குடியேறியிருந்தனர் என்றும் அவர்கள் பொருட்டாகவே இக்கல்வெட்டு தமிழில் பொறிக்கப்பட்டது என்றும் அறியக்கிடக்கின்றது.

ங

பர்மாதேசத்தில் பகான் என்ற தலத்தில் புதைபொருள்கட்கிடையில் அகப்பட்ட ஒரு கல்லில் பதின்மூன்றும் நூற்ருண்டின் எழுத்தமைதி கொண்ட கல்வெட்டொன்று காணப்பட்டது. பிழைகளை நீக்கியபின் நின்ற மூலம் வருமாறு:

1 ச்வச்திஸ்ரீ [||] நாச்தா தர்ம்மே ந வசு நிசயே நைவ காமொப
2 போகே யத்யத்பவ்யம் [ப]கவந் பூர்வ்வ கர்ம்மாநுரூபம் ஏதத்
3 ப்ரார்த்த்யம் மம பகுமதம் ஜந்மஜந்மாந்தரேபி தத்பாதாம்போரு
4 கயுககதா நிச்சலா பக்திரச்து || ο || ச்வச்தி ஸ்ரீ திருச்செல்வம் பெருக
5 புக்கமான அரிவத்தனபுரத்து நாணுதேசி விண்ணகராழ்வார் [கொ–
6 யில் திருமண்டபமுஞ் செய்து திருக்கதவு மிட்டு இந்த [மண்டப–
7 த்துக்கு நின்றெரிகைக்கு நிலைவிளக்கொன்று மிட்டென் மலை
8 மண்டலத்து மகொதையர்பட்டணத்து ஈராயிரன் சிறியா [ஞன ஸ்ரீ
9 குலசெகரநம்பியென் [1] இது ஸ்ரீ இதன்மம் மலைமண்டலத் [தான்

கேரளத்தில் கொடுங்களூர் என்று இன்று மருவிநிற்கும் கொடுங்கோளூராகிய மகோதையர் பட்டணத்தைச் சார்ந்த ஈராயிரன் சிறியாணுகிய குலசேகர நம்பியென்பான் நாணுதேசி விண்ணகராழ்வார் கோயிலில் ஒரு மண்டபமும் கட்டி கதவுமிட்டு என்றும் நின்றெரிய ஒரு நிலைவிளக்கும் இட்ட செய்தியை இக்கல்வெட்டு அறிவிக்கின்றது. கல்வெட்டின் தொடக்கத்தில் காணப்படும் வடமொழிப் பாடல் குலசேகராழ்வாரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் முகுந்தமாலை யென்னும் நூலில் காணப்படுகின்றது. குலசேகர நம்பி யென்ற அவன் சிறப்புப் பெயரும் அவன் நிறுவிய மண்டபமும் மலைநாட்டு மன்னனுய் வாழ்ந்த அவ்வாழ்வார்பாலும் நாணுதேசி விண்ணகரத்தில் குடிகொண்ட இவ்வாழ்வார்பாலும் அவன்கொண்ட பற்றினுக்குச் சான்ருகத் திகழ்கின்றன. புக்கமான அரிவத்தன (அரிமர்த்தன) புரம் அந்நாட்டுக் கல்வெட்டுக்களில் புகாம என்றழைக்கப்படும் பகான் என்ற அத்தலமேயாகும்.

ஆகவே மேற்கூறப்பட்ட மூன்று கல்வெட்டுக்களே கீழ்த்திசை நாடுகளில் காணப்பட்டன. இக்கல்வெட்டுக்களால் வாணிபத்தோடு வைணவமும் பரவிவந்த வரலாற்றை ஒருவாருக உணர்ந்துகொள்ளலாம். இந்திய மொழிகளில் வடமொழியிலும் தமிழிலும் தான் கீழ்த்திசை நாடுகளில் கல்வெட்டுக்கள் காணப்பட்டனவே யன்றி ஏனைய எந்த இந்திய மொழியிலும் காணப்படவில்லை என்பது இங்கே நினைவு கூர்தற்குரியது.

[தொடரும்]

# " திறனாய்வு "

**கோவைகிழார்.**

ஆங்கிலம், ப்ஃரஞ்சு, செர்மன் முதலிய மேல்நாட்டு இலக்கியங்களில் பலவகைப்பட்ட ஆராய்ச்சி வகைகள் முதிர்ச்சியடைந்து இருக்கின்றன. பண்டைக் காலத்தில் செய்யுள் வகைகள் மிக முன்னேறி இருந்தாலும் அண்மைக் காலத்தில் உரை நடை வகைகளே முதிர்ச்சியடைந்து வருகின்றன. அவைகளில் ஒன்று இலக்கியத் திறனாய்வு என்பது. இதை ஆங்கிலத்தில் Literary Criticism என்பார்கள். இந்தப் பகுதி தற்காலத்தில் மிகச் சிறந்து விளங்குகின்றது. எந்தப் பல்கலைக்கழகத்திலும் இலக்கியத்தைப்பற்றிக் கற்கும் காலத்தில் திறனாய்வு அதில் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகின்றது. எடுத்துக் காட்டாக செகப்பிரியர் Shakespeare என்ற நாடகக் கவியின் நூல்களைக் கற்கும் காலத்தில் அவரது நூல்களைக் காட்டிலும் அவருடைய நூல்களின் திறனாய்வுக் கட்டுரைகளைப் பற்றியே இக்காலத்து ஆசிரியர்களும் மாணவர்களும் சிந்திக்க முயலுகிறார்கள். அதுபோலவே மில்டன், டெனிசன் முதலிய கவிஞர்கள் எழுதியிருக்கும் காவியங்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்தியாவில் வடமொழி கற்கும் மேனாட்டாசிரியர்களும், தற்காலக் கீழ் நாட்டாசிரியர்களும் இலக்கியத் திறனாய்வு கைக்கொண்டு ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். அந்த வகையில் ஏற்படும் திறனாய்வு தமிழ் இலக்கியத்தில் இருக்கவில்லை யென்று தமிழறிஞர்கள் எண்ணியிருந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு சிறந்த இலக்கியத்தைப்பற்றி ஆராயும்போது பேருரை, சிற்றுரை என்பவைகளை எழுத முயன்றார்களே ஒழிய திறனாய்வு வகையில் ஆராய்ச்சி செய்ய முற்படவில்லை யென்பர். ஆங்கிலம் கற்ற தமிழர்கள் தமிழ் மொழியில் திறனாய்வு என்பது தோன்றவே இல்லை. அது வளரவும் இல்லை யென்று எண்ணி இருந்தார்கள். ஆனால் தொல்காப்பியம், திருக்குறள், சங்கப் பாடல்கள் முதலியவைகளுக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் பரிமேலழகர், முதலியோர் எழுதியுள்ள பேருரைகள் திறனாய்வு கொண்ட உரைகளே யென்று அறியவேண்டும். திறனாய்வு என்ற ஒரு சொல் பயிலப்படவில்லையே ஒழிய, உண்மையில் பல கருத்துக்கள் திறனாய்வு முறைப் படியே கூறப்பட்டன என்று அறியலாம். எடுத்துக்காட்டாக

குடம்பை தனித்து ஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. — குறள். நிலையாமை 338 —

என்ற குறட்கு உரை யெழுதும்போது பரிமேலழகர் " குடம்பை " யென்ற சொற்கு " முட்டை " யென்று பொருள் கூறுகின்றார். உயிரினுடைய நிலையாமையினைக் கூறும்போது "முட்டையிலிருந்து குஞ்சு வெளியில் வருவதுபோல" என்று உவமை கூறுகின்றார். ஆனால் மணக்குடவரோ ,, குடம்பை " யென்ற சொற்கு " கூண்டு " என்று பொருள் கூறுகின்றார். கூண்டை விட்டுப்புள் பறக்கின்றாற்போல உடம்பை விட்டு உயிர் பறந்து போகும் என்று அவர் கூறுகின்றார்.

இவ்விருவரும் மாறுபட்டுப் பொருள் கூறுவதைப் பார்க்குங்கால், பரிமேலழகர் வடநூற் கருத்தையும் மணக்குடவர் தென்னுட்டுக் கருத்தையும் கூறுவதுபோலத் தோன்றுகிறது. மணக்குடவர் கருத்து நாலடியாரில்,

> கேளாதே வந்து கிளைகளாய் யிற்றேன்றி
> வாளாதே போவரான் மாந்தர்கள் — வாளாதே
> சேக்கை மரனெழியச் சேணீங்கு புட்போல
> யாக்கை தமர்க்கொழிய நீத்து.

என்ற வெண்பாவைப் பின்பற்றி வருவதை அறியலாம். இம்முறையில் கருத்துக்களை வெளியிடுதல் திறனய்வின்பாற்பட்டது என்க.

தற்காலத்தில் பண்டைய புலவர்களின் அரிய நூல்களைத் திறனய்வு கொண்டு ஆராய வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றூர்கள். அவ்வித ஆராய்ச்சியும் செய்யப்பட்டு வருகின்றது. அப்படிப்பட்ட ஆராய்ச்சியானது ஆங்கிலக் கலப்பு நமது நாட்டிஓல் ஏற்பட்ட பிறகுதான் இலக்கிய உலகில் செய்யப்பட்டு வருகின்றது என்று மாணவர்கள் எண்ணலாம். ஆனல் நன்ருக ஊன்றிப் பார்க்குங்கால் பல நூற்றூண்டுகளுக்கு முன்பே திறனய்வுகள் நமது நாட்டில் செய்யப்பட்டன என்று அறியவேண்டும். அக்கருத்துக்கு ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளை இங்கே குறிப்பிடுவோம்.

திருக்குறள் அறத்தைப்பற்றிக் கூறுங்கால், "அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானேடு ஊர்ந்தானிடை" யென்ற ஒரு தெளிவான உவமையால் விளக்குகின்றூர். சிவிகையெனும் பல்லக்கு ஏறிப் போகிறவன அதைத் தூக்குகின்றவன நல்லறம் செய்தவன்? என்று கேட்கின் யாது விடையென்று ஆய்ந்து கொள்க' எனப்பொதுவாகக் குறள் ஆசிரியர் படிப்பவர்மீது பளுவை யேற்றிவிட்டார். இதற்கு உரையெழுதிய பரிமேலழகர் வடநூல்களைப்பின்பற்றிப் பல்லக்கு ஏறுகின்றவன் புண்ணியம் செய்தவனகவும், பல்லக்கை சுமக்கின்றவர்கள் பாவம் செய்தவர்களாகவும் இருப்பார்கள் என்று கூறுகின்றூர். அவருடைய உட்கருத்து முற்பிறப்பில் புண்ணியம் செய்தவன் தற்போது பல்லக்கில் ஏறுகின்றுன், பாவம் செய்தவன் பல்லக்கை சுமக்கின்றுன் என்பது ஆகும். பல்லக்கு சுமப்பதனல் அவனது பாவமும் நீங்கும் மென்ற கருத்தும் தொனிக்கின்றது. இந்தப் பொருளை மறுக்கின்றது போல மூன்று நூற்றூண்டுகளுக்கு முன்பிருந்த சிவப்பிரகாச அடிகள் ஒரு வெண்பா கூறியிருக்கின்றூர். நால்வர் நான்மணி மாலையில் சம்பந்தர் தோத்திரமாகக், கூறிய வெண்பாவில்

> அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானே டூர்ந்தான் இடையை—மறுத்தார் சம்
> பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
> றுந்துஞ் சிவிகையினை ஊர்ந்து — பாடல் 33.

என்ற செய்யுளில் பரிமேலழகருடைய கருத்தை சிவப்பிரகாச அடிகள் மறுத்து இருக்கின்றூர். அதற்கு ஆதரவாகச் சேக்கிழார் அருளிய அடியிற்கண்ட பாடலைக் கூறலாம்.

அணிமுத்தின் சிவிகைமுதல் அணிதாங்கிச் சென்றார்கள்
மணிமுத்த மாறுபுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்றும் எடுத்தார்கள் பலசனங்கள் வினைப்பாசஞ்
துணிவித்த உணர்விராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினார்
—தொண்டர்புராணம்—1251.

என்ற சேக்கிழார் கருத்தின்படி சம்பந்தரின்முத்துப்பல்லக்கைத் தூக்கினவர்கள் புண்ணியம் செய்தவர்களாகி வீடுபேறு அடைந்தார்கள் எனக் காண்கின்றோம். அவர்கள் மேலுலகம் சென்றதும்அமரர்களும் கூட அவர்கள் செய்த திருத்தொண்டிற்காகப் பல்லக்கைச் சுமந்துகொண்டு வரவேற்றார்கள். எனவும் கூறலாம். இந்தக் கருத்து சிவப்பிரகாச அடிகள் வரைந்த ஒரு திறனாய்வு அல்லவா?

மற்றொரு எடுத்துக்காட்டும் கூறுவோம் திருக்குறள் மக்களைப் பெறுதல் எனும் அதிகாரத்தில் 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" யென்ற கருத்தைக் கூறுகின்றது. இதற்குப் பொருள் உரைக்கவந்த பரிமேலழகர் அறிவறிந்த மக்கள்" என்ற சொற்றொடருக்குப் பெண்களை யொழித்து ஆண்மக்களைக் கூறும் வகையில் அறிவறிந்த என்ற அடைமொழி கொடுத்து இருக்கின்றார். என்று கூறுகின்றார். இதனால் பரிமேலழகர் கருத்து என்னவெனில் பெண்மக்கட்கு அறிவு இல்லை யென்பது ஆகும். இதனைச் சிவப்பிரகாசர் மறுக்கின்றார். ஆண்மக்களைப்போல பெண்மக்கட்கு எல்லாப் பண்புகளும், உயர்வுகளுமுண்டென்பது வீரசைவர்களின் உயரிய கொள்கை யென்று அறியவேண்டும். ஆகவே பரிமேலழகர் கூற்றைக் கண்ட சிவப்பிரகாசர் தான் வழிபட்ட பெரியநாயகியம்மையின் தோத்திர உருவமாக அடியிற்கண்ட செய்யுளை எழுதி இருக்கின்றார்.

கற்றா ரறிகுவர் மக்கடம்
பேறெனக் கட்டுரைத்த
சொற்றா னொருபெண்ணொழித்ததென்
பாரொடு தொல்லுலகி
னற்றான் மகற்பெறு கென்றாசி
சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரை யன்குன்றை
வாழும் பெரியம்மையே —பாட்டு—12.

தம்முடைய அன்னையாகிய பெரியநாயகியம்மை பெண்பாலாகையால் அறிவில்லாள் என்று கூற எவருடைய நாவும் கூறக் கூசும் அல்லவா? அந்தக் கருத்தை முன்னிலைப்படுத்திப் பொங்கி வரும் உணர்ச்சியில் அடிகள் உரையாசிரியரைக் கடிந்து கூறுகின்றார். இதுவும் திறனாய்வென்று கூறலாம். இதைப்போலப் பல எடுத்துக்காட்டுகள், இடைக்காலக் கவிஞர்களின் செய்யுட்களில் காணலாம். திறனாய்வு என்ற சொல் புதியதாக உளதேயன்றி அந்த ஆராய்ச்சிப் பகுதி எக்காலத்திலும் தமிழ் மொழியில் இருந்தது என்று அறிய வேண்டும்.

# பிள்ளை.

ச. பாலசுந்தரம்.

துள்ளித் தவழ்கின்ற பிள்ளை—உளத்
துன்பத்தைப் போக்கிடும் கிள்ளை. —துள்ளி

## கண்ணிகள்.

1 தொட்டாற் சுவையேறும் கற்கண்டுக் கட்டி
சுடரின்றி ஒளிவீசும் மாணிக்கச் சுட்டி
கொட்டும் நீரில்லாமற் குளிர்செய்யும் சோலை
கொளைநரம் பில்லாமல் மகிழ்செய்யும் வீணை —துள்ளி

2 சிறகு முளைக்காமற் றிரிகின்ற சிட்டு
சிந்தை யினிக்கத் திரண்டதேன் சொட்டு
துறவிக்கும் வேட்கையைத் தருமின்பக்கட்டு
துயரம் விரிக்காத தூமலர் மொட்டு —துள்ளி

3 தேடிக் கடிமலர் சேராத வண்டு
செங்கரும் பில்லாமல் செய்தகற் கண்டு
வாடிக் குவியாத வண்ணப்பூஞ் சோலை
மழலை மொழிச்சாறு வற்றாத ஆலை —துள்ளி

4 வளிகொண்டு வீசாமற் குளிர்செய்யுந் தென்றல்
மலர்கொண்டு பூவாமல் அலர்கின்ற மன்றல்
உளிகொண்டு செய்யாத உயிருள்ள சிற்பம்
உலகப் பொருள்யாவும் இதைநோக்க அற்பம் —துள்ளி

5 தாறின்றித் தீங்கனி தந்திடும் வாழை
தட்டாத இன்பங்கள் தாங்கிடும் பேழை
ஊறின்றிச் செய்த இலக்கிய ஏடு
உண்மை யழகொளிர் மாமலர்க் காடு —துள்ளி

6 வாயிற் சுவைக்காத வண்ணக் கரும்பு
வாடாத மணம் நாறும் முல்லை யரும்பு
வேயிற் பிறக்காமல் விளைந்தநல் முத்து
வேளைக்குவேளை விருப்பேறும் சொத்து —துள்ளி

# இளங்கோவின் கோவலன் *

கு. சிவமணி, எம். ஏ., பி. டி.
அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமரபாளையம்.

ஏறத்தாழ ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன், சேர நாட்டிலிருந்து ஓர் இன்னிசை எழுந்தது. அவ்விசையின் சீர், கேளாத செவி இல்லை; படித்துப் பற்ருத மனமில்லை; போற்றி வாழ்த்தாத நா இல்லை. நயமுணர்ந்த புலவர் இயற்றமிழ் என்றனர்; பாடிமகிழ்ந்த இசைஞர் இசைத் தமிழ் என்றனர்; ஆடிக் களித்த கூத்தர் நாடகத் தமிழ் என்றனர்; முத்தமிழும் அமைந்த முழு முதற் காப்பியம் என்று பற்பலரும் போற்றினர். அவ்விசையில் ஒன்றிய உரிமைக் கவிஞர் பாரதியாரும்,

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்"

என்று வாயாரப் பாடி மகிழ்ந்தார்.

சிலப்பதிகாரக் கதையிலே புதுமை, கருத்திலே புரட்சி, நடையிலே எளிமை, மொழியிலே இனிமை, சமயத்திலே பொதுமை ஆய பலவும் நமது நெஞ்சை அள்ளுகின்றன. சிலப்பதிகாரக் கதை உறுப்பினர் தமிழ் மண்ணிலே பிறந்தனர்; வாழ்ந்தனர்; மறைந்தனர். ஆகவே பழந்தமிழ்ச் சமுதாயத்தில் நிகழ்ந்த ஒரு வரலாற்றை நற்றமிழ்ச் சிறப்பும் பொறப்பமை புலமையும் தோன்றக் காப்பியமாக யாத்தார் இளங்கோ.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்ருதல்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டல்

ஆகிய இம்மூன்றும் சிலம்புணர்த்தும் செந்நெறிகளாகும். சிலப் பதிகாரப் பெருமக்கள் பலர் இருப்பினும் நாவலர் கண்ட நாயகனை கோவலனைப் பற்றி ஆராய்வதே இப்பேச்சின் குறிக்கோளாகும்.

சோழ வளநாட்டின் தலைநகரான பூம்புகாரில் இசை விளங்கு பெருங்குடியில் மாசாத்துவான் மகனைக் கோவலன் பிறந்தான். அவனது புகழால் பூமி சிறுத்தது; அவனது அழகு நங்கையரைக் கவர்ந்தது; முருகன் போலும் பேரழகன் என்று பாராட்டச் செய்தது.

"மண்தேய்த்த புகழினன் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டிக்,
கண்டு ஏத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக்
காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்"

---

* திருச்சி வானொலி நிலையத்தாரின் இசைவு பெற்றது

மாநாய்கன் குலக் கொம்பராகப் பிறந்தவள் கண்ணகி. அவள் திருமகள் போலப் பேரழகும், வடமீன்போல நிலைபெறும் கற்பும், பெண்களே வணங்கிப் புகழும் பெருங் குணமும் கொண்டு விளங்கினாள். கோவலன் கண்ணகி இருவருக்கும் அவர்தம் பெற்றோர்கள் மாநகர் மகிழ மணம் செய்வித்தனர்.

கோவலன் கண்ணகி இருவரும் தனியே இல்லறம் நடத்தினர், அதன் பண்பாகிய அன்பையும் பயனாகிய அறத்தையும் கடைப்பிடித்தனர். கண்ணகியின் காதற் கொழுநனாகக் கோவலன் திகழ்ந்தான். அவள்பால் தீராக்காதல் கொண்டு'

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும் பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ?
தாழிருங் கூந்தல் தையால்? நின்னை .........

என்று கலைநலம் பொலியும் உலவாக் கட்டுரை பல பாராட்டினான். இருவரும் இணைந்து இல்லறம் நடத்தியது, ஞாயிறும் திங்களும் ஒன்றிய காட்சிபோல் இருந்தது.

ஆடல் பாடல் அழகு மூன்றிலும் தன்னை ஒப்பாரும் மிக்காரும் இலராய்; அரசன் முன்னர் நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டியதால், தலைக்கோல் பட்டமும் ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பொன்னையும் அழகிய பச்சைமாலை ஒன்றையும் பரிசாகப் பெற்றுப் புகார் நகரே போற்றப் பெருவாழ்வு வாழ்ந்தாள் மாதவி. அம்மாலை வாங்குவோர் மாதவிக்கு ஏற்றவர்' என்று அவள் தாய் கணிகை சித்திராபதி ஏற்பாடு செய்தாள். நகரத்து இளைஞர் திரிகின்ற பெருந் தெருவிலே திரிந்த கோவலன் அம்மாலையை ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து வாங்கி மாதவியின் மனைக்குச் சென்றான். குற்றமற்ற தன் மனைவியின் நினைவே கொள்ளாதவனானான். மாதவியின் கலையிலும் அழகிலும்

" மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்.

விருப்பும் வெறுப்பும் மாறி மாறித் தோன்ற உணர்ச்சி வயப்பட்ட கோவலன் வாழ்ந்தான். மாதவியோடு இந்திர விழாவிலே கலந்து கொண்டான். சிரித்துப் பேசும் கூட்டத்தினரின் நன் மொழிகளைக் கோவலன் கேட்டு மகிழ்ந்தான். குரல் வாய்ப் பாணரோடும் நகரப் பரத்தரோடும் திரிந்தான். மாதவியின் ஆடலிலும் பாடலிலும் ஊடலிலும் கூடலிலும் கோவலன் மனத்தைப் பறிகொடுத்தான்.

கண்டோரெல்லாம் வியக்கும்படி அவளோடு காதல் வாழ்வு வாழ்ந் தான். வந்தோர்க்கெல்லாம் பொருளை வாரியிறைத்து 'மழைபோலுங் கொடுக்கும் கையன்' எனப் புகழ் பெற்ருன்.

கோவலனுக்கு மாதவிபால் மணிமேகலை பிறந்தாள். அணி மேகலையார், ஆயிரவர் கூடி மங்கல மடந்தை மாதவி மகட்கு மணிமேகலை என்று பெயரிட்ட நாளில் கோவலன் செம்பொன்மாரி செங்கையில் பொழிந்து தானம் செய்தான். தானம் பெறுவதற்காகத் தண்டூன்றிவந்த தளர்நடை முதுமறையோனை மதங்கொண்டு பாய்ந்துவந்த யானை பற்றியது. அம்முதியோனுக்காக இரங்கி விரைந்து யானையின் கொம்பிடையே தான் அகப்பட்டு அவனைக் காப்பாற்றினன். அம்மதயானையின் பிடர்மேல் ஏறி அதன் செருக்கினை அடக்கினன்; மறவனானன்.

"பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களிறு அடக்கிய கருணை மறவ!

என்று போற்றப் பெற்ருன்.

தான் வளர்த்ததும் தன்பிள்ளையைப் பாம்பிடமிருந்து காப் பாற்றியதுமான கீரிப்பிள்ளையை ஆராயாது கொன்ருள் பார்ப்பனி ஒருத்தி. அக்குற்றத்திற்காகக் கணவனுல் துறக்கப்பட்டாள். அவளது பாவத்தைத் தானத்தால் போக்கிக் கணவனை அவளுடன் சேர்த்து அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய செல்வத்தைக் கோவலன் கொடுத்தான். அதனுல்,

"ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ!

என்னும் புகழ் மொழிக்குக் கோவலன் உரியவனானன்.

பத்தினி ஒருத்தி பெரும்பழி எய்துமாறு பொய்ச்சான்று சொல்லி உயிர்த்தண்டனை பெற்ருன் ஒருவன். அவன் தாயின் துயரம் நீங்கு மாறு அவனுடைய சுற்றத்தாருக்கும் குடும்பத்தினருக்கும் பெரும் பொருள் ஈந்து கோவலன் அவர்களைப் பல்லாண்டு புரந்தான்.

" அவன்
சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி அறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்!

என்னும் பாராட்டைக் கோவலன் பெற்ருன்.

காதல் வாழ்விலும் கலைவாழ்விலும் வருநிதி பிறர்க்காக்கும் அற வாழ்விலும் காலங்கழித்த கோவலனின் வாழ்விலே ஊழ்வினை, கானல்வரிப்பாட்டாக உருவெடுத்தது. கோவலன் மாதவியைப் பிரிந் தான்; மாதவியின் ஓலைபெற்று வந்த அவள் தோழி வசந்தமாலையிடம்

'நடிப்பது அவளுக்கு இயல்பு' என்று மாதவியின் உண்மை அன்பை இழிந்துரைத்தான். கண்ணகியைக்கண்டு அவளது துயருக்காக வருந்தினன். வஞ்சமும் பொய்யும் கொண்ட மாதவியுடன் வாழ்ந்தமையால் வழி வழி வந்த குன்று போன்ற செல்வம் தொலைந்தது. இல்லாமை எனக்கு நாணத்தைத் தருகின்றது என்று மனம் கலங்கினன்.

"சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக்
குலம்தரும் வான்பொருள் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத்தரும் எனக்கு"

என்று கூறிய கோவலனிடம் காற்சிலம்பைக் கொடுத்தாள் கண்ணகி. 'சிலம்பை முதலாகக்கொண்டு, இழந்த பொருள் ஈட்ட, மாடமதுரை நோக்கி, ஏடலர் கோதாய் எழுக' எனக் கண்ணகியை நோக்கி வருவதை ஆராயாது கூறினன் கோவலன். போற்ரு ஒழுக்கம் புரிந்த அவனும் மாற்ரு வாழ்க்கையுடைய கண்ணகியும் இரவோடு இரவாக ஒருவரும் அறியாதவாறு மதுரை நோக்கிப் புறப்பட்டனர்.

கவுந்தி என்னும் துறவியின் துணையுடன் மதுரை செல்லும் வழியில் பரத்தை ஒருத்தியும் வெற்றுரையாளனும் கண்ணகி கோவலன் இருவரையும் பார்த்துத் தகாதசொல் கூறினர். அதற்காகச் சினந்த கவுந்தியடிகளின் தவவலியால் இருவரும் முள்ளுடைக் காட்டில் முதுநரியாகி ஊளையிட்டனர். அதைக்கண்ட கோவலன் கண்ணகி இருவரும் கவுந்தி யடிகளிடம் அவ்விழிமக்களுக்காக உய்திக்காலம் வேண்டினர்.

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை என்று அறிதல் வேண்டும்"

என்னும் உரை போற்றற்குரியது. மதுரையின் இடைவழியில் மாதவியால் திருமுகம் பெற்ற கோசிகனைக் கோவலன் கண்டு அவ்வோலையைப் படித்துப் பின் மாதவி தீதற்றவள் எல்லாம் தன்தீதே! என்றுரைத்தான். அவ்வோலையைத் தன் பெற்ருேர்க்கும் காட்டச் சொல்லிக் கோசிகனை அனுப்பினன். அங்கிருந்த பாணரோடு பாடி மகிழ்ந்தான். குமரியாடி மீளும் மாடல மறையோனைக் கோவலன் வணங்க அவன் இப்பிறவியில் யானறிய நீ செய்தவை யெல்லாம் நற்செயல்களே! முன்வினைப் பயனல் இவ்வாறு துயருறுகின்ருயோ? என்று கூறி, மேல் நிகழ்வன நிறைக்கனவில் கண்டுணர்ந்து கலங்கிய கோவலனுக்கு ஆறுதலும் உரைத்தான்.

இடைக்குல மடந்தையாகிய மாதரியிடம் கவுந்தியடிகள் கண்ணகியை அடைக்கலமாகத் தந்தார். கண்ணகி மாதரியின் தனி மனையில் கோவலனுக்காகத் தாளுக்கிய உணவைப் படைத்து மகிழ்ந்தாள். கோவலன் அவளது துயர்கண்டு அருகணைத்து,

"பொன்னே! கொடியே! புனை பூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!
சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்
மாறிவருவன் மயங்காது ஒழிக"

என்று கூறிக் கண்ணில் நீருடனும், கையில் ஒரு சிலம்புடனும் எதிர்ந்த தீநிமித்தத்தைக் கண்டும் காணாதவனாய் மதுரை நகருள் சென்றான்; நூற்றுவர் பின்தொடர வந்த பொற்கொல்லனிடம் சிலம்பைக் காட்டினான் அரசமாதேவியின் சிலம்பைத் திருடிய அப் பொற்கொல்லன் அரசிக்குரிய சிலம்பிது அரசனிடம் காட்டி வருவேன் என்று கூறிக் கோவலனை அருகிருந்த குடிலில் இருக்கச் செய்தான். பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சென்று அரசியின் சிலம்பு திருடிய கள்வன் என் மனையகத்துள்ளான் என்று பொய் கூறினான். அரசனிடம் கொலை ஆணை பெற்றுக் காவலருடன் வந்த பொற்கொல்லன், கோவலனைக் கள்வன் எனச் சுட்டினான். இலக்கணமுறையில் இருக்கும் இவன் கள்வன் அல்லன் என்ற காவலர்க்கு "இவன் கள்வனே" என்று வற்புறுத்திச் சொன்னான். அப்போது,

"கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன் விலங்கூடு அறுத்தது"

காவலனின் பண்டைய ஊழ்வினை உருவெடுக்க, மண்ணக மடந்தை வான்துயர்கூர காவலனின் செங்கோல் வளைய அவன் வீழ்ந்தான். கொலையுண்ட கோவலனை அழுது புலம்பும் கண்ணகி அணைத்தபோது "முழுமதிபோலும் நின்முகம் கன்றியதே" என்று கூறி அவளது கண்ணீரைத் துடைத்தான் மையெழுது மலர்க் கண்ணாய் நீ இங்கிருக்க என்று கூறி வானவனானான்.

கோவலன் இறந்ததற்கு காரணம் அவனுடைய முன் வினையே யாகும். சிங்கபுரத்தரசனும் கபிலபுரத்தரசனும் தம்முள் மாறுபட்டுப் போர்க்கெழுந்தனர். கபிலபுரத்து வாணிகன் சங்கமன் பொருள் மேல் ஆசை கொண்டு சிங்கபுரத்துள் புகுந்து பொருள்களை விற்றுக் கொண்டிருந்தான். அரசில் பணிபுரிந்த பரதன் என்போன் சங்கமனை ஒற்றன் எனப் பிடித்து அரசனுக்குக் காட்டி அவனைக் கொன்று விட்டான். சங்கமனின் மனைவி நீலி ஆற்றாது புலம்பி எமக்கு இக் கொடுமை செய்தோர் இதே போன்று பெருந்துயர் எய்துக' எனச் சாபமிட்டு மலையிலிருந்து வீழ்ந்து இறந்தாள். முன்பிறப்புப் பரதனே இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்தான். ஆகவே ஊழ் வினையே இத்துன்பத்திற்குக் காரணம் என மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் கூறிற்று.

**கோவலன் இயல்பு :**

திருவள்ளுவர் உலக இயற்கையை இருவகையாகப் பகுத்துள்ளார். செல்வராக இருத்தல் ஒன்று. அறிவினராக வாழ்தல் மற்ருென்று. செல்வரெல்லாம் அறிவுடையராக வாழ்தல் வேண்டும் என்று வரையறையில்லை.

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு"

என்பது பொய்யாமொழி. கோவலனின் வாழ்க்கையையும் இரு வகையாகப் பிரிக்கலாம். அவன் செல்வனுகத் திரிந்தநிலை ஒன்று. அறிவினுக வாழ முயன்றநிலை மற்ருென்று. செல்வனுக அவன் வாழ்ந்தபோது அறிவு விளக்கம்பெருது உணர்ச்சிவழி வாழ்ந்தான். அவன் அறிவு வாழ்க்கை வாழ முயன்றபோது அவனிடம் செல்வம் இல்லை.

அறிவு, உணர்வு, செயல் ஆகிய முக்கூறுகளும் மனத்தை உருவாக்குகின்றன. மனம் உடையவனே மனிதன் எனப்படுவான். வாழ்வில் அறிவுக்கூறு மிகுந்தால் ஆராய்ச்சியெழும்; உணர்ச்சிக் கூறு நிறைந்தால் மயக்கம் நிகழும். செயல்கூறுமட்டுமே பெறுகினுல் இயந்திரமாக வாழ்வு அமையும். இம்மூன்றும் உரியவழி ஒன்றிக் கலந்த மனமே உயர்ந்த மனமாகும். ஒன்று மற்ற இரண்டையும் அடிமை கொண்டால் அவ்வாழ்வு நிறைவாழ்வாகாது. இதற்கு விளக்கமாகக் கோவலனது வாழ்வு அமைந்துள்ளது.

அறிவிற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர்,

"சென்ற விடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என வரையறுத்துள்ளார். இதற்கு மாருகக் கோவலன் சென்ற விடத்தால் அறிவைச் செலவிட்டதால் அவன் அறியாதே தவறிழைத்தான். மாதவிபால் மனம் நெகிழ்ந்தான். கண்ணகியை மறந்தான்; வாணிகம் செய்து பொருளீட்டாமல் இருந்தவற்றை வாரி இறைத்து வறியனுஞன். இத் தவறுகளுக்காக அவனை அடியோடு வெறுத்தல் என்பது பொருந்தாது. அவன் செய்த முதல் தவற்றிற்குக் காரணம் அக்காலச் சமுதாய அமைப்பு எனக்கொள்ள வேண்டும். ஒருத்திக்கு ஒருவன் என்ற வரையறை உண்டு. ஆனல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடு இல்லை என்றே சொல்லலாம். கலையுணர்வு கொண்ட கோவலன் கலையரசி மாதவியை நாடியதைப் பெருந்தவருகக் கொள்வது முறையன்று.

இரண்டாவதாக; கண்ணகியைச் சில ஆண்டுகள் மறந்தானே கண்ணைத் துறக்கவில்லை. மாதவியிடமிருந்து பிரிந்ததும் அவன் மனையினகியிடமே சேர்ந்தான். மதுரை செல்லும் வழியில் கண்ணகிதாள். அவன் கொண்ட பரிவு அவனுடைய தீராக்காதலும் உலவாக்

கட்டுரையும் தீர்ந்துவிடவில்லை என்பதற்குச் சான்றாக அமைகின்றது. கவுந்தியடிகள் கோவலனைக் 'கண்ணகியின்' 'காதற் கேள்வன்' என்கின்றார்.

மூன்றாவதாக உணர்வு மயங்கியவழி வாணிகம் பேணாது பொருளை வாரி இறைத்த கோவலன், அறிவு தலைதூக்கியபோது மீண்டும் வாணிகத்தை எண்ணி மதுரை நோக்கிச் சென்றான். பெரும்பாலும் இல்லாதார்க்குக்கொடுத்தே அவன் இல்லாதவனானான்.

"ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து"

என்று ஒப்புரவினால் வரும் கேட்டின் சிறப்பைத் திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

கோவலன் வாழ்வில் முன்னும் பின்னும் நிகழ்ந்த காட்சிகளை இயைத்துப் பார்க்கும்போது நமக்கு அவன்பால் இரக்கமே எழுகின்றது.

குமரவேள் போல் பேரழகுகொண்டு நங்கையரால் வியந்து பேசப்பெற்ற கோவலன் மதுரை வழியில் கோசிகனால் அடையாளம் கண்டுகொள்ள இயலாதவாறு உருமாறியிருந்தான். ஆடல் மகள் என மாதவியை வெறுத்துரைத்தவன் பின் தானே தவறுடையன் என உணர்ந்து கொண்டான்; வரையாது கொடுத்து வள்ளலாக வாழ்ந்தவன் வறுமையால் நாணித் துயர்கொண்டான்; ஆராயாது கண்ணகியை எழுக எனச் சொல்லியவன் மதுரையில் அவள் துயர் கண்டுஏன் எழுந்தாய் எனக்கண்ணீர் வடித்தான். தென்றல் போலத் திரிந்தவன் நெறியின் நீங்கிய நீர்மையன் எனக் கவுந்தியடிகளிடம் தன் தவறுணர்ந்து கூறினான்; நகர நம்பியரோடும் பரத்தையரோடும் திரிந்தவன் மாதவி கண்ணகி இருவராலும் அடிகள் என்று தூய்மையாக அழைக்கும் பேறு பெற்றான். எல்லாநிலையிலும் கோவலன் இசையைப் போற்றினான். இன்ப வாழ்விலும் இசைத்து மகிழ்ந்தான். துன்ப நிலையிலும் இசையில் அமைதி கண்டான். இதற்குக் காரணம் அவனது உள்ளம் கலைபால் கொண்ட ஈடுபாடேயாகும்.

கோவலன் கொலையுண்டான். நெடுஞ்செழியன் அவன் மனைவி கோப்பெருந்தேவி, கண்ணகி, கண்ணகியின் தாய், மாமி, மாதரி, கவுந்தியடிகள் ஆகிய எழுவர் உயிர்நீத்தனர். மாநாய்கன், மாசாத்துவான், மாதவி, மணிமேகலை ஆகிய நால்வரும் புத்தரின் பொன்னடி நண்ணினர். கோவலன் வாழ்வோடு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பதினொருவர் வாழ்க்கைப் பின்னிக் கிடக்கக் காண்கிறோம்.

கோவலன் நிறையும் குறையும் ஆய்வார் அவனது நிறையே பெரிதும் உணர்வர், கோவலன் அழகன்; கலைஞன்; கண்ணகியின் காதற்கொழுநன், மாதவியின் கண்மணி அனையான்; வான வண்கையன்; கடக்களிறடக்கிய கருணைமறவன்; நல்லறம் படுத்த செல்லாச் செல்வன்; பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்; குன்றாக்

சென்ற இதழின் தொடர்ச்சி

## சொற்பொருட்டிறனாய்வு :

# " விழுப்பம் "

(புலவர் நடேச-நாராயணன்)

கல்லாதவனை 'விலங்கொடு' (410) என்றகுறளில் விலங்குக்கு ஒப்பாகக் கூறுவதால், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லாரும் (410) ஈண்டு விலங்கே எனக்கொள்ளல் பொருந்தும். எனவே ஒருவன் கற்றவனாக இருந்தால் மட்டும் மனிதனாகிவிடமுடியாது. கற்று ஒழுகுகின்றவனாகவும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அவன் மனிதனாகக் கருதப்படுவான்.

'கல்லாதவன் விலங்கை ஒப்பான்' என்று வள்ளுவர் கூறுகிறார். (410) அங்குக் கல்லாதவன் என்று குறித்தது கல்விமட்டும் கல்லாதவனை யன்று, ஒழுக்கம் கல்லாதவனைத்தான். ஒழுக்கம் தவறிய நிலையில்தான் ஒருவன் விலங்காவன். கல்வி மட்டும் இல்லாததனாலேயே ஒருவன் விலங்காகிவிட்டான். ஏனெனில் வள்ளுவரே மற்றோரிடத்தில் 'கற்றிலனாயினும் கேட்க' (414) என்கிறார். ஈண்டுக்கல்லாவிடினும் அவன் மனிதனே என்று புலப்படுத்துகின்றார். கேள்வி என ஓர் அதிகாரமே இடம்பெறச் செய்துள்ளார். கேட்டல் எதற்கு என்றால் ஒழுக்கம் முதலியன பெறுவதற்கேயாம்.

எனவே 'விலங்கொடு' (410) என்ற குறளில் வரும் கற்றார் எனும் சொல் வெறும் கல்வி கற்றவரை மட்டுமன்றிக் கற்று ஒழுக்கம் அமையப் பெற்றவர்களையே குறிக்கும். இதனால் ஒருவனை மனிதனாக்குவது ஒழுக்கமே என்பது பெறப்படும்.

இதுகாறும் கூறியவற்றான் 131-ஆம் குறளில் வரும் 'விழுப்பம்' என்ற சொற்கு, 'மனிதனாகிய-மனிதத்தன்மையாகிய-சிறப்பு' என்ற பொருளே பல்லாற்றானும் சால்புடைத்து என்பது விளங்கியவாறு காண்க.

---

235-ஆம் பக்கத்தொடர்ச்சி.

கொள்கையன்; இறுதியில் இலக்கண முறையில் இருந்தோன் பொய்தீர்க்காட்சிப் புரையோன்; இவற்றிற்காக நாம் கோவலனைப் போற்றுவோமாக.

கோவலனது வாழ்வின் முற்பகுதியில் கலையும் உணர்வும் கலந்தன. பிற்பகுதியில் அறிவும் தெளிவும் முகிழ்த்தன. ஆனால் இரு பகுதிகளிலும் ஊழ்வினையே தலைநின்றது. ஊழின் கைப்பாவையாகக் கோவலன் ஆனான். அவனால் வேறு என்ன செய்ய இயலும்? எனெனில்,

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் "

என்பது தெய்வப்புலவரின் திருமொழியாகும்.

# அமெரிக்க இந்தியர்.

## அமெரிக்கர் நாகரிகம்.

த. இராமநாத பிள்ளை, B. A. London.
யாழ்ப்பாணம், பருத்தித்துறை.

அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து இந்தியாவை அடையலாம் என எண்ணிய ஐபீரிய மாலுமி கொலம்பஸ் வட அமெரிக்காக் கரையிலுள்ள பாகமாஸ் என்னும் தீவுகளில் கி. பி. 1949-ல் இறங்கினன் என்பதை அறிவேம். 16-ம் நூற்ருண்டில் நாடுகாணிய சென்ற கடலோடிகள் மெச்சிக்கோவிலும் மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் செல்வமுற்ற மக்கள் இருந்தனர் என மொழிந்தனர். கோட்டீஸ் என்னும் ஐபீரியன் மெச்சிக்கோவிலும் பிசாரோ என்னும் ஐபீரியன் பீருதேயத்திலும் சூறையாடினர். இங்ஙனம் ஸ்பானியர் (ஐபீரியர்) அமெரிக்க நாடுகளில் தம் ஆட்சியை நாட்டினர். மேனுடுகளிலிருந்தும் கீழைத் தேயங்களிலிருந்தும் மக்கட் கூட்டங்கள் பண்டு சமுத்திரங்களைக் கடந்து செல்லுதல் இயலாதென எண்ணிய மேனுட்டாசிரியர்கள் அமெரிக்கர் யாரிடம் நாகரிகம் பயின்றனர் எனக் கூறவியலாது மயங்கினுர்கள். 19-ம் நூற்ருண்டில் இருந்த வரலாற்ருசிரியர்கள் அமெரிக்க நாகரிகமும் கீழைத்தேய நாகரிகமும் ஒப்புடையவையாக இருத்தற்கு நியாயம் கூறவியலாதிருந்தார்கள். அமெரிக்காவை ஸ்பானியர் கைப்பற்றிய வரலாற்றை எழுதிய பிறஸ்கற் முதலியோர் அமெரிக்கர் பிற தேயத்தவரோடு யாதொரு தொடர்புமின்றித் தனிக் கூட்டத்தினராகவே இருந்து நாகரிகநிலை அடைந்தனர்என எண்ணினர். இக்கொள்கை பிழையானதென இருபதாம்நூற்ருண்டு ஆராய்ச்சியாளர் எலியற்சிமித் என்பவர் காட்டுகின்றனர். 'உலகவரலாற்றின்' முன்னுரையில் விரித்துக் கூறினும்.

பண்டைப்பொருள் ஆய்வோரும் தொல்லுயிர் நூலோரும் வரலாற்று நூலோரும் கீழைத் தேயத்து நாகரிகம் அமெரிக்க நாடுகளில் செறிந்ததென்பர். அமெரிக்க ஐக்கிய தேயத்தவராகிய மைல்ஸ் போயின் டெச்ரர் என்பவர் தாம் எழுதிய 'ஆயிர் இங்கர்' என்னும் நூலில் ஆசிரியர் இந்தியாவிலிருந்து பீருதேயத்துக்குத் தம் நாகரிகத்தைக் கொண்டு சென்றனர் என்பர். மெச்சிக்க அரசாங்கத்தினர் வெளியிட்ட மெச்சிக வரலாற்ருல் இந்தியரே மெச்சிக்கோவில் குடியேறினர் எனத்தெரிகிறது. ஈண்டு மெச்சிக்கர் தம் ஓடங்களைக் கட்டுமரம் என்னும் தமிழ் மொழியால் அழைத்தனர் என்பதை அறிக. மெச்சிக் நகரத்துப் பண்டைப்பொருட்காட்சிசாலையின் மேற்பார்வையாளராகிய இராமன் மீனு என்பவர் மத்திய அமெரிக்காவில் வசித்த மாயர் என்னும் பழங்குடிகள் இந்தியரோ எனத்துணிகின்றனர். மேனுட்டாசிரியர்கள் செய்த ஆராய்ச்சிகளைக்

கற்றதன் பயனாகவும் பண்டைப்பொருட்களைத் தாமேபல ஆண்டுகள் ஆராய்ந்ததன் பயனாகவும் சாமன்லால் என்னும் இந்தியவாசிரியர் 'இந்து அமெரிக்கா' என ஒரு நூல் ஆங்கிலத்தில் எழுதினர். அந்நூலின் முடிவுகளை ஆராய்வோம்.

## பழங்கதைகள்.

மெச்சிக்கோவுக்கு அண்மையிலுள்ள பனுக்கோ (பனந்தலா) என்னும் ஊரில் கீழைத்தேயத்தோர் வந்திறங்கினர் என மாயர் பாடிய கர்ணபரம்பரைப் பாடலால் தெரிகிறது. மெக்கன்சி எழுதிய 'இந்திய நாகரும் அமெரிக்க நாகரும்' என்னும் நூலில் இந்திய நாகரே அமெரிக்காவில் குடியேறினர் என்பர். தாடிவளர்த்த பெரியோர் பலகலைகளைக் கற்பித்துத்தம் பாதங்களை அடையாளமாக விட்டுச் சென்றனர் எனப் பீருதேயத்துப் பழங்கதைகள் கூறுநிற்கும்.

## அமெரிக்கர் பழக்க வழக்கம்.

அமெரிக்க நாடுகளைக் கைப்பற்றி ஆண்ட ஸ்பானியர் பொன் வெள்ளி செம்பு என்பவற்றால் கலன்களும் கருவிகளும் அமெரிக்கர் செய்தனர் எனக் கிளந்தனர். பண்டைய அமெரிக்கர் ஆரியரை உருவால் ஒத்தவர் எனவும் கருவிழியும் கருமயிரும் உடையவரெனவும் வருணிக்கப் பட்டனர். இப்போதுள்ள பீருதேயத்தோரும் மத்திய அமெரிக்கரும் மெச்சிக்கரும் ஸ்பானியரோடு நானூறு ஆண்டுகள் கலந்திருந்த போதிலும் இந்தியரோடு மிக ஒப்புடையவரென்ப. அமெரிக்க நாடுகளில் பண்டு, மாடு குதிரை யானை என்பன கிடையா எனவும் தென்னமரிக்காவில் அல்பக்கா என்னும் ஆடும் லாமா என்னும் மிருகமும் உண்டெனவும், பொன் வெள்ளிச் சுரங்கங்கள் மிக உண்டெனவும் பூமிசாஸ்திர நூலார் கூறுவர். இதுநிற்க மெச்சிக்கோவில் இருந்த ஆஸ்திகரும் பீருவில் இருந்த இங்கரும் காதுத்துவாரங்களில் காதணிகள் அணிந்தனர் எனவும் பருத்திநூற் புடைவைகள் நெய்தனர் எனவும் ஆராய்ச்சியாளர் கூறுப. ஆடவர் சிலர்தம் போர்வைகளை தோளிலிருந்து தொங்கவிட்டனர்; சிலர் காழம் இட்டனர்; மகளிர் இறவுக்கை அணிந்தனர் என்ப. இங்கர் தும்பினாற்செய்த செருப்புக்களை உபயோகித்தனராம். பொது மக்கள் கோவணம் அணிதல் உண்டு. மன்னர் தலைப்பாகை அணிந்து பல்லக்கில் சென்றனர். மந்திசுமா என்னும் மெச்சிக்கர் மன்னன் கோட்டீஸ் என்பானைத் தரிசிக்கச் சென்ற பொழுது ஆலவட்டம் பிடிக்கப்பட்டதாம். மகளிர் ஒருவகைச் சுண்ணம் இட்டனர். பெற்றோர் தம்மக்களுக்கு மணம்பேசி வைத்தனர். மணமகன் மணமகளுக்குக் குங்குமம் இட்டுத்தன் குலத்துள் சேர்த்துக்கொள்வான். மணமக்கள் அருந்ததியைத் தொழுதல் வழக்கம். பழைய அமெரிக்கர்

மாமிசம் உண்ணவில்லை; மதுக்குடிக்கவில்லை; மான்வேட்டையாட வில்லை, சோளன்மா பயறு கிழங்கு முதலியவையே அவர்கள் உணவாகும். கைகழுவி உண்ணுதல் அவர்கள் வழக்கம். வெற்றிலை சப்புதற்குப் பதிலாக அவர்கள் கொக்கோ சுண்ணும்புடன் சப்பினர் சிலர் புகையிலைச் சுண்ணும்புடன் சப்பினர்.

அமெரிக்கர் தம் பிரேதங்களைத் தகனம் செய்தனர். தகனஞ் செய்யுமுன் இந்துக்கள் வாய்க்கரிசி போடுதல் போல் அவர்கள் உணவுப்பண்டங்களை இறந்தோர் வாயில் இட்டனர். உடல் எரிந்த பின் சாம்பரை எடுத்துக் கலங்களில் இட்டுவைத்தனர். இந்தியரைப் போல் சாம்பரோடு இரத்தினக்கல்லும் இட்டு வைத்திருந்தனர். இங்கர் மன்னனை ஸ்பானியர் கொன்றனராக, அவன் மனைவியர் நால்வர் தீப்பாய்ந்தனர். பொதுமக்கள் மனைவியர் பலரை மணஞ் செய்யவில்லை என ஆராய்ச்சியாளர் வற்புறுத்துகின்றனர். அமெரிக்கர் இந்திய முறைப்படியே வைத்தியம் செய்தனர். மருத்துவர் மூலிகைகளை உபயோகித்து நோய்களை நீக்கினர்.

அமெரிக்கர் சமுகம் வருணுச்சிரம முறையைத்தழுவியது. பூசாரிகள், இராசினியர், கமக்காரர், தொழிலாளர் என பல் வகைச்சாதியினர் இருந்தனர். பூசாரிகள் பூணூல் அணிந்தனர் எனவும் சிலர் தீயாகம்செய்ய மலைச்சாரல்களை அடைந்தனர் எனவும் கருதப் படும்.

## கல்விமுறை.

அமெரிக்கர் குருசிஷ்யக்கல்வி முறையைப் போற்றினர். ஐந் தாண்டு முதல் பன்னீராண்டு ஈருக மாணவர் குருவின் மடத்தில் வசித்துக் கல்வி பயின்றனர். இத்தகைய பாடசாலைகள் பத்து மெச்சிக்கோ நகரில் இருந்தன. குருவிடம் கற்கும் பிள்ளைகளைப் பெற்றோர் தம் வீடுகளுக்கு அழைத்துச் செல்லவில்லை. எழுத்துக் கணிதம், சித்திரம், சிற்பம், வானநூல், விற்பயிற்சி முதலியவை கற்பிக்கப்பட்டன. அமெரிக்கர் சிலையிலும் தோலிலும் எழுதினர் தோற்புத்தகங்கள் மடிக்கப்பட்டு மரப்பலகையுறையோடு கட்டப் பட்டன. மெச்சிக்கோவிலுள்ள பழைய தூணில் சித்திர எழுத்துக் களை காணலாம். அவற்ருல் நான்கு யுகங்களாகக் காலவரையறை செய்யப்பட்டதெனத் தெரிகிறது. அமெரிக்கருடைய யுகங்களின் ஆண்டுத்தொகை இந்தியருடைய ஆண்டுத் தொகையே என்ப. மெச்சிக்க நகரத்தில் கடித நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஸ்பானியர் ஆண்டகாலத்தில் சரித்திரக் குறிப்புக்கள் புண்ணிநிமித்த நூல்கள் நீதி நூல்கள் முதலியவை அழிவெய்தின. அமெரிக்கர் பாடலிலும் ஆடலிலும் மிகப் பிரியமுடையவர்கள். இளைஞரோ அஞ்சாமை பயிலுதற்குத்தம் முடல்களை முள்ளால் குத்தினராம்.

## அமெரிக்கர் நகரமைப்பு.

அமெரிக்கர் இந்திய முறைப்படியே நகரமைத்தனர். நகர மத்தியில் தேவாலயமும் அதைச்சுற்றிய வீதியில் மேன்மக்களும் பூசாரிகளும் வசித்தனர். அடுத்த வீதியில் கமக்காரர் வசித்தனர். நகரெல்லையில் தொழிலாளர் இருந்தனர். மன்னர் தம் ஓலக்க மண்டபத்தில் சிங்காதனத்திலேனும் தாமரை யாசனத்திலேனும் இருந்து செங்கோல் செலுத்தினர். அரசன் முன்னிலையில் நீதிபதிகள் இருந்து நீதிவிசாரணை செய்தனர். அந்நன்னாட்டில் கொலைகளவு காமம் மிகக்குறைவு. அந்நாடுகளில் வரைவின் மகளிரை ஆதரிப்பார் இல்லை. மகளிரைப் பலாத்காரமுறையில் புணர்வோர் கொலைத் தண்டம் பெற்றனர். மெச்சிக்கோ நகரிலிருந்து ஒரு தெருவீதி தென்னமரிக்கா வரையும் சென்றதாம். அத்தெரு 900 மைல் நீள மானது. மாயநாட்டில் கொபா என்னும் ஊரிலிருந்து 62 மைல் நீளமானதெரு சென்றது. அதன் இருகரைகளிலும் நிலைத்துள் சுவர் கட்டப்பட்டிருந்தது. பெருங்கற்கள் அடுக்கப்பட்டு அவற்றின் மேல் சிறுகற்கள் இடப்பட்டன. பீருதேயத்திலிருந்து கரைவழியாக வடக்கும் தெற்கும் சென்றவீதி 3000 மைல் நீளமானதாம்.

## அமெரிக்கர் தெய்வங்கள்.

இந்தியருடைய தெய்வங்களையே அமெரிக்கர் வழிபட்டனர் மெச்சிக்கோவில் வதிந்த ஆஸ்திகர் சூரியனை வழிபட்டனர். மெச்சிக் கோவிற் பொன்னாற்செய்த இருதயக் குறியுடைய பொற்படிமங்களும் சுவத்திகக் குறியுடைய கற்படிமங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. யானைத்தலைத் தேவரை மத்திய அமெரிக்கர் என்னும் மாயர் 'முலுக்' என அழைத்தனர். மாயர் நாகங்களையும் தொழுதனர். பீருதேயத்து இங்கர் இராமர் சீதை என்போருக்குத் திருவிழாநடாத்தினர். கிரகண கால முடிவில் சந்திரன் பிறந்திட்டான் என மகிழ்ந்து பறை யடைத்துக் கொண்டாடினர். அமெரிக்கருடைய கோபுரங்கள் மதுரையிலுள்ள கோபுரங்கள் போன்றவை. கோயிற்பூசை நடந்துழி அமெரிக்கர் சங்குஊதினர். மெச்சிக்கோ நகரிலுள்ள சிவன்கோவிலில் 3000 தேவராட்டிகள் தீயோம்பிச் சேவித்தனர். தேவதாசிகள் மணஞ்செய்ய விரும்பினல் கோயிலைவிட்டு நீங்குவர். கோயில்கள் கல்லாலும் சுண்ணும்பாலும் கட்டப்பட்டவை. இங்கருடைய சூரியன் கோவிலில் இருந்த 300 (முந்நூறு) பொற்படிமங்கள் ஸ்பானியரால் சூறையாடப்பட்டன. அக்கோயில் கதலிக்கோயில் ஆயிற்று.

## அமெரிக்கர் ஓவியமும் சிற்பமும்.

கலைவல்லோர்கள் பாழாயிருக்கும் கோவில்களையும் அகழ்ந்தெ டுத்த சிற்பச்சிலைகளையும் பொற்கலம் மட்கலங்களிலுள்ள ஓவியங்களை யும் ஆராய்ந்து அமெரிக்கருடைய ஓவியமும் சிற்பமும் இந்திய வியத்

தையும் சிற்பத்தையும் மிகவும் ஒத்திருக்கின்றன என்பர். மத்திய அமெரிக்காவில் எடுத்த ஒரு கலத்தில் மழைத்தேவர் சாகு ஒரு கலத்திலிருந்து நீரைச் சிந்துதலையும் பாம்பொன்றைக் காலால் உழக்குதலையும் காணலாம். இவ்வோவியக்கதை இந்திரன் விருத்திராசுரனைக் கொன்று மழைபெய்வித்தலை நினைவூட்டுகிற தென்பர். தலைப்பாகையும் உருத்திராக்கமும் அணிந்த ஒருவர் பதுமாசனத்தில் இருக்கும் கற்சிலைகளும் கிடைக்கின்றன. தலைப் பாகை அணிந்த ஒருவர் சங்குஊதும் ஓவியமும் கிடைத்துள்ளது. அமெரிக்கருடைய கோயில்களில் நாகங்களும் யானைகளும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. யானைகளை அமெரிக்கர் காணாமையால் இந்தியரிடமிருந்தே வரையப்பயின்றனர் எனத் துணியப்படும். நீண்ட மூக்கினை உடைய மிருகங்களைப் பார்த்துக் கற்பனையால் யானைகள் வரையப்பட்டன எனின், அது பொருந்தாது. அங்ஙனம் எழுதப்படும் யானை யானையாகத் தோற்றாது. என்னை! எழுதப்பட்ட யானைகள் துதிக்கை உயர்த்திய வண்ணம் தந்தமுடையவையாகவும் வரையப்பட்டுள்ளன. ஓவியங்களில் காணப்படும் யானைகள் யானைக் காது உடையவையாகவே சித்திரிக்கப்பட்டுள்ளன. மத்திய அமெரிக் காவிலே சான்சல்வடோர் என்னும் நாட்டிலே கோபான் என்னும் ஊரிலே ஒரு தூணில் யானைச்சிலை இந்திய முறையாகவே செதுக்கப் பட்டுளது. இரண்டு யானைகள் பதுமாசனத்தில் இருக்கும் ஒருவர் மீது தம் கைகளை உயர்த்தி நிற்றலைக் காணலாம்.

இந்திய ஓவியமும் சிற்பமும் வணிகர் யாத்திரீகர் முதலியோர் மூலம் அமெரிக்கநாடுகளில் செறிந்திருக்கலாம். யானைமீது செல்லும் ஒருவர் தலைப்பாகை அணிந்திருத்தலை சாவகத்திலுள்ள ஓர் ஓவி யத்தில் காணலாம். ஆகலின் சாவகத்தின் வழியாகக் கலை அமெரிக்காவை அடைந்திருக்கலாம். பாலித்தீவிலே இன்றும் பரத நாட்டியம் நடிக்கப்படுதலை அறிவேமல்லவா? தமிழ் வணிகர் கடைச்சங்க காலந்தொட்டு கி. பி. 1200 வரையும் சாவகம் முதலிய தீவுகளிலும் கம்போதி என்னும் கொச்சின் சீனாவிலும் வணிகஞ் செய்தனர் என வரலாறுகள் கூறுநிற்கும். கம்போதியில் சம்பா என்னும் அரசு தமிழரால் நாட்டப்பட்டது. அவண் அகத்தியர் சிவன் முதலியோர் கோட்டம் பெற்றனர். சாவகத்தில் ஸ்ரீவிசய என்னும் சைலேந்திரவரசு சோழரால் நாட்டப்பட்டது.

## அமெரிக்கர் மொழி.

இனி இந்தியர் அமெரிக்காவில் குடியேறினர் என்பதைக் காட்டு வாம். பீருதேயத்திலிருந்த இங்கருடைய மொழி குவிச்சி எனப் படும். அம்மொழியிலுள்ள நூற்றுக் கணக்கான சொற்கள் சமஸ் கிருதச் சொற்களே. ஆகலின் ஆரியமொழி பேசியோர் பீருவில் குடியேறியிருக்க வேண்டும். பீருதேயத்தில் ஒரு சிறு கூட்டத்தினர் பேசிய மொழி சீனமொழியின் கிளை எனக் கருதப்படுகிறது. பீரு சென்றசீனர் அம்மொழியை இலகுவில் உணர்ந்தனராம். அமெரிக்க நாடுகளிலே முப்பத்தேழு மொழிகள் பேசப்பட்டன என்ப. ஆகலின்

கீழைத்தேயங்களிலுள்ள பல மக்கட்கூட்டங்கள் அமெரிக்காவில் குடியேறினர்போலும். 19-ம் நூற்றாண்டில் இருந்த டிகிக்கினிஸ் என்னும் பிரான்சியர் ஒருவர் சீனமொழியை நன்கு கற்றார். பசிபிக் சமுத்திரத்தின் மறுகரையில் சீனத்திலிருந்து மிகத்தூரத்திலே பூசாங் என்னும் பெரியதேசம் உண்டெனச் சீனநூல் ஒன்று கூறுகின்றதென்றார். சீனநாகரிகமும் புத்த சமயமும் கடல்வழியாக அமெரிக்காவை அடைந்திருக்கலாம்.

## இந்தியக் கடலோடிகள்.

இந்தியக் கடலோடிகள் வங்கக்கடலைக் கடந்து சாவகம் முதலிய தீவுகளைக்கண்டு பொலனீசியத் தீவுகளில் தங்கிச் சமுத்திராந்தத் தீவுகளின் எல்லையிலுள்ள ஈஸ்தர் தீவுகளிலிருந்து பீருதேயத்தை அடைந்தனர் எனக் கருதப்படும். பொலனீசியர் தம்மரக்கலங்களில் சென்று பசிபிக் சமுத்திரத்திலுள்ள ஆயிரக்கணக்கான தீவுகளில் குடியேறினர் என்ப. பொலனீசியத் தீவுகளிலுள்ள உணவுக்குரிய குமாரஉபி என்னும் பூண்டுகள் பீருதேயத்தில் உண்டெனவும் அவை அப்பெயராலேயே அழைக்கப்பட்டன எனவும் அவற்றைப் பீருதேயத்தோரும் உண்டனர் எனவும் தெரிகிறது. ஈஸ்தர் தீவுகளிலிருந்து பீருதேயம் 2000 மைல் தூரத்தில் உளது. அக்காலக்கடலோடிகள் 2000 மைல் செல்லக்கூடியவர்கள் என்பது நம்பத்தக்கதே, என்னை! இலங்கையிலிருந்து சீன யாத்திரீகன் பாகியன் சென்ற கப்பலில் இருநூறு வணிகர் சென்றனர் என அறிவேம். பாகியன் சாவகத்தை அடைந்து சீனு சென்றனன் ஆகலின் அவன் சென்ற மரக்கலம் நடுக்கடலூடாகச் சீனுவை அடைந்திருக்க வேண்டும். கொலம்பஸ் அத்லாந்திக் பௌவத்தைக் கடந்த மரக்கலம் சிறியதென அறிவோமாகலின், பெரிய மரக்கலங்கள் பசிபிக் பௌவத்தைக் கடந்தன என்பதில் ஐயமில்லை. பாகியன் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் சீனம் சென்றானாகலின், அக்காலத்தில் வணிகர் அமெரிக்காவை அடைந்திருக்கலாம். இங்ஙனம் கடல் கடந்தோருள் தமிழ்க்கூட்டத்தினர் மிகப்புகழ் பெற்றனர். பட்டினப்பாலை கூறுகின்ற 'காழகத்தாக்கமும் ஈழத்துணவும்' கடல்வழியாகவே தமிழ்நாடு அடைந்தன. பதினோராம் நூற்றாண்டில் கங்கைகொண்ட இராசேந்திரசோழன் கப்பற்படை வைத்திருந்தான் எனவும் அவனுடைய மரக்கலங்கள் படைவீரரைப் பர்மா தேயத்துக்கு ஏற்றிச் சென்றன எனவும் வரலாறுகள் கூறுகின்றன. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இலங்கை மன்னன் பெரிய பராக்கிரமபாகு பர்மாதேயத்திலுள்ள அரமன நாட்டைக் கைப்பற்றும்படி தம் படையை மரக்கலங்களில் அனுப்பினான் என இலங்கை வரலாறு கூறாநிற்கும். இதுகாறும் கூறியவற்றால் இந்து நாகரிகம் பசிபிக் பௌவத்தைக் கடந்துசென்று அமெரிக்காவை அடைந்ததென்பதும் கீழைத்தேயத்து மக்கள் அமெரிக்கநாடுகளில் குடியேறினர் என்பதும் இனிது பெறப்படும்.

# இல்வாழ்க்கை.

சித்தாந்தச் செல்வர்: அ. தா. ப. திருஞானசம்பந்தன், திருவண்ணுமலை.

செந்நெறி நின்று, அல்லவை கடிந்து, அரும்பெறல் நிலை கொள்வழிகளை வகுத்து, அருமைப்பாடுணர்ந்து, வாழ்வதுதான் வாழ்க்கை. மாநிலத்தில் மனிதப்பிறவி யெடுத்தோம்; வாழும் நிலை யறியோம்; என்று வெதும்பியவுள்ளத்துடன் வறட்டு வேதாந்தம் பேசி வீணிலுழன்று வாழ்வது வாழ்க்கையாகாது. வாழ்க்கையில் முயற்சிகொள்வதுதான் வெற்றியின் படிகளைக் கடந்து செல்லற்குரிய நிலையாகும்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது மூதாட்டியாரின் முதுமொழி. முயற்சியிற்றேயாதவன் மனிதனுகான். "சும்மாவிருந்து சுகம் பெறுதல்" என்பது இல்வாழ்க்கை பெற்ருனுக்குரிய உயரிய செயல் அன்று! செயல்களை நினைவிற் கொள்ளல் எளிதினுமெளிதாகும். அச்செயல்களை முடிக்குமாற்றல் அளவிலாது பெறுதல் முயற்சியாற்ருன். முயற்சியென்பது தனியொரு மனிதனுக்குத் தோன்றுங்கால், அளவுபட்ட மகிழ்ச்சியைத் தோற்றி, உண்மை நிலையையடைய முடியாதவளவிற்கு முற்றிவிடுகின்றது. ஒத்த ஆணும், பெண்ணும் சேர்ந்து நிகழ்த்தும் வாழ்க்கையில்பெறும் நலன், முயற்சியின் விளைவால், என்றும் பயனுடையதாகவும், பெருமையுடையதாகவும், நியாய முள்ளதாகவும் சிறந்து நிற்கின்றது. அதனுற்ருன் இல்லறமே சாலச் சிறந்ததொன்றென ஞானப் பெருமக்களும் அருளியுள்ளனர். ஆண்வேறு, பெண்வேறு, என்ற உயர்வு, தாழ்வு நினைவு தோன்ருமல் வாழும் வாழ்க்கையே பெருமித வாழ்க்கையதாகும். இக்கருத்தைக் குறுந்தொகையில் உள்ள செய்யுளொன்றன் மூலம் நன்குணரலாம்.

தலைவனும், தலைவியும் முன்பின்னறியாதவர்கள் அவ்விருவரின் இருமுதுகுரவர்களின் உறவும் எவ்வகைத்து என்பதையறியாமலும், தலைவனும் தலைவியும் எவ்வழியிலும் அறிமுகப்படாதவர்களாய் நின்று சேர்கின்றனர். அச்சேர்க்கை, செம்மண் நிலத்தில், நீர் கலந்தாங்கு, இருவருள்ளமும் ஒருங்கிணைந்தது என்கின்ற காட்சியைக் குறுந்தொகைகூறி நறு விருந்தளிக்கின்றது. இல்வாழ்க்கையில் புகுவோருள்ளம் இங்ஙனமே யியைந்து நிற்றல் என்பதைத் தெள்ளிதின் உணர்கின்ருேம்

"யாயும் ஞாயும் யாரா கியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங் கலந்தனவே! (குறுந்தொகை 40.)

பண்டைய தமிழர் மணமுறையிலேயும், இருபாலரின் உள்ளங்கள் ஒத்து விளங்க வேண்டுமென்று மணங்கருதிய, வாழ்த்தியலுரைகளை அகநானூற்றுச் செய்யுள் மூலம் நன்குணரலாம்.

"வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தியை கெனத் தமர்தர
ஓரிற் கூடிய வுடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇய கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்தனளோர் புறம் தழீஇஆ" –அகம்–86.

வாழ்க்கை வளம் பெற்றுச் சிறந்தோங்கினுல், அதைத் தலைவி தான் புகழவேண்டும். பிறர் புகழ்ந்து எள்ளளவும் பயனில்லை. பெரும் பாரமேற்றப்பெற்ற சகடத்தை யிழுப்பவை எருதுகள்தாம்! சகட மொத்தவர்கள் கேளிர். பெரும் பாரமொத்தது வாழ்க்கை. அந்தச் சகடத்தை யேற்றத் தாழ்வின்றி யிழுக்கும், இருவொத்த வெருதுகள் போன்றவர்களாணும் பெண்ணும்! இல்வாழ்க்கையில் கேளிர் புகழ்ச்சி அளவுபட்டது; ஆனுலும் நியாயமறியாதது. தலைவி இல்வாழ்க்கையில் தலைவனைப் புகழ்ந்தால், அதில் அமிழ்ந்துகிடக்கும் உள்ளுறைப் பொருள்கள் மிகவாம். நற்றிணைச் செய்யுளொன்றில், கீர்த்திமிக்க நலனைப்புகழ்வது ஈண்டு கண்டின்புறுதற்குத் தகுந்ததாகும்.

"என் தலைவர் பிரிவறியாதவர். நிதானமான சொற்களைப் படைத்தவர். அன்பு தோய்ந்த இனியர். எனக்கும், அவருக்கும் உள்ள தொடர்பு, தாமரைமலரில் வண்டு தடையேதுமின்றூதி, அதன்கண் படிந்துள்ள மகரந்தத் தூள்களில் பிரித்தெடுக்கும், நறுந்தேனொத்தது, குற்றந்தீர்ந்த என்தலைவரின் கேண்மை" என்று தலைவி பெருமைப்பட வேத்திக்கூறுகின்றதைச் செய்யுள் மூலம் அறிதல் சிறப்பு.

"நின்ற சொல்லர் நீடு தோன்றினிய
ரென்று மென்றோள் பிரி வறியலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்திற் கொண்ட தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந் நயந்தருளி
நறு நுதல் பயத்த லஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறிய லரே," — நற்றிணை —1.

இம்முழங்கு கடல் ஞாலந்தன்னில், இருமுதுகுரவர்கள் தங்கள் மக்களின் மணவணிகாண மகிழ்ந்தனர் என்கின்ற உண்மையைத் தண்தமிழகக் காப்பியமான சிலப்பதிகாரத்தின்கண் காணலாம். மாசாத்துவானும் மாநாய்கனும், முறையே கோவலனுக்கும்—கண்ணகிக்கும், மணவிழாவமைத்துக்காண உளநிறைவெய்தி முடித்தனர். இவ்வெண்ணத்தையே உலகிற்றேன்றும் அத்துணைப் பெரியோர்களும் எண்ணுகின்றனர்.

"இருபெருங் குரவரும், ஒருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர், மகிழ்ந்துழி," (சிலம்பு புகார்)

இங்ஙனம் மணமேற்று வாழ்தல்தான் இல்லறத்தின் மாண்பு. மணம் முடிந்து கோவலனும்—கண்ணகியும், பெருகிய வாழ்க்கை. வாழ்கின்றனர். இவ்வாழ்க்கையினுயர்வை இளங்கோவடிகள் சிறப்பிப்பதின் மூலம் நன்கறியலாம். தார் பூண்ட கோவலன் மகிழ்வுடன் இல்லறத்தைச் சிறக்கப் பேணுகின்றான். அவன் வாழ்க்கையில், அறத்தைப் பேணலும், விருந்தினர்களை வரவேற்றுபசரித்தலும், ஆகிய பெருந்தண் நிலைகளும் பெற்றுச் சிறந்தான் என்றியம்புகின்றார் இளங்கோவடிகள்'

"மறப்பு அரும் கேண்மையொடு அறப்பரி சாரமும்,
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்,
வேறுபடு திருவின் வீறுபெறக் காண." —சிலம்பு-புகார்.

எனவே எல்லாவற்றிற்கும், சிறப்புடைய நெறிபடைத்த தாயமைவது இல்லறந்தான். இதன் மூலம் பெறவியலாத சிறப்பியல்புகளும் உளவாமோ? இத்தகைய பெருநிலைப்படிகளைக் கொண்டமைவதே, இல்வாழ்வென்பதுதான், எல்லா இலக்கிய நறும் புலவர்களும் அதன் உயர்வையும், ஏற்றத்தையுங் கண்டு, சிறப்புறப் பாராட்டலாயினர். இத்தகைய இல்லறத்திற்குரியது இல். அவ்வில்லில் வாழவேண்டியவள் இல்லாள். "பாழே மடக்கொடி யில்லா மனை" என்ற சொற்றொடர் ஈண்டு நினைவிற் கொள்ளற் பாலது! பெண்ணினல்லாள் அமைந்த மனையின் சிறப்பைத் தஞ்சைவாணன் கோவை கூறு முகத்தான் உய்த்துணர்வோமாக!

"செவிலி, நற்றாய்க்குத் தலைவியின் சிறப்பு மீதூர்ந்த இல்லறத் தன்மையை உணர்த்துவது வருமாறு:— தஞ்சையில் இசைக்கு மேலாக, வண்டுகள் ஒலிக்கின்ற, குங்குமச் செவ்வந்திமலர் மாலையை அணிந்த தோள்களையுடைய தலைவரின், தாமரை மலர்போன்ற, கண்ணில் அமைந்த, இளம்பெண்ணாகிய தலைவியின் மணவீடானது, தெய்வலோகத்திலுள்ள, அமராவதி என்னும் இந்திர நகரமானது, அலைகளையுடைய கடல்சூழ்ந்த மண்ணுலகில் இல்வாழ்க்கைச் செல்வ முடையது."

விண்மேலமரர் விரும்பமராவதி வெள்ள முந்நீர்
மண்மேல் அடைந்தன்ன வாழ்க்கையை தானதுவாணன் [தஞ்சைப்
பண்மேல் அளிமுரல் குங்குமத் தோளர் பங்கயம்போல்
கண்மேல் அருள்பெற்று வாழ்மடமாதர் கடிமனையே!"
— தஞ்சைவாணன் கோவை—375.

இத்தகைய மேதகு சிறப்பியல்புகள் பலபூண்ட பெண்ணினல்லாளொடு இயைந்து வாழும் வாழ்க்கையே இல் வாழ்க்கை யென்பதாம். இவ்வாழ்க்கையைச் சிறப்புசெய்து கூறும் தெய்வத் திருவள்ளுவரின் வாய்மொழியின் வழிநின்று உண்மையீதாமென வுணர்வோம். இல்வாழ்க்கைபற்றிக் குறிப்பிடவரும் தெள்ளு பரிமேலழகர் இயம்புவதாவது, "இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ்செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலாதலின், இஃதறன்

வலியுறுத்தலின் பின்வைக்கப்பட்டது' என்று அதிகாரத்தின் பெருமையையும், பகுப்பையும் பற்றி விதந்தோதுகின்றார்.

சிறப்பு வகையான் உயர்ந்து வருகின்ற வளம்படைத்த இல்வாழ்வான், முயற்சியின் நற்றுணைகொண்டு சிறக்கின்றான். ஒரு மெய்ஞ்ஞான நாட்டத்திலீடுபடும், ஒரு தவவலிமை பூண்டவனைவிட முயற்சியான் மீதூர்ந்து வாழும் இல்வாழ்வான் எவ்வகைத்தானும் குறைந்தவனல்லன். இல்வாழ்வான் வாழ்க்கையிலியற்றுவதுந் தவந்தான்! இவன் செய்தவத்தால் பெறுவது வாழ்க்கையின்பம், தவச்சிரேட்டனேவெனின், இவன் செய்தவத்தால் பெறுவதுகடவுட் பேற்றின்பம். அதனால், இருவர் முயற்சியும் பெருமைக்குகந்த முடிவிலாற்றலும், முற்றுற்றவின்பமும்பெறும் தன்மையதாயமைகின்றது. முயற்சியுடையார் முற்றின்பப்பேறுடையார்" என்பதறமொழி.

"இயல்பினானில் வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை" —குறள்—அறம்—47.

முயற்சியான் மிக்கோங்கும் இல்வாழ்வான், வாழ்வில் பேணுதற்குரியர் அறுவராவர். துறவறத் தன்மையுடைய, பிரம்மச்சாரியும் வானப்பிரத்தனும், சந்நியாசனும், பொருளைத்துறந்த துறவியும், பொருளற்றவறியவர்களும், ஒருவருமில்லாது ஓரிடத்திற்கு வந்திறந்தவனும், இல்வாழ்க்கைப் பூண்டானால் என்றுங் காக்கப்பட வேண்டியவர்கள். அதனாற்றான், பொறுப்பு இல்லறத்தானுக்கு எவ்வளவு பெரியதென்றறிய வேண்டியுளது.

மேற்கண்ட அறுவகைப்பட்டோரையும் போற்றிக் காக்கும் நிலையோடமையாது, மேலும் இல்வாழ்வானால், தாங்கப் பெறுபவர்களும் உளர். அவர்களும் ஐவகைப்பட்டவராவர், குடும்பத்தின் முந்தையோர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், உடன் தான், என்ற ஐவகைப்பட்டோரையும் காக்கும் தன்மையுறுபவன் இல்லறத்தான். இவ்வைவகைப்பட்ட தன்மையோர்க்கும் கடந்து நிற்பது அரசன் பங்கு. இஃதே யாராய்வதாயமையும் பான்மையதாம். இக்கருத்தைத் திருவிளையாடற்புராணவாசிரியர் பரஞ்சோதியார் கூறுவதான் நன்குணரலாம்.

"கற்றவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித் தெய்வம்,
சுற்றவர்க் கற்றவா றீந்தளவை கண்டாறி லொன்று
கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடுபோய்த் [தென்னா
டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கூட்டியுண்பர்
—திருவிளை—நாட்டுச்சிறப்பு—28.

பழியஞ்சிப் பொருளீட்டி வாழும் இல்லறத்தானின் வழியிவ்வுலகத்தில் என்றும் இறத்தலில்லை. அன்பானும், சுற்றத்தானும், தோன்றுமியல்பதான, பண்பும், பயனும் பெற்று விளங்குவது இல்

# புறப்பொருள் வெண்பா மாலையில் வரலாறு

தி. நா. அறிவுஒளி.

முன்னுரை.

வாழ்ந்த வாழ்க்கையின் குறிப்பே வரலாறு. ஒரு நாட்டின் வாழ்க்கைதான் நாட்டு வரலாறு. இலக்கியம் ஒரு நாட்டின் அழகுணர்ச்சி கனிந்த பண்பு வாழ்க்கை ஓவியம் ஆகும். வரலாறோ நாட்டின் உண்மை வாழ்வின் நிழற்படமாகும்.

"நாட்டு வரலாறு" என்பது புறப்பொருள்களின், இயற்கையமைப்புக்களின், வரலாறுமட்டுமன்று. ஒரு நாட்டு மன்பதையின் வாழ்க்கையை; மக்களின் வாழ்க்கையையும் வகுத்துரைப்பதே நாட்டு வரலாறு.

மக்கள் வரலாற்றினையே மிக மதித்துப் போற்றிய நாடு தமிழ் நாடு. மன்னர்களையும் அரசியலையும் அதனால் புறக்கணித்து விடவில்லை தமிழர். நாட்டுப் பொது வாழ்வைப் புறப்பொருள் என்றும்; மக்கள் தனிவாழ்வை 'அகப்பொருள்' என்றும் வகுத்து 'நாட்டுப் பொது வரலாற்றை' இலக்கியமாக வடித்தளித்தனர் தமிழ்ப் புலவர். இந்நுட்பத்தின் ஒண்மை உணராதார் தனி மன்னர் — தனியரசுகளின் நாட்குறிப்பு இல்லை என்று கூறி இதனால் 'வரலாறு எழுதத் தமிழர் மறந்தனர்' எனப் போலியுரைக் கூறி மகிழ்கின்றனர். அவ்வறியார் கூற்று பொய்க் கூற்றாகும். அழகுணர்ச்சியும், பண்பாட்டு விழுப்பமும், நாகரிக மாட்சியும் மிக்க தமிழர், வரலாற்றையே 'இலக்கியமாக' எழுதி வைத்த நுண்திறனை உணரவேண்டும்.

புறப்பொருள் வெண்பாமாலை.

ஐயனாரிதனார் என்ற பேரறிவு சான்ற புலவர் பெருந்தகையின் அரிய படைப்பு புறப்பொருள் வெண்பாமாலையாகும். இந்நூல்

---

முன்பக்கத் தொடர்ச்சி:

வாழ்க்கை. புறத்தாற்றிற்போய்ப்பெறும் பயனைவிட, அறத்தாற்றிற் போய்ப்பெறும் பயனே மிக்குடையதாம். பிறன்பழிப்பிற்கிடங் கொடாத அறவாழ்க்கையே யில்வாழ்க்கை. இன்பவாக்கமும், துன்ப நீக்கமும், இன்ப இறையாம் இயற்கையின் இணைந்த நற்பேறும், பகுத்துணரும் பெற்றிமையும் பெற்றுச்சிறப்பது இல்வாழ்க்கை. இத்தகைய தனிப்பெருந்திருப்பூண்ட வாழ்க்கை கொண்டான் புண்ணியவுலகின்கண் வாழுமுயிர்களுள் ஒன்றெனப் போற்றப்பெறும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்." —குறள்—அறம்—50.

உலகிலேயே ஒரு புதுமை நூல். இஃது ஓர் அரிய இலக்கண — இலக்கிய — வரலாற்று நூல்.

ஒரு நூல் இலக்கணம் மட்டும் கூறுவதாக அமையும்; சில இலக்கியமாக மட்டும் விளங்கும்; சில வரலாற்று நூல்களாக மட்டும் திகழும்; ஆயின் இம்மூன்றமைதியும் ஒருங்கே பொருந்தி அமையும் நூல் வியக்கத்தக்க புதுமை வாய்ந்ததேயாகும். இத்தகு திறனுடைய ஒரே நூல் புறப்பொருள் வெண்பா மாலையேயாம். இந்நூலை பலர் வெறும் இலக்கண நூலாகவே கருதுவர். அது பொருந்தாது. 'மறுமலர்ச்சி' என்ற பெயரால் ஏதேதோ எழுதிவரும் சிலர் இந்நூலைப்போலும் பயனுடைய புது வகை நூலை ஆக்கினுலும் தமிழுக்கு ஆக்கம் விளையும்.

இந்நூல் 'தொல்காப்பியம், பன்னிரு படலம்' என்னும் இரு இலக்கண நூல்களுக்கும் வழி நூலாக அமைந்தது. ஆயினும் முதனூல்களின் சில கருத்துக்களில் மாறுபட்டும், சில புதுமைகளைப் படைத்தும் அமைந்துள்ளது இது.

புறப் பொருள் வெண்பாமாலை பனிரெண்டு படலங்களாக அமைந்துள்ளது. இந்நூல் பதினெட்டு நூற்பாக்களும், முன்னூற்று நாற்பத்திரண்டு கொளுக்களும், முன்னூற்று அறுபத்தொரு வரலாற்று மேற்கோள் வெண்பாக்களும் கொண்டிலங்குகிறது.

இந்நூலில் ஆங்காங்குப் புலவர் ஐயனரிதனர் மிக அருமையாகக் குறித்திருக்கும் அரிய வரலாற்றுச் செய்திகள் நமக்கு அறிவு விருந்தாக அமைந்துள்ளன. ஐயனரிதனர் காலத்துக்கு முற்காலத்து வரலாற்றுச் செய்திகளும், அவர் காலத்து வரலாற்றுச் செய்திகளும் இந்நூலால் தெளிவாக அறிய முடிகிறது.

நாடு.

நாடு இருந்தால் மக்கள் வரலாறு இருக்கும். அக்காலத் தமிழ் நாட்டின் இயற்கையை ஆசிரியர் அழகிய ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிருர்.

"எட்டுவகையான துன்பங்கள் ஒரு நாட்டுக்கு உண்டாகும் அந்த எட்டுவகை இடர்களும் இல்லாமலிருக்கும் நாடு நம் தமிழ் நாடு. அதுமட்டுமா? நஞ்சை வளமிக்கது இது. செந்நெற்பயிர் செழித்து வளரும் நாடு நம்நாடு. செந்நெற் கழனிகளினிடையில் அழகிய கருங்குவளைப் பூக்கள் பெண்களின் கண்களைப் போலப் பூத்துக் கமழும் நாடு இது. பேரின்ப வீடாக விளங்குவது தமிழகம்."†

எட்டுவகைத் துன்பங்கள் விட்டில், கிளி, யானை ஆகியவற்ருல் பயிர்க்கு விளையும் இடர்கள்; வேற்றரசாலும் உள்நாட்டரசாலும்

† "எண்ணின் இடர் எட்டும் இன்றி வயல் செந்நெல்
கண்ணின் மலரக் கருநீலம் — விண்ணின்
வகைத்தாய் வளனெடு வைகின்று." (205)

விளையும் பகை-போர்போலும் துயர்கள்; அளவுகடந்த மழை (மழை யின்மை) பெரும்புயல் ஆகிய இயற்கை குறைபாடுகளால் அமையும் இன்னல்கள், வேறு வகைகளான் விளையும் இழப்புக்கள் என அக்காலத்தினர் கருதினர்.

இவ்வகைத் துன்பங்கள் இல்லாத வகையில் நாட்டை ஆள வேண்டும் என்ற தமிழ்க் கொள்கையை உறுதியாகக் கொண்டே தமிழ் மன்னர்கள் தம் ஆட்சியை இயற்றினர்.

அறமுறை.

நல்லரசானது நல்ல அறமுறை ஓம்பும். இன்னர் இனையர் எனப் பாராது நேர்மை வழங்கும் அறங்கூறவையங்கள் பண்டு இருந்தன. ஊர்தோறும் மன்றத்தில் (பொதியில்) ஊர்ப் பெரியோர் கூடி வழக்குகளை ஆய்ந்து தீர்ப்புரைப்பர். அதனினும் பெரிய அவை நகரங்களில் இருந்தன. அதனினும் மீயுயர் அறமன்று மன்னர் அவைக்களம் ஆம்.

இவ்விடங்களில் 'முறை வழங்கிய முறை' விளக்கமாகக் கிட்டி யுள்ளது நாம் மிக மகிழ்தற்குரிய தொன்று.‡

"தொடை விடை ஊழாத் தொடை விடை துன்னித்
தொடை விடை ஊழ் இவை தோலாத் — தொடை வேட்டு
அழிபடல் ஆற்ருல் அறிமுறை யேன் றெட்டின்
வழிபடர்தல் வல்ல (து) அவை" (173).

வழக்காளர் இரு பிரிவினரையும் அறஅவையினர் கேட்கத்தக்க வினுக்களைக் கேட்பர். அதற்குக் கிடைக்கும் விடைகளை முறையாக அமைத்து ஆராயவேண்டும். வினுக்களையும் விடைகளையும்; மேலும் எதிர் வினு — எதிர் விடைகள் கேட்டு நுணுக்கமாக ஆராய்வர். வினு – விடைகளால் பெறப்படும் உண்மையை அறமுறை (Law)க்கு ஏற்ப ஆராய்வர். பின்னர் பிழையற்ற நடுநிலையான தீர்ப்பு முறியை (தொடை) விரும்பி, குற்றம் புரிந்தோர் தோல்வியுறுமாறும், பிழை யற்ரேர் வெற்றி பெறுமாறும் 'தீர்ப்பை அறிமுறை'யை மேற்கொள் வர். இத்தகு அறங்கூறவையினர் எட்டு வகைப் பண்பு நலமுடை யராக இருத்தல் வேண்டும்.

'உயரிய பண்பு வாய்ந்த நற்குடியில் பிறந்தவராகவும், கல்வி யில் வல்லுநராகவும், பண்புடைமை, வாய்மை, தூய்மை நடுநிலை யாகப்பேசுமியல்புகள் வாய்ந்தோராகவும், நன்மை தராத, பொருமை

‡ "நவை நீங்க 'நடுவு' கூறும்
அவை மாந்தர் இயல்பு உரைத்தன்று (வாகை: 13 – அவைய முல்லை.)

பேராவல்கள் இல்லாதவராகவும் அறங்கூறவையினர் இருக்கவேண்டும்' என்பது பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் முடிபு. †

இவ்வெட்டு வகைப் பண்பு நலங்களிற் சிறந்தோரையே தேர்ந்தெடுக்க அவைகளில் அறம் வழங்க அமைப்பர் பண்டை ஆட்சியாளர். வினவுதல், விடை கேட்டு முறைக்கு ஏற்ப ஆராய்தல் ஆகிய இயல்புகள் உண்மையை அறிய முயலும், அடிப்படை முறைகள், அவற்றைத் தவருது கடைப்பிடித்துள்ளனர் பண்டைச் சான்ருேர். 'முறை' என்ற சொல் இன்று 'சட்டம்' என்ற சொல்லைக் குறிக்கும். பொருளினும் நனிசீரிய கருத்து வளத்தோடு நந்தமிழ் நூல்களில் ஆளப்பட்டுள்ளமை உள்ளங் கொள்ளத்தக்கதாம்.

நாட்டில் அமைதி நிலவுவதற்கும், மக்கள் நடுநிலையோடு வாழ்வதற்கும், வழக்குகள் முறையாகத் தீர்வதற்கும் அறங்கூற வையத்தின் நற்பணி நனி இன்றியமையாதென உணர்ந்து, சீரிய முறை

---

† "குடிப்பிறப்புக் கல்வி குணம் வாய்மை தூய்மை
நடுச் சொல்லு நல்லணி யாக்கம் — கெடுக்கும்
அழுக்காறு அவா வின்மை அவ்விரண் டோ(டு) எட்டும்
இழுக்கா அவையின்கண் எட்டு." (உரையாசிரியர் எடுத்துக்காட்டு)
"குடிப் பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப் பேர் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதலின்பத்துத் தூங்கித் தீதறு
நடுவு நிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்காறு இன்மை அவா இன்மையென
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை
உடனமர் இருக்கை ஒருநாட் பெறுமெனின்
பெறுகதில் அம்ம யாமே வரன் முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்ப இம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே."
(ஆசிரியமாலை — புறத்திரட்டு).

தொல்காப்பியம், புறத்திணை இயல் வாகைத்திணையுள் 'எட்டு வகை நுதலிய அவையகமும்' என இதனைக் குறிக்கிறது. எனவே தொல்காப்பிய காலந் தொட்டும், அதற்கு முன்னரிருந்தும் அறங்கூறவையம் அமைந்து இயங்கி வருதலையும் நாம் நன்கு அறியலாம். முறையமைத்து அறமுரைத்த தமிழ் நாகரிகத் தொன்மை இதனல் தெளிவாகும்.

யில் வரையறைகள் அமைத்தொழுகிய தமிழகத்தினர் மாண்பு பெரிதும் பாராட்டற்பாலதன்றோ?

நாட்டில் அறங்கூறவை ஒழுங்காக நிலைபெற்று நடக்க ஆட்சியின் மாண்புமிக இன்றியமையாததாகும். அரசியற்றலைமையாளர் தம் கடமையிற் சோர்ந்தால், அன்றிப்பணி செய்யாது மடித்தன்மையால் புறக்கணிப்பாக இருந்தால் எட்டு வகை நற்பண்பமைந்த சான்றோர் அவையும் நன்கு இயங்காது. அதனால் நாட்டில் மக்கள் 'நன்மையும் கெடும்' என ஒரு வெண்பாவில், "வெண்குடையான் காவல் விரும்பான். ஒரு நாள் மடியின் உலகின் மேல் நில்லாது இரு நால் வகையார் இயல்பு." என்று (வாகை. 24;178) கூறுகின்றார் ஐயனாரிதனார்.

எனவே 'அறமன்றமாட்சிக்கு ஆட்சியாளரின் நேர்மையான இடையரு ஒத்துழைப்பு என்றும் இருக்கவேண்டும்' என்ற கருத்து பழந்தமிழரின் பழங் கருத்தாம்.

ஆட்சியின் கடமை.

ஓர் ஆட்சியானது தன் நாட்டு மக்கள் துன்பம் இல்லாமல் வாழ வகை செய்யவேண்டும். இதுதான் முதல் நோக்கமாக இருக்க வேண்டும் என்பது தமிழறிஞர் கொள்கை. அம்மட்டோடு ஆட்சியின் கடமை தீர்ந்து விட்டதா? இல்லை. எல்லா உயிர்களும் மகிழ்ச்சியிலே திளைத்து வாழும்படி காத்து வர வேண்டும் ஆட்சி. இதுதான் தமிழ்நாட்டு அரசியலின் இலக்கணம்.

தமிழ்நாட்டில் 'ஆறிலொரு கடமை' (ஆறில் ஒரு பங்கு) வரி செலுத்தும் மக்கள் அதைப் பெறும் அரசு, அந்தச் செல்வத்தைத் தானே (அரசு) துய்க்க இயலாது. படைக்கும், குடிகட்கும், உணவு (உழவு)க்கும், அமைச்சுக்கும் (செயற்றுறை ஆட்சியாளர்கள்) நட்புக்கும் (நட்பு நாடுகள் (அல்லது) அரசுகள்) நாட்டுப் பொதுக்காப்பும் சிறப்புக்காப்புமாகிய ஆறுதுறைகட்கும் ஆட்சிதான் பெறும் திறைப் பொருளை முறையறிந்து செலவழிக்கவேண்டும்.

இச்செலவுமட்டுமின்றி ஆட்சித் தலைவன் (மன்னன்) தானும் உண்டு பிறர்க்கும் கொடுத்து வாழ்க்கைப் பயனைத் துய்க்கவேண்டும்.

தமிழகத்து முன்னாள் ஆட்சி மரபை — அறமுறை — அரசியல் நெறி ஆகியவற்றை—நன்காய்ந்துணர்ந்து அதற்கிசைய ஆள்வதே பண்டையரசியல் கடமையாக இருந்தது. இங்குக் குறிப்பிட்ட சிறப்பியல்கள் தமிழகத்துக்கே உரிய தனிச்சீர் இயல்புகளாகும். இவ்வுண்மைகளை யெல்லாம் அரசியற் கவிஞர் ஐயனாரிதனார் வாகைத்

திணையுள் 'காவல் முல்லை' துறை மேற்கோள் பாவில் மிக அழகாகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

"ஊறு இன்று உவகையுள் வைகா உயிர் ஓம்பி
ஆறில் ஒன்று ஆனது அளித்து உண்டு — மாறுஇன்றி
வான் காவல் கொண்டான் வழி நின்று வைகலும்
தான் காவல் கொண்டல் தகும்." (வாகை: 24:179)

அறிஞரைப் போற்றி வழிபடும் அரசு.

அக்காலத்தில் உடல் வலிமையும், மறஉணர்வும் மிக்கவர்க்கே செல்வாக்கும் சிறப்பும் மிகுதி. புறப்பொருட் பகுதியே வல்லமை ஆற்றல் மறம் ஆகியவை அடிப்படையாக உருவானதேயாம். அவ்வாறிருந்த அக்கால அரசு, மறவர்களையே பெரிதும் போற்றிப் பேணுவதியல்பு. ஆயின், மறவர்க்கு அக்கால அரசு செய்த மதிப்பு-சிறப்புக்களைவிடச் சான்றோர்க்கு-அறிஞர்க்கு-புலவர்க்குச் செய்த சிறப்பு நனிசீரியதாம்.

'ஒரு நாட்டின் உண்மையான வளம் அங்குள்ள அறிவு வளத்தை பொருத்ததே. ஆகவே அறிஞரை ஓம்புவது அறிவுச் செழுமைக்கு அடிப்படை' என்ற நுண்மை தெளிந்தது நந்தமிழ்நாடு.

† இவ்வுண்மையை 'வாயுறைவாழ்த்து', 'செவியறிவுறூஉ', ஓம்படை' என்ற மூன்று துறைகளும் மெய்ப்பிக்கும்,

---

† இக்கொள்கை தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரிருந்தே தமிழகத்தில் விளங்கி வருகிறது, 'வாயுறை வாழ்த்து', 'செவியறிவுறூஉ பற்றித் தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துள்ளது. இவ்விலக்கணத்துக்கு இலக்கியமாகச் சங்ககாலப் பாக்களும் பல உள்ளன.

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ் சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்கும் என்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே" (தொல்: செய்: 108)

"செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடன்எனச் செவியுறுத்தற்றே." (தொல்: செய்: 110)

**வாயுறை வாழ்த்து.**

அறிஞர், மன்னனை (மக்களை) விளித்து, 'எம்முடைய நன் மொழிகள் வழியே தவறாமல் ஒழுகினால் பிற்காலத்தில் நன்மை விளையும்' எனத் தமது அறிவுறைகளின் சிறப்பைக் கூறுவது வாயுறை வாழ்த்து ஆகும்.$

'நல்லதைக் கூறும்போதும் அதனால் விளையும் பயனை அறிவித் தால்தான் மக்களுக்கு நன்மையைக் கடைப்பிடிப்பதில் ஆர்வம் உண்டாகும்' என்ற உண்மையை அக்கால அறிஞர் நன்குணர்ந் திருந்தனர் என்பதற்கு இப்புறப் பொருட்டுறையே தக்க சான்றாகும்.

'ஓர் அரசானது, அறிஞர் மொழிகளை இகழ்ச்சிசெய்துபுறக் கணிக்காமல் அம்மொழிவழி நின்றொழுகினால் இவ்வுலக மெல்லாவற் றையும் தன்பாற் படுத்தி ஆள்வது எளிது." என ஐயனாரிதனார் பாடுகிறார்.

"எம் சொல் எதிர்கொண்டு இகழான் வழி நிற்பின்
குஞ்சர வெல் படையான் கொள்ளானோ?—எஞ்சும்
இகல் இடன் இன்றி எறிமுன்நீர் சூழ்ந்த
அகல் இடம் அங்கை அகத்து." (பாடாண்: 32: 220)

இதனால் நாட்டு அரசியற் றலைவரும், பிற அரசியற்றுறைகளும் அறிஞர் சான்றோர்தம் அறவழி ஒழுகவேண்டிய இன்றியமை யாமையை அக்காலத்துத் தமிழர் நன்கறிந்தொழுகிய மெய்ம்மையை உணரலாம்.

**'செவியறிவுறூஉ'.**

அறத்தை ஆராய்ந்து கொண்டே இருக்கவேண்டிய கடமை நாடாள்வோர்க்கும் அரசுக்கும் நனி இன்றியமையாததாம். அத்தகு ஆட்சித் தலைவற்கு மாறுபாடு இல்லாத, முரணற்ற, மறவழிப்படாத நிலைபெற்று நிற்கும் சீரிய அறக் கருத்துக்களை; அன்னார் உள்ளம் கொள்ளுதற்குரிய முறையில் கூறுவதே 'செவி யறிவுறூஉ' ஆகும். ‡

"அந்தணர், சான்றோர், அரியதவம் செய்வோர், தம் முன் னோர், தந்தை தாயர் ஆகியவர்க்கு முன்னோர் செய்த வழியிலே ஒழுகிக் கடமை செய்து அப்பெரியோர்தம் அறிவுரைப்படியும், உலகத்து மொழிகளைக் கேட்டும் ஒழுகுவது முறைமையாகும்." என ஐயனாரிதனார் மொழிகிறார்.

---

$ "பிற்பயக்கும் எம் சொல்லென
முற்படர்ந்த மொழி மிகுத்தன்று." (பாடாண்: 32: கொளு).

‡ "மறந் திரிவில்லா மன்பெருஞ்சூழ்ச்சி
அறந்தெரி கோலாற் கறிய உரைத்தன்று."
(பாடாண்: 33: கொளு).

"அந்தணர் சான்ரேர் அருந்தவத்தோர் தம் முன்னேர்
தந்தை தாய் என்று இவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டல் முறை." (பாடாண்: 33:221)

ஓம்படை: புலமை சான்றவன் அரசியலாளன் முன்னர் நின்று, "இத்தகு செயலைச் செய்வது அரசுக்குரிய இயல்பான கடமையாகும்" என அறிவுரை மொழிகளைக் கூறுவது ஓம்படை § ஓம்படை என்ருல் நன்மையின்கண் ஒப்புவித்தல் (அதாவது செலுத்துதல்) என்பது பொருளாகும்.

இக் கருத்துக்கு மேற்கோளாக ஐயனரிதனர் இயற்றியுள்ள பாடல் நல்ல சுவையும், கருத்தாழமும், புதுமை நயமும் கலந்து மிக மிக அருமையாக உள்ளது.

"ஒன்றில் 'இரண்டு' ஆய்ந்து 'மூன்று' அடக்கி 'நான்கினல்'
வென்று களம் கொண்ட வேல் வேந்தே! —சென்று உலாம்
ஆழ்கடல் சூழ் வையகத்துள் 'ஐந்து' வென்று 'ஆறு' அகற்றி
'ஏழ்' கடிந்து இன்புற் (று) இரு." (பாடாண்: 37:225).

இந்த நயமானதும், சூழ்ச்சித் திறனேடு அமைக்கப்பட்டதுமான நுண்மைக்கருத் தடங்கிய பாடலுக்குப் பல்வேறு வகையாகவும் பொருள் கொள்ளலாம். அவரவர் அறிவுச் செழுமைக்கேற்பப் பொருள் கொள்ளுமாறு நுண்மையாகச் செறிவாக அமைந்த பாடல் இது.

"ஒப்பற்ற ஒன்று அறிவு. அந்த அறிவின் துணையால் நன்மை தீமை எனப்படும் இரண்டையும் நன்கு ஆராய்ச்சி செய்து வாழ வேண்டும். அவ்வாராய்ச்சிப் பயனல் பகை, நட்பு, நொதுமல் என்ற மூன்று திறத்தாரையும் தன் சார்புபடுத்தி அடக்கவேண்டும். அதன் பின் நால்வகைப் படையால் (யானை, குதிரை, தேர், காலாள்) பகைவரை வென்று நாட்டைக் கைப்பற்றவேண்டும். இத்தகு செயல்களை யெல்லாம் செய்து முடித்த வேந்தனே, இவ்வுலகில் மெய் வாய் கண் மூக்கு செவி என்று அமைந்த ஐந்து பொறிகளையும் அடக்கி வெற்றி பெற்று, அரசியலுக்கு இன்றியமையாத ஆறு உறுப்புக்களாகிய படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகியவற்றைப் பெருக்கி (மிகுதியாக்கி) ஏழு வகைக் குற்றங்களாம் வேட்டம், கடுஞ் சொல், மிகுதியான தண்டனை, சூதாட்டம், செல்வத்தைச் சேர்த்துத் தேக்கி வைத்து இவறல், கள்ளுண்டு வெறித்தல், முறையற்ற காமம் (ஒழுக்கக்கேடு) ஆகியவற்றை முற்றிலும் களைந்தொழித்துத் தூய

§ "இன்னது செய்தல் இயல்பென இறைவன்
முன் நின்று அறிவன் மொழி தொடர்ந் தன்று."
(பாடாண்: 37: ஓம்படை: கொளு.)

வாழ்வில் ஒழுகி, அறவழிவரும் நல்லின்பங்களைமட்டும் துய்த்து இனிதே வாழி!" — என உரைப்பது ஒரு பொருள்.

"ஒரு உயிர் கொண்டு இவ்வாழ்வில் அறமும் மறமும் எனப்படும் இரண்டைப்பற்றியும் நன்ருக ஆராய்ந்து உண்மை தெளிந்து, காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று குற்றங்களையும் அடக்கி ஒழித்து, அன்போடு கூறித் திருத்தல், வன்சொல்லால் மருட்டித் திருத்தல், பரிசு உதவி செய்து சீர்திருத்துதல், ஒறுத்தல் வழி திருத்தல் என்ற நான்கு வகைகளால் தன்பால் பணிந்தொழுகாதவர்களை வெற்றி கொண்டு, சிறப்புற அவைக்களத்து வீற்றிருக்கும் வேந்தனே, இவ் வுலகில் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று கூறப்படும் ஐந்து சுவையுணர்வுகளையும் வெற்றி கண்டு, நட்பு, பகை, செலவு, நல்லிருக்கை, கூடினரைப் பிரித்தல், பிரிந்தவரைக் கூட்டல் என்ற ஆறு வகை செயல்களையும் வளர்த்துக்கொண்டு; மிகை வரி வாங்கல் சான்ருேர்ப் பழித்தல், மிகை ஒறுப்பு நல்கல், தற்சார்ந்தோரை மதித்துப் பேணுமை, ஒழுக்கமின்மை, கொடுங்கோன்மை, நாட்டு நலன் ஓம்பாது தன்னலன் ஓம்புதல் என்னும் ஏழு வகைக் குற்றங் களையும் அறவே நீக்கி இன்பமாக ஆட்சி செய்து வாழ்க! என உரைப்பது பிறிதொரு பொருள்.

"ஒன்ருகிய வாழ்க்கையில் புகழ் — இகழ் என்னும் இரண்டை யும் நன்கு ஆராய்ச்சி செய்து, அறம் – பொருள் – இன்பம் என்னும் மூன்றனையும் தன் வாழ்வில் அடக்கி நிலவச் செய்து, அழுக்காறு, அவா, இன்ணுச் சொல், வெகுளி என்னும் நான்கையும் தோற்கடித்து வெற்றி பெற்று அறவுள்ளம் கொண்டு வீற்றிருக்கும் வேந்தே, இவ் வுலகில் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பங்களையும் (மகளிர் வழிப் பெறும் இன்பம்) தனக்கே உரித்தாக வென்று, ஆறு வகைத் தொழில்களையும் வளர்த்து ஏழு வகைக் குற்றங்கள் (குறும்பு, கற்பழிவு, நேர்மைக் குறை, கையூட்டு, கல்லாமை, பகை, பொருட்குறை) அணுகாதபடி அவற்றை ஒழித்து இன்பம் துய்த்து நீடூழி வாழ்க!"

இன்னும் இஃதனைய கருத்துக்களை வாரி வழங்கும் 'கருத்தூற் ருக' இவ்வழகிய பாடல் அமைந்துள்ளது.

இவ்வாறு அக்கால அறிஞர்கள் அரிய மெய்யுண்மைகளை அறி வுறுத்தி அரசை நேர்மையான வழியில் ஈடுபடுத்தினர். அரசும் அறிஞர் வழியில் ஒழுகி நல்லாட்சியை நாட்டி நல்லமைதியை நிறுவி யது. இந்த அரிய பண்பாடுதான் தமிழகத்தின் உயர் தனிச் சிறப் பாகும். அமைதியான வாழ்க்கை, இனிய அன்பு நிலவும் மன் பதை, அறம் செழிக்கும் அரசு இவையே தமிழர்தம் உலக நோக்கமாக அமைந்திருந்தது.

**போரும், மகளிரும்**

மக்கள் மனப்பான்மையும், வரலாறு சிறப்பாகக் கருதத்தக்க தகுதி வாய்ந்தது. தமிழரின் மனப்பான்மையை உணர்த்தாதது

உண்மை வரலாறு ஆகாது. தமிழர் வரலாறு – தமிழக வரலாறு – தமிழ் மக்களின் உள்ள வியல்பை ஓவியமாக்கிக் காட்டுவதாக அமைதல் வேண்டும்.

உள்ளநிலைதான் உலகநிலையை உருவாக்குவது. உள்ளத்தில் அமைதி நிலவினுல் உலகில் அமைதி நிலவும். உள்ளம் குமுறினுல் உலகமும் தாக்கப்படும். உள்ளம் போராடினுல் உலகில் போராட்டம் மூளும். இவ்வுண்மைகளை உணர்த்துவது உண்மை வரலாற்றின் இலக்கணமாகும்.

தமிழகப் பெண்பாலர் உள்ள வியல்பை ஆராய்ந்துணர்ந்தால் அரிய தமிழக வரலாற்றுண்மைகள் புலனுகும்.

தமிழ் மறவர் போர் ஆவல் மிக்கு வாழ்ந்தமை வரலாறுணர்த்தும் ஓர் உண்மை. ஆண்மையை விரும்பும் மகளிர் போரை – அழிவு வினையை–விரும்பவில்லை. போரின் கொடுமைகளைப் பெண்மையுள்ளம் வெறுத்தது. போர்த் துன்பத்தைக் கண்டு மகளிர் மென்மையுள்ளம் அஞ்சியது.

பெண்டிர் அருள் உள்ளமும் இரக்க வியல்பும் கொண்டவர், அன்பே பற்றுக்கோடாகக் கொண்டிலங்கும் பண்பினர். அவர்கள் கொடுமை – கொலை – போலுந் தீயவற்றைப் போற்றுவரோ ?

உழிஞைப்படை, நொச்சியாரின் காவற்காட்டை அழித்து அவர் தம்கோட்டையை அணுகி, அகழியின் மருங்கில் தங்கியது. உழிஞைப் படையினர் பருகும் நீராக நொச்சியாரின் கோட்டை அகழி நீரே பயன்பட்டது.

இதைக் கண்டவர்கள் தமக்குள் பேசிக் கொண்டனர். 'உழிஞையார் போருக்கு வந்து பாசறை யிறக்கித் தங்கி விட்டனர். இனித் திண்ணமாகப் போர் நிகழும். நீளமான வாயிலையும் உயரமான மதிலையும் உடைய பேரரண்மனைகள் நொச்சியார் கோட்டைக்குள் அகநகரில் உள்ளன. அங்குள்ள மாடகூடங்களில் ஒளி வீசும் பொன் வளையல்களை அணிந்திருக்கும் பெண்கள், 'ஐயோ, போர் மூண்டு விட்டதே!' எனத் துன்பத்தோடு எண்ணி ஆற்ருமையோடு பெருமூச்செறிந்து வருந்துமாறு இனி போர் நடந்தே தீரும்!" என்கின்றனர். †

இப்பாடலில் பெண்டிரின் பெருமூச்சினைக்காட்டி, அவர்தம் உள்

† "கோள்வாய் முதலைய குண்டகழி நீராக
வாள்வாய் மறவேந்தன் வந்து இறுத்தான்—நீள்வாயில்
ஓங்கல் அரணத்(து) ஒளிவளையார் வெய்து உயிர்ப்ப.
ஆங்கொல் அரிய அமர்!" (உழிஞை : 16 : புறத்துழிஞை: 110

ளக்கருத்தை ஓவியமாக்கி விட்டார் ஐயனரிதனர்.

ஏன் மகளிர் துன்புறுகின்றனர்? அஃதவர்கள் பண்பாட்டையே காட்டுகிறது. வாழப் பிறந்த மாந்தர் சாகப் பயிலும் போரைச் சான்றோர் விரும்பாதது இயல்பே. இந்நுட்பமான வரலாற்றுண் மையைப் பல்வேறு வாயில்களில் புலவர் ஐயனரிதனர் நுணுக்க மாகக் காட்டுந்திறன் பாராட்டற்பாலதாம்.

**ஆஞ்சிக்காஞ்சி:** காதற்கணவன் களத்தில் பட்டான் என்ற றிந்ததும் பூங்குழை பூண்ட மெல்லியல் மனைவி தீப்பாய முனைவாள். அப்போது அவள் தோழியரும், உறவினரும் ஊராரும் தீப்புக வேண் டாம் எனத் தடுப்பர். ஆயின் கணவனில்லா உலகைத் தானும் விரும்பாத அக்காதலரசி, 'எல்லாரும் அகன்று செல்க, என்னைத் தடுத்தல் வேண்டாம்' என உரைத்துத் தீயில் வீழ்ந்து உயிர் துறப்பாள் ‡

கணவன், வேல் மார்பில் தைத்திட உயிர் துறந்திருத்தலைக் கண்ட காதல் மனைவி, எந்த வேல் கணவனுயிரைக் கவர்ந்ததோ அந்த வேலையே பறித்தெடுத்துத் தன் மார்பில் பாய்ச்சிக் கொண்டு உயிர் துறப்பாள். கற்புடைமை எத்துணை கொடிய முடிவை உரு வாக்கி விடுகிறது அருமை மகளிர்க்கு! $

**அகத்துழிஞை:** உழிஞை மறவர் நொச்சியாரின் கோட்டைக் குள்ளே புகுந்து போரிடும்போது, நொச்சி மறவர்கள் உழிஞையர் வாள்களினுல் தாக்கப்பட்டு மடிவர். அப்போது அவ்வரண்மனையில் நொச்சியார்க்குரிய மகளிர் – நிலவுபோலும். அழகிய முகமுடைய வர்கள் – அலறி அழுவர். ஆம். தம் உறவுக்குரிய ஆடவரைத் தம் கண் முன்பே கொலை செய்வதைக் கண்டு அலறி அழாமல் அம் மகளிர் என் செய்வர்? *

**உழுது வித்திடுதல்:** போர் வெறி மிகுதியானுல் என்ன செய்

---

‡ "தாங்கிய கேளொடு தானும் எரிபுகப்
பூங்குழை ஆயம் புலர்க என்னும்—நீங்கா
விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்
புலாழித் தலைக்கொண்ட புண்." (காஞ்சி: 22: ஆஞ்சிக்காஞ்சி82)

$ "கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல் வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்—அவ்வேலே
அம்பிற் பிறழுந் தடங்கண் அவன் காதற்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று." (காஞ்சி: 22:83)

* "செங்கண் மறவர் சினம்சொரிவாள் சென்று இயங்க
அங்கண் விசும்பின் அணிதிகழும்—திங்கள்
முகத்தார் அலற முகில் உரிஞ்சும் சூழி
அகத்தாரை வென்றார் அமர்." (உழிஞை.22:116)

கிறேம் என்றே புரியாது. அதுபோலத்தான் தோற்ற பகைவரின் தலைநகரத்தை – அங்கே ஓவியங்களால் ஒப்பனை செய்யப்பட்டுக் கலை நலம் மலியக் கட்டப்பெற்ற பல மாடங்களை (மாடிகளை)யும் உயரிய அடுக்குகளையும் கூடங்களையும் கொண்ட அரண்மனைகளை யெல்லாம் இடித்துப் பின் கழுதைகளை ஏரில் பூட்டி அவ்விடங்களில் உழுது, வெள் வரகு (கவடி) கொள் (குடைவேல்) ஆகியவற்றை விதைப்பர். §

இத்தகு கொடுமையைப் பெண்ணுள்ளம் விரும்புமோ? விரும்பாதன்றோ! அதனுல்தான் அவர்கள் போர் என்றுல் உள்ளம் புண் பட்டனர்.

**தொகை நிலை:** போரில் இரு படை மன்னர்களும் இறந்துபட அன்னுர் மனைவியர்களும் செந்தீயில் புகுந்து இறப்பர். இவ்வாறு கொடுமை விளைப்பது போர்.

"மண்டு அமர்த் திண் தோள் மறம் கடைஇ மண் புலம்பக்
கண் திரள் வேல் மன்னர் களம் பட்டார் — பெண்டிர்
கடிது எழு செந்தீக் கழுமினுர் இன்னும்
கொடிதே காண் ஆர்ந் தின்று கூற்று." (தும்பை: 28:154.)

**காமநிலை.** போர் முடிந்தது. தன் கணவன் இறந்துபட்டான். ஓடினுள் வீட்டைத் துறந்து மனைவி. கண்டாள் பிணமாகிக் கிடக்கும் பெருமானை. நுண்ணிய இடையையும் பெரிய அல்குலையும் கொண்ட அப்பேரழகி 'என் கணவன்! என் கணவன்!' என மெய்ம் மறந்த நிலையில் முணுமுணுத்துக் கதறியபடி அம்புப் புண்பட்ட கணவன் மார்பில் செங்குருதியோடு புரளும் பூமாலையானது தன் மார்பகத்தை முகக்கும்படி கணவனைத் தழுவுவாள்! எத்தகு துன்ப ஓவியம்! பகை புகழக் கிடந்தவனை முகைமுறுவலார் முயங்கும் துயரக் காட்சியைப் பெண்டிர் விரும்புவரோ?

"எங்கணவன் எங்கணவன் என்பார் இகல் வாடத்
தங்கணவன் தார்தம் முலைமுகப்ப — வெங்கணைசேர்
புண்ணுடை மார்பம் பொருகளத்துப் புல்லினுர்
நுண்ணிடைப் பேர் அல்குலார்." (தும்பை: 24:150)

**தன்னை வேட்டல்:** நாணமும், நற்குடிப் பிறப்பும் கொண்ட அழகு மங்கை யொருத்தி வீட்டைக் கடந்து நல்லபோரில் பட்ட ஆருயிர்க் கணவனைக் காண உணர்ச்சி வெறியோடு ஓடி வருகிறுள். 'கற்பின்

§ "எழுது எழில் மாடத்து இடன் எல்லாம் நூறிக்
கழுதை ஏர் கை ஒளிர் வேல் கோலா—உழுததன்பின்
வெள்வரகு கொள் வித்திடினும் விளியாதால்
கள் விரவு தாரான் கதம்." (உழிஞை: 26:120)

விழுமியதில்லை' என நம்பிய தமிழ் நன்மகள் அவள்! ஆயின் நாண் துறந்து ஓடுகிருளே! ஏன்? போரின் கொடுமை! $

இத்தகைய நிலையைப் பெண்ணுள்ளம் பொறுக்குமா? இதனுல் தான் தமிழ் மகளிர் போரை வெறுத்தனர். பெண்டிரின் துயரை ஐயனுரிதனுர் இத்துணை விளக்கமாகப் பாடியது ஏன்? கொடுமை கட்குக் கொள்கலமான போர் பலர் நலனையும், நாட்டையும் பாழாக்கு கிறது. வெற்றி பெற்ருேரிலும் உயிரும், உடலும், பொருளும் இழந் தோர் பலர் இருக்க நேருகிறது. இத்துணைத் துயரும் அகப்பண்பின் மையால் விளைவதே என்று மக்கள் உணரவேண்டும் என்பதே புலவர் நோக்கம் என்பதைத் தெளிய வேண்டும். மேலும் ஐயனுரிதனுர் போரினுல் பெண்கள் படும் துன்பத்தை அழகாக விரித்துள்ளார்.

மாலை நிலை:

†•கதிர்வேல் கணவனெடு கனன்றெழும் தீயில் முழுக, நிலவி னும் அழகுடைய நெற்றியை உடைய மனைவி காலைப்பொழுதில் நிற்கும் இரக்கத்திற்குரிய ஓவியத்தைக் கன்னெஞ்சும் கரைந்துருகக் கூறுகிருர் ஐயனுரிதனுர்.

"பூம்பொழிலில் இனிதே தோகை விரித்து ஒசிந்து நடை பயி லும் எழில் சான்ற மயில் போன்றவளாகிய தலைவியின் கணவன் போருக்குச் செல்லுமுன், "கண்ணே, கதிரவன் மறையும் பொழு திற்குள் பகையை அழித்து வாகைசூடி வருவேன். இன்றேல் போர்க் களத்தில் உயிர் கொடுத்துப் புகழ்பெறுவேன்" எனச் சூளுரை கூறினுன். பிரிந்து சென்ருன். போரில் பகைவரால் கொல்லப்

---

$ "கற்பின் விழுமியதில்லை கடையிறந்து
இற்பிறப்பும் நாணும் இடையொழிய — நற்போர்
அணங்கிய வெங் களத்து ஆருயிரைக் காண்பான்
வணங்கு இடை தானே வரும்." (தும்பை : 27 : தன்னை வேட்டல் : 153)

† "கதிர்வேற் கணவனெடு கனையெரி முழுக
மதியேர் நுதலி மாலைநின் றன்று" (பொதுவியல் : 22 மாலை நிலை : கொளு) இத்துறை ஆசிரியர் தொல்காப்பியரும்,
"நல்லோள் கணவனெடு நனி யழல் புகீ இச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையும்" (தொல் : பொருள் : 79) எனக் கூறியுள்ளார். தொல்காப்பியத்தில் 'பாலை நிலை' என அமைந்தபெயர் புறப்பொருளில் 'மாலை நிலை' யென அமைந்தது ஏடெழுதியோர் கைப்பிழை போலும்! ஆயின் பாட்லில் (கொளுவிலும்) 'மாலை' நேரம் குறிப்பதால் இப்பெயர் பெற்றது ஆராய் வுக்குரியது.

பட்டான். தலைவி தீமூட்டி அதிற்புக முடிவு செய்தாள். காலைப் பொழுதில் தீ எரிகிறது. அங்கே விரித்த குழலும் வடித்த கண்ணீரு மாகப் பொலிவிழந்த பொலிவார் ஓவியமாக ஆற்றுமையோடு நின்ருள். எரியும் நெருப்பைக் கண்டாள். செந்தீயும், அஞ்சத்தக்க அம் மங்கையின் கொடிய முடிவும், அவளுடைய துன்பியல் நிலையும் அவ ளகத்தை அசைத்தது. முன்னர் - போருக்குப் போகும் முன் – கண வன் கூறிய உறுதியுரையை எண்ணினுள் எண்ணருந்துயரம் ஏந்திய ஏந்திழையாள். மாலையில் இவ்வாறு எண்ணியவள் மனத்தை உறுதி செய்து கொண்டாள். மறுநாள் காலையில் கொழுந்து விட்டெரியும் நெருப்பைச் சுடுகாட்டில் மூட்டி, கணவனேடு தானும் கலந்து வாழ்வில் மட்டுமின்றிச் சாவிலும் துணையானுள். அத்தூய காதலி தீயினின்றும் தீத்தழலும் புகையும் மேனேக்கி வளர்ந்து கொண்டிருந்தது'' என்ற அரிய பாடல் எண்ணத்தக்கது. ¶

§ மேற்கண்டவாறு இறந்தவளைக் கண்ட புதியவர்கள் அக் காட்சிபற்றிப் பேசும் கருத்தைப் பிறிதொரு பாடலில் காட்டுகிருர் கவிஞர். 'போரில் வேலை ஏந்திப்போரிட்ட அத்தலைவனுக்கும் வெண் மை நிறம் வாய்ந்த வளையல் அணிந்த தலைவிக்கும் உயிர் ஒருங்கே சென்றது. ஆம், காதலால் ஒன்று கலந்து களித்த அவ்விருவருக் கும் உயிரும் ஒன்றே என உணரவேண்டும். ஆராய்ச்சித் திறமற் ரேர் – இக்காதலுண்மை உணரும் திறமற்றவர் – (இடை தெரியார்) இவர்களிருவருக்கும் இரண்டு உயிர் (தனித்தனி உயிர்) என்று கூறுவர்.'

இப்பாடலால் மேலும் பெண்டிர் துயரத்தை மிகுதியாக்கிக் காட்டுவதை உய்த்துணரலாம்.

தலைவிக்குமட்டுமின்றி அவள் தோழிக்கும் போரின் விளைவு துன்பத்தையே தருகிறது. இதனைப் பிறிதொரு உணர்வோவியப் பாட்டு காட்டுகிறது.

அவன் ஆண்மைமிக்க செம்மல். போரில் பிற மன்னர்களே வியந்து ஆரவாரிக்கும்படி போரிட்டான். சந்தனம் பூசிய மார்பில்

---

¶ "சோலை மயில் அன்னுள் தன் கணவன் சொல்லிய சொல்
மாலை நினையா மனங் கடை இக்—காலைப்
புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்ருள்
அகையழல் ஈமத் தகத்து." (பொதுவியல் :22: மாலை நிலை : 261)

§ "ஓர் உயிராக உணர்க உடன் கலந்தார்க்கு
ஈர் உயிர் என்பர் இடைதெரியார் — போரில்
இடன் ஏந்தும் வேலோற்கும் வெள் வளையினுட்கும்
உடனே கலந்த(து) உயிர்." (பொது : 22 : 262) இம் மூதானந் தம் என்ற துறையை, கணவனெடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தம்" (தொல். பொ : 79) என்பர் தமிழ்க்கிழவர் தொல்காப்பியர்.

ஆழமான புண் வடுக்கள் உண்டாக வீழ்ந்தான். ஆயின் அவன் உயிர் போகவில்லை. வீட்டுக்குக் கொண்டு வந்தனர் அவனை. ஆடு அமைத்தோளி (அசைகின்ற மூங்கிலைப்போன்ற அழகிய ஒளி வீசும் தோள்களைப் பெற்றவள்) அவன் காதல் மனைவி. பலவகை மருத்துவம் செய்தும் புண்கள் ஆறவில்லை. நற்குறிகள் பொருந்தாமல் மாறுபட்டுத் தோன்றின. நற்சொல்லும் மயங்கின. இதைக்கண்ட தோழி ஐயோ, தலைவனுயிர்க்குத் தீமை வரும்போலும்! அவ்வாறு அவன் இறந்தால் பேதைத் தலைவியின் நிலை, யாதாகும்? ஆம். அவள் நிலையை என்னல் கற்பனைகூடச் செய்துபார்க்க முடியவில்லை!' என வாடி வருந்துகிருள்!

† இப்பாடல் இரக்கத்தின் நிலைக்களமாக நம்மை உணர்வறச் செய்கிறதன்ரே?

மற்ருெரு பாடலில் தலைவியின் அவலக்குரலை அப்படியே படம் பிடித்துப் பாட்டாக ஒலிபரப்புகிருர் ஐயனரிதனர்.

மறமன்னர்கள் பலர் கூடிவந்துவிட்டனர். போர்புரியத் தலைவன் 'துடி' என்றதோற்கருவி முழங்கப் போர்க்குச் சென்று விட்டான். தலைவி வழிகூட்டிக் கணவனை அனுப்பியபின் தீயகுறிகள் தோன்றின. நற்சொற்கூடி வரவில்லை. இதைக் கண்டதும் அவளகம் பெரிதும் கலங்கியது. காதலனின் மற ஆண்மையை விடத்தீயகுறிகள் அவளைப் பேதைமையுறச் செய்கின்றன. ஏன்? தன் கணவன் பால் அவள் கொண்ட அளப்பருங்காதலே இம்மட நம்பிக்கைக்கு அஞ்சி அலமரச் செய்கிறது. தன் நெஞ்சத்துன்பத்தை அன்னையிடமோ தோழியிடமோ கொட்டி ஆற்ருமல் அழுகிருள். அன்னையே, குறி நன்ருக இல்லாததைக் கண்டு என் ஆருயிர் சுழல்கிறது. இனி என்ன ஆகுமோ?'' என்கிருள்.

‡ இப்பாடலில் 'என்னும் கொல்?' (இனி என்ன ஆகுமோ?") என்ற வினு நம்நெஞ்சைத்துளைத்து அவல உணர்வைப் பீறிட்டெழச் செய்கிறதல்லவா?

பின்னும் போரால் பெண்டிர்படும் பாட்டைத் தெளிவாக்குகிருர் வரலாற்றுப்புலவர் ஐயனரிதனர்

புகழ்மட்டும் இவ்வுலகில் நிற்கத்தலைவன் இறந்துபட்டான் போர்க்களத்தில். தலைவி அச்செய்தியைக் கேள்விப்பட்ட அக்கணமே

---

† '' வேந்தார்ப்ப வெஞ்சமத்து வேல் அழுவம் தாங்கினுன்
சாந்தார் அகலத்துத் தாழ் வடுப்புண் — தாந்தணியா
மன்னு சொகினம் மயங்கின வாய்ப்புளும்
என்னுங் கொல் பேதை இனி ?'' (பொது: 25 : 264)

‡ '' இன்னு சொகினம் இசையா விரிச்சியும்
அன்னு! அலம் வரும் என் ஆருயிரும் — என்னுங்கொல்
தொக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்
புக்கான் விடலையும் போர்க்கு!" (பொது: 26 : 265)

இறந்தொழிந்திருக்க வேண்டும். ஆனால் அவள் உயிரோடு இருக்கிறாள். 'தான் கணவன் மாண்டபின்பும் உயிரோடிருக்கிறேமே! ஈதென்ன கொடுமை!' என்ற வியப்புமிக்க ஆற்றாமை அவளகத்தை வாட்டுகிறது. தன்னையே பழிதூற்றிக் கொள்கிறாள். "கணவன் உயிரோடிருக்கும்போது இவள் அளப்பருங் காதலுடையவளாக இருந்தாள். அப்படிப்பட்டவள் கணவன் இறந்தவுடன் இயல்பாக மாளாமல்; இன்னும் உயிர்சுமந்து இருக்கிறாளே! இவளா பெருங் காதல் சான்ற மனைவி?' எனப் பலரும் என் முன்னிலையிலேயே இகழ்ந்து பேசுகின்றதை இருகண்களாலும் காண்கிறேன். அதைப் பார்த்தபின்பும்கூட கணவன் இறந்ததற்காகப் பேரிடர் உற்று வருந்துவதைத் தவிர உயிர் துறக்கக்கூடிய 'கழி காதல்' ஒரு சிறிதும் இல்லாத கொடியவளாகி விட்டேனே. இன்னும் என்னுயிர் இருக்கிறதே; ஐயோ! எத்தகைய இரக்கத்திற்குரிய நிலை இது!' எனப் புலம்பிச் சோர்கிறாள். $

o இவ்வாறு பல்லாற்றானும் மகளிர் துன்புறுதற்குப் போரே அடிப்படை என்று வற்புறுத்தும் மரபு பழந்தமிழ்ப் புலவர்க்கியல்பாகும். அம்முறையில் ஐயனாரிதனார் அக்கால மகளிர் போல வெறுத்த நிலையைத் தெள்ளத்தெளிய இப்பகுதிகளில் புலப்படுத்தியுள்ளார்.

மகளிர்மட்டுமின்றிப் பிற உறவினர் – நண்பர் – முதலியோரும் போரில் மாய்ந்தோர்க்காக நெஞ்சுருகித் துன்புறுவதையும் கவிஞர் விடாது காட்டியுள்ளார்,

"என்னருமை நெஞ்சே, எவ்வுயிர்க்கும் தாய்போல அருள் சுரந்து உதவிய நல்லவனான தம் தலைவன் போரில் பகைப்படையை அழித்துத் தானே அழிந்தான்! (அழிக்கப் போனவன் அழிந்து விட்டானே!) மிகத் தளர்ந்து விட்ட உள்ளமே, நீ என்ன இரங்கத் தக்க நிலையில் கிடக்கின்றாய் பார்த்தாயா? எவர் வந்து எத்தகு பொருளைக் கேட்டாலும் 'இல்லை' என்று சொல்லாமல் கொடுக்கும் கொடைவள்ளலான நம் தலைவன் இறந்ததால் புற்கென்ற செம்மையான நாவினை உடைய புலவர் இரங்கற்குரிய நிலையினராகித் துன்பப்

---

$ "புகழ் ஒழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழ் ஒளிய மாவிசும்பு சேர — இகழ்வார் முன்
கண்டே கழிகாதல் இல்லையால்! கைசோர்ந்தும்.
உண்டே அளித்து! என் உயிர்!" (பொது : 27 : 266)

o மேலும் 'முதுபாலை' என்ற துறையும் மகளிர் கணவனைப்பிரிந்து துயருறலை விளக்குகிறது.

"நீர் மலி கண்ணொடு நின்றேன் நிலையிரங்காய்!
தார் மலி மார்பன் தகையகலம் — சூர்மகளே!
வெள்ளில் விளைவுதிரும் வேய் ஓங்கும் வெஞ்சுரத்துக்
கொள்ளல் நீ கோடல் கொடிது!" (பொது: 15: முதுபாலை:254

படுவதைப்போல நீயும் 'புல்லென' இரங்கத்தக்க நிலையை அடைந்து விட்டாயே!" § இவ்வாறெல்லாம் உலகத்துயிர்கள் உழலுமாறு உயிர்க் கொலை செய்யலாமா? இது முறையா? என எண்ணிப் பார்க்குமாறு புலவர் தூண்டுவதை உணரவேண்டும்.

இதுகாறும் கூறியவற்றான் பண்டைத் தமிழ் மகளிரும் சான்றோரும் போர் என்ற வெறியாட்டை வெறுத்தனர் என்பதை நன்கறியலாம். இவ்வுண்மையை நம்நாட்டு வரலாறு செவ்விதின் உணர்த்த முற்படவேண்டும்.

**ஆண்மை:**

△ ஆண்மை என்பது – மறம் எனப்படுவது – உடல் உரமும், போராற்றலுமட்டுமே என்ற தவறான கருத்து தமிழருக்கு இருந்ததே இல்லை! உள்ளத்தின்மையே உயரிய ஆண்மை என்பது அவர் கொள்கை. பெண்டிர் பேரறமாம் கற்பையும் ஆண்மை – மறம் – எனப் பாராட்டினர். துறவும், தன்னல மறுப்பும், துன்பம் பொறுத்தலும், ஒழுக்கமுடைமையும், கொள்கையில் திரியாமையும்: நிலையிற் றிரியாத அடக்கமும், அறவழி வாழ்வும். ஆன்ற புலமை மாண்பும், தொண்டும் ஆண்மையிற் சீரிய பேராண்மை என்பதே தமிழர் வாழ் விலக்கணம்.

இவ்வுண்மையைத் தமிழிலக்கணமும் நிலை நாட்டுகிறது. தமிழக வரலாறும் நிலை நாட்டுகிறது. எனவே தமிழக மன்பதை வரலாற்றின் தலையாய உண்மை இவ்வரும்பெறல் வாழ்வொழுங்கே என உலகு உணர்தல் வேண்டும்!

இந்நுட்பத்தை ஐயனாரிதனார் 'காஞ்சிப் பொதுவியற்பால' என்ற பகுதியில், முதுமொழிக் காஞ்சி, பெருங்காஞ்சி, பொருள் மொழிக்

---

§ "தாய் அன்னான் தார் விலங்கி வீழத் தளர்வொடு
நீ என்னாய் நின்றாய்! என் நெஞ்சு! அளியை! —ஈயென்றார்க்கு
இல்லென்றல் தேற்றா இகல்வெய்யோன் விண்படரப்
புல்லென்ற நாப் புலவர் போன்று" (பொது: 28; 267)

△ இவ்வுண்மையைத் தெள்ளத் தெளிய விளக்கியவர் வள்ளுவச் சான்றோரேயாவர். அவர் "பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால், ஊராண்மை மற்றதன் எஃகு" (பொருட்) என அழகொழுக விளக்கம் நல்கினர். இக்குறளை அடியொற்றிக் கம்பன், "இன்று போய் நாளை வா" எனக் கூறி இராவணனை விடுத்ததாக வகுத்துரைத்தனன். இக்கருத்தின் விளக்க ஓவியமாகவே 'மெய்ப்பொருள் நாயனார்' வாழ்வோவிய வரலாறும் அமைத்தனர் சேக்கிழார். தன்னுயிர் போகுமாறு தீங்கு செய்தார்க்கும் இரங்கி மன்னித்து உதவும் உயரிய உள்ளம்தான் தனிபெரும் பேராண்மை சான்ற மற (அற) உள்ளம். இவ்வாண்மைதான் போராண்மையினும் தலைசிறந்த சீராண்மையாம். பொறை என்னும் பேரியல்பும் அருளுணர்வும் ஆக்க ஆண்மையின் தனி இயல்புகளாம்.

காஞ்சி, புலவர் ஏத்தும் புத்தேள் நாடு, முதுகாஞ்சி, காடு வாழ்த்து ஆகிய ஆறு துறைகளில் விளக்கியுள்ளார். † மேலும் வாகைத்திணையில் சால்பு முல்லை (31), பொருளொடு புகறல் (33), அருளொடு நீங்கல் (34), என்பனவும் பாடாண் திணையில் (1) பாடாண் பாட்டும் தமிழ் மன்பதைக் கொள்கையை விளக்கும் வரலாற்றுச் செல்வங்களாம்.

மன்பதை வரலாறு.

உலகினர் வாழ்ந்து முடிந்த பின் சேருமிடம்தான் அந்த இடம் ஆம் நன்காடுதான். நினைக்கும் நெஞ்சம் வெறுக்கும் சுடுகாடுதான்! அஞ்சவேண்டிய இடமென மாந்தர் கருதிப் புறக்கணிக்கும் ஊர்க்கு வெளியே ஒதுக்கப்பட்ட இடம்தான் அது! ஆனால் ... அந்தக் காட்டையும் வாழ்த்திப் பாடினர் தமிழ்ப் புலவர் பெருமக்கள்! 'காடு வாழ்த்து' என ஒரு துறையே வகுத்து இடுகாட்டையும் வாழ்த்தினர்! தமிழ்ச் சான்றோரின் நெஞ்சங் கிடந்த இயல்பு எத்தகைத் தெனக் காட்டுதற்கு இவ்வொரு சான்றமையும்!

நல்லோரகத்தைப் பல்கால் கவரும் ஒல்காப் பெரும் புகழ்த்தொல் காப்பியப் பெரியோனும் தம் மருந்திரு நூலில்,

"மலர்தலை யுலகத்து மரபு நன் கறியப்
பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து" – (தொல்:பொருள்:49)

எனக் கவிதை நயமும் கருத்து வளமும் கலைச் சுவையும் பொதுளப் 'பலர் செல்லும் காட்டைப் பாடியுள்ளார்! மலரும் உலகம் கூம்பும் இடம் இடுகாடுதானே! இடுகாட்டையும் ஏன் வெறுக்கவேண்டும்? இன்றியமையா இடங்களில் ஒன்றாக அதை எண்ணினர் தமிழர். இரங்கற்குரிய நெய்தல் பறை (சாப்பறை) ஒலிக்கப் பிறந்தோர் செல்லும் பெருஞ்செலவு இவ்வருங் காட்டிற்குத்தானே! 'நோதலும் தணிதலும் அவற்றோரன்ன' என உணர்ந்த தமிழ்ப் பெருங்குடியினர், 'வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின் இன்னா தென்றலும் இலமே' எனத் தெளிந்தவர்கள். ஆதலாலேதான் 'சாதலும் புதுவதன்றே!' என முழங்கும் முது பேரறிவு நிலையை

† "மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி
பெருங்காஞ்சியே பொருள் மொழிக் காஞ்சி
புலவர் ஏத்தும் புத்தேள் நாட்டொடு
முதுகாஞ்சியொடு காடு வாழ்த்து உளப்பட
மையறு சீர்த்தி வரும் இருமூன்றும்
பொய்தீர் காஞ்சிப் பொதுவியற் பால."

(காஞ்சி பொதுவியற்பால : நூற்பா : 12)

எய்த முடிந்தது. 'உறங்குதல் போலும் சாக்காடு' என மிக மென்மையாக அவ்வினை (?) யைக் கொள்ள வள்ளுவரால் எப்படி முடிந்தது ?

மேல் தொல்காப்பியர் கருத்தை அடியொற்றியே ஐயனாரிதனார், "பல்லவர்க்கு இரங்கும் பாடு இமிழ் நெய்தல் — கல்லென ஒலிக்கும் காடு வாழ்த்தின்று" என இலக்கணம் வகுத்தார். (பொது 35 கொளு)

$ உலகை விட்டு, உறவை விட்டுப் பிரிந்து செல்பவரை எண்ணி உளம் நொந்து, அன்பின் ஆற்றாமையால் அழுது துன்புறுகின்றவர்கள் சிந்திய கண்ணீர் ஆறுபோலச் சுடுகாட்டின் ஒருபால் உளது. அதில் முழுகி ஆடிய ஆந்தையும் கோட்டானும் ஆரவாரித்து இரவு நேரத்தில் அச்சம் மிகுமாறு திரியும் இடம் சுடுகாடாகும். அத்தகுகாடு இவ்வுலகைத் தன் முன்னே பார்த்திருக்கும். அவ்வுலகை அது புறங்கான (தோற்கச்செய்ய) எண்ணிப்பார்த்திருக்கும். காலம் வாய்க்கும்போது தோற்கடித்தும் விடும். இவ்வுலகில் வாழ்வோர் தங்களையே வெற்றிகொண்டு அறிகின்ற ஆற்றலுடையார் யாரும் இல்லை. அதனால்தான் உலகம் சுடுகாட்டை ஒருபோது நோக்க வேண்டியுள்ளது. (தம் முதுகை உணராதவர் பலர் உள்ளனர். அவ்வாறிருப்போர்தம் குறையுணரின் இடுகாட்டை வெல்லமுடியும் என்பது எஞ்சிய நுண் கருத்துப்போலும்!)

‡ இவ்வுணர்வினால்தான் அறம், ஈகை என்பவற்றைச் சான்றோர் வற்புறுத்தினர். 'செல்வத்துப் பயனே ஈதல்' என நக்கீரர் முழங்கியதும் இதனாலேயே. ஈத்துவக்கும் இன்பம் எனக் கொடை தரும் இன்பத்தை ஓர் ஒப்பற்ற பேரின்பப் பேறாக வள்ளுவரும் வகுத்தார், அம்முறை தமிழர் வாழ்வு வரலாற்றைக் காட்டும் ஒப்பில்

---

$ " முன்புறம் தான் காணும் இவ்வுலகை இவ்வுலகில்
தன்புறம் கண்டு அறிவார் தாம் இல்லை!—அன்பின்
அழுதார்கண் நீர்விடுத்த ஆறு ஆடிக் கூகை
கழுது ஆர்ந்து இர வழங்கும் காடு." (பொது : 35 : 274)

" இறந்து போனவர் பால் அன்புடையோர் ஆற்றாமல் அழுததால் நிறைந்த கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கி, ஆந்தையும் கோட்டானும் நிறைந்து இரவுப் பொழுதிலே திரிவதற்குரிய இடமான சுடுகாடு, இந்த உலகத்தின் முதுகினைத்தான் முன் காணும், தனது முதுகுகண்டறியக்கூடியவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லை." என ஓர் உரை கூறுப.

‡ " ஆயா(து) அறிவு அயர்ந்(து) அல்லாந்து அகல் இடத்து
மாயா நிதியம் மனைச்செறீஇ—ஈயாது
இறுகப் பொதியன்மின்! இன்றொரு நாளைக்
குறுக வருமரோ கூற்று." (பொது : 31. பெருங்காஞ்சி : 270)

இம்மேற்கோளுக்கு, உரிய கொளு எண்ணுதற்குரியது.

"மலையோங்கிய மா நிலத்து நிலையாமை நெறி உரைத்தன்று."
(31. கொளு : பெருங்காஞ்சி)

ஓவியமாம். இதன் நுண்மை தெளிந்த ஐயனரிதனர், "உலகத்து மக்களே! சாவு இன்றும் வரக்கூடும். அன்றி நாளையே கூடவரலாம். யார் அறிவர்? இவ்வுண்மையை அணுவளவும் ஆராய்ந்து எண்ணிப் பாராமல் அறிவுச் சோர்வடைந்து-மயக்க உணர்வால்-வீணுக அலைந்து ஓடியாடிச்சுழன்று மிகப் பெரிய—அகன்ற-உலகில் உள்ள கெடாத பெருஞ் செல்வக் குவையை வீட்டினுள்ளேயே சேர்த்துப் பூட்டி வைத்து, அச்செல்வத்தை ஏனைய மக்களுக்கு ஈந்து பயன்படுத் தாமல் வறிதே பாழாக்குபவர்களே, அதுபோலச் செல்வத்தைப் பொதிந்து வைக்காதீர்கள்." என அறிவுறுத்துகிருர்.

சாவின் திறங்காட்டி வாழ்வின் அறம் உரைக்கும் இயல்பு தமிழ் மரபுக்குரியதாம். வாழ்வின் புன்மைகளைப் புரிந்துகொண்டு நன்மை யை நாடுதல் நற்றமிழ் வாழ்வின் நயத்தக்க நாகரிக மாண்பாகும்.

† இளமைப்பருவம் நிலை மாறுவது; அதுமட்டுமல்ல தளர்ந்தும் போகக்கூடியது. முதுமை வந்து சூழ்ந்து தாழ்த்தும். உலகியற்கை யின் உண்மையையும், வாழ்வின் உண்மைநுட்பத்தையும் அறிந்து கொள்ளாமல் ஒடுங்குவர் அத்தகையவர். அம்மக்கள் செல்வம், நிலம், புலம் முதலிய வளமைகளில் மனமயக்கமுற்று அப்பொருட் செல்வத்தையே வியந்து வறிதே பாழாவர். அவ்வகை வியப்பை யும், பொருளாவலையும் ஒழிக்காத அகன்ற இடப்பரப்புடைய உலகில் மக்கள், விழையாமை (வெஃகாமை) போற்றி, உயர்நெறிக்கு-அருள் நெறிக்கு உய்ந்து போகவேண்டும் என எண்ணி முயன்ருல் அவ் வருள் வாழ்வு கிட்டும். இந்நிலையே மாந்தர் எய்துதற்குரிய பேறு ஆம்."

‡ இந்நிலையை அடைதலை விளக்கும் கருத்தைப் "பொருள் மொழிக்காஞ்சி என ஒரு தனித்துறையில் ஐயனரிதனர் விளக்கியுள்

---

† இப்பாடல் 'முதுகாஞ்சி' (34) என்னும் துறை. "தலைவரும் பொருளைத் தக்காங்கு உணர்த்தி நிலை நிலையாமை நெறிப்பட உரைத்தன்று." என்பது கொளு: (தலைவரும்-தலைமையுடைய பொருள், நிலை நிலையாமை நிலை பெறுதலும் — நிலையாமை யும், நிலைத்து நில்லாமை)

"இளமை நிலை தளர மூப்போடு இறைஞ்சி
உளமை உணரா (து) ஒடுங்கி — வளமை
வியப்பு ஓவல் இல்லா வியல் இடத்து வெஃகாது
உயப் போகல் எண்ணின் உறும்" (273).

‡பொருள் மொழிக்காஞ்சி

"எரிந்து இலங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள் மொழிந்தன்று." (கொளு: 32)

"ஆய பெருமை அவிர் சடையோர் ஆய்ந்து உணர்ந்த
பாய நெறிமேல் படர்ந்து ஒடுங்கித் — தீய
இருளொடு வைகாது இடம்படு ஞாலத்து
அருளொடு வைகி அகல்" (271)

ளார்." ஆராய்ந்துண்மை தெளியும் பெருமை வாய்ந்த ஒளிரும் சடையினராகிய அறிவினுல் சீரிய சான்றோர் ஆராய்ச்சி செய்து அறிந்த பரந்த ஒழுக்கத்தினை—முறையினை—நினைந்து, அதனைப்பற்றி ஆன்றவிந்தடங்கி; தீமை பயக்கும் இருள் நிலை – மயக்க நிலையில் வீழாமல் ஒளி வாழ்வான பெரிதான உலகத்தில் ‘உலகளாவிய அருள் உணர்வொடு’ பொருந்தி வாழ்ந்து அகன்ற அகவெற்றி பெற்று உயர வேண்டும்" என்ற அரிய கொள்கை தமிழர் அகவரலாற்று ஓவியமாகும்.

இவ்வருள் நிலை எய்தப்பெறும் வழியினை வகுத்துரைப்பர் பிறிதொரு துறையில் $ பொய்யற்ற பண்டைத் தமிழ்ப் புலவர் (திருவள்ளுவர்) அல்லது (சங்கப் புலவர்) ஆராய்ந்துணர்ந்து விரும்பி வாழக்கூடிய மேன்மைக்குரிய உயர்ந்தோர் சூழல் எத்தகையது எனின், அதனை ஒரு சிறு ஐயமும் இல்லாமல் ஆய்ந்தறிந்து கூறுவதாஞல் அவ்விடம் மிகவும் விரும்பத்தக்க நல்லிடமாம். (வெய்ய) ஆண்டுப் பிரிவுக்கு இடமில்லை. அங்கே இரத்தல் என்னும் இழிநிலை கிடையாது. மிகைப் பற்றுகிய அவா இல்லை. வினை காரணமாக அமையும் துயரும் (தீவினையின் விளைவும்) ஆண்டுக் கிடையாது. இகல் எனப்படும் பகை – மாறுபாடு – கூட அங்கு இல்லை. தாழ்வும் கிடையாது."

இத்தகு நெறி சார்ந்த உயருலகமாகவே வாழ்வுலகம் திகழ வேண்டுமென்று முயன்ற மன்பதை தமிழ்மன்பதையே என்பதை இவ்வரலாறு உணர்த்துகிறது.

உலகினர் யாவரும் நன்கு உணரும் வண்ணம் உலகில் நிகழ்ந்து வரும் அறம், பொருள், இன்பம் என்னும் மும்மை உறுதிப் பொருள்களின் தீர்ந்த கருத்தினை யாவராலும் புகழ்தற்குரிய புலவர் கூறிடும் துறை முதுமொழிக் காஞ்சி என்பதாம்.

இதனை, "பலர் புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருள் முடிபு உணரக் கூறின்று."
(30. முதுமொழிக்காஞ்சி கொளு – பொதுவியல்)

என நூற்பாவால் விளக்குகிருர். மேலும்,

"ஆற்றின் உணரின் அருள் அறமாம் ஆற்ருர்க்குப்
போற்ருர் வழங்கிற் பொருள் பொருளாம்—மாற்றிப்

---

$ "நுழைபுலம் படர்ந்த நோய் அறு காட்சி
விழைபுலம் கடந்தோர் வீடு உரைத்தன்று" (33 புலவர் ஏத்தும் புத்தேள் நாடு)

"பொய்யில் புலவர் புரிந்து உறையும் மேலுலகம்
ஐயம் ஒன்று இன்றி அறிந்து உரைப்பின் — வெய்ய
பகல் இன்று; இரவு இன்று; பற்று இன்று; துற்று இன்று
இகல் இன்று இளிவரவும் இன்று." (272) (சான்ருேர் உறையும் மேலுலகத்தன்மையை ஐயமின்றிக் கற்பனை செய்து உரைத்தால், அவ்வுலகில் வெவ்விய பகல் இல்லை; இரவும் இல்லை; பாசமும் இல்லை வினைநுகர்ச்சியும் இல்லை. மாறுபாடும் இல்லை; தாழ்வும் இல்லை.)

புகலாது ஒழுகும் புரிவளையார் மென் தோள்
அகலா(து) அளித்(து) ஒழுகல் அன்பு." (பொது:30:269)

" நூல் நெறியால் முறைப்படி ஆராய்ந்து தெளிந்தால் அருளுடைமையே அறமாகும் தமக்குச் செல்வம் வேண்டுமே என்றெண்ணுமல் சிக்கென இவருமல் செல்வத்தை வழங்கினுல் அப்பொருளே உறுதி நல்கும் உண்மைப் பொருளாம். கணவன்பால் ஈடுபட்டு ஒன்றிய உள்ளத்தை மீண்டும் மாற்றிப் பிறரொருவரை விரும்பாமல் கொழுநன் உள்ளம் கழிபேருவகை கொள்ளுமாறு காதலொடு கடமை வாழ்வு ஆற்றும் கற்பு சான்ற வளையணிந்த பெண்டிரின் மென்மையான தோள்களைப் பிரியாமல் அவர்க்குத் தண்ணளி செய்து ஒழுகுவதே உண்மை இன்பம் என்பதாம்.''

தமிழ் மன்பதையின் கொள்கை – வாழ்வு முறை – வரலாற்றடிப் படையில் தெள்ளத் தெளிய இவண் சுட்டிய கருத்துக்களால் உணரலாம்.

வரலாறு குற்றங்களின், கொலைகளின் (போர்) தொகுப்பாக இருக்கக்கூடாது. அது ஒரு மன்பதையின் அல்லது நாட்டின் நல்லியல்புகளை உணர்த்தி, வருங்காலத்தின் வளமைக்கு ஆர்வமூட்டி அறிவுறுத்த எழுந்த ஞால இலக்கியமாம். அடைவுகளின் அறிவுரையாக அமையாத வரலாறு உண்மை வரலாறு அன்று.

வரலாற்ருல் மக்கள் பெரும் உணர்வெழுச்சி ஆக்கம் விளைவிப்பதாகவும், மன்பதை வளர்ச்சிக்குரிய நன்னேக்கத்தை ஊட்டுவதாகவும் அமையவேண்டும். முந்தைப் பெருமை பின்னைப்பெருமைக்கு வித்தாக விளையும் வண்ணம் வரலாறு பயன்படவேண்டும். அவ்வாறு பயன்படாவிடின் வரலாறு எழுவதன் நோக்கமே வீண்படும்.

வரலாறு வாழ்வியலின் ஒவ்வொரு கூறேடும் தொடர்புடையது. வாழ்வே வரலாற்றின் நிகழ்வுதானே! வாழ்வொழுக்கம்தான் வரலாற்று வடிவம்.

தமிழக வரலாறு, தனியொரு நாட்டுக்கு மட்டுமின்றி ஞால ஒழுகலாற்றையே வளர்த்த மாண்பினது. இனியும் வளர்க்கும் உயிர் இயல்பினது. இந்நுட்பம் தெளிந்து தமிழர் வரலாற்று நோக்குடையராதல் வேண்டும்.

மகளிர் மனப்பான்மை மன்பதையின் அடிப்படை இயல்புகளையும், வாழ்வின் மறை ஒட்பநுட்பங்களையும் வெளியாக்கும். உலக மக்கள் படிப்படியாகப் பல நிலைகளைக் கடந்து வளர்ந்து வந்திருக்கின்றனர். ஆனுல் பல படி நிலைகள் ஆங்காங்கே பழம் வரலாற்றின் சுவடுகளாகப் பதிந்து நின்று விடும். இத்தகு பழஞ்சுவடுகள்

பெண்டிர் மன்பதையால் போற்றிப் பேணப்பட்டுவரும். அவ்வகையில் புறப்பொருள் வெண்பாமாலை உணர்த்தும் வரலாற்றுண்மைகள் நமக்கு அரியமறைச் செய்திகளாம்.

வல்லரசு – கோனின் வலிய ஆட்சி – மக்கள் நலனுக்கு மாறுன அரசு – அதிகாரம் தமிழகம் ஏற்காததாம். மன்னனின் செங்கோன்மை, அவன் அரசியலின் ஆட்சிச் செம்மையின்பாற்பட்டதே. அதனுல்தான் குடிமக்கள் அரசுக்காக உயிரை, உடைமையை, உள்ளத்தைத்தையும் ஈந்துவக்கத் தாமே விழைந்து முன்வந்தனர். ஆட்சி, நலன் செய்து சிறந்து அமைந்தால்; மக்கள் அவ்வரசை நன்றியோடு போற்றுவர் என்ற நல்லுண்மையை நம் நாட்டு வரலாறு தெள்ளெனக் காட்டுகிறது.

மக்களின் செல்வாக்கு அரசின் செல்வாக்கை நேரிடையாகத் தொடர்புபடுத்தி ஆண்டுவந்த அரும்பெறல் உண்மை தமிழக அரசியல் வீரலாறு உணர்த்தும் அரிய அறிவுரையாகும்.

உயர்ந்த ஒழுக்க வாழ்வுக்கும் ஒப்பற்ற உள்ளச் செம்மை அகப் பண்பாடு வேண்டற்பாலது நனி இன்றியமையாததாம். அவ்வழகிய பண்பு தமிழ் மக்களின் அகத்தும் புறத்தும் உயிரினுஞ் சிறந்துயர்ந்தோங்கிய மாண்பு எண்ணத்தக்கதாம்.

'மனம்போல வாழ்வு' என்ற தொடர் தமிழர் உள்ளவியல்பு காட்டும் இலக்கண நூற்பா! மன்னனையும் அரசையும் மக்கள் போற்றுவதற்கு அடிப்படை அவர்களிடையிருந்த தவிரா ஒன்றிய உறவே.

† "உள்ளத்தில் அறம் இருந்தால் ஒழுக்கத்தில் அழகொளிரும் 'ஒழுக்க எழில்' நிலைபெற்ருல் அகத்தில் அன்பு பொங்கும். அக அன்பு செழித்தால் நாட்டில் முறை நிலைக்கும் நாட்டில் ஒழுங்கமைதி நிலைபெறின் ஞாலத்தில் அமைதி நிலவும்" — இவ்வமைப்பே தமிழக வரலாறு கற்றுத்தரும் நுண்ணுண்மை.

பண்டைத் தமிழக வரலாறு இன்றைத் தமிழகத்தை வளர்த்து நாளைய நல்லுலகை உருவாக்குமாக!

---

† If there is rightousness in the heart, there will be beauty in the character.
If there is beauty in the character, there will be love in the home
If there is love in the home, there will be order in the nation.
If there is order in the nation, there will be peace in the world.

— A Chinese proverb —

—— :0: ——

# இராசேந்திர சோழ நல்லூர், வாய்க்காலும், கல்வெட்டும்.

வித்துவான். சி. கோவிந்தராசனார்.

தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

தஞ்சை நகருக்கு வடக்கு எல்லையாகச் செல்லும் வெண்ணாற்றின் வடகரைவழியே மேற்குநோக்கி ஏழுகல்தொலைவு செல்வோமாயின், தென்பெரம்பூர் என்று அழைக்கப்படும் சிற்றூரையடையலாகும். இவ்வூரினருகே காவிரியின் கிளையாகிய வெண்ணாற்றிலிருந்து வெட்டாறு பிரிக்கப்படுகின்றது. பிரிவின் தலைப்பாகயாறுகட்கிடையே அமைந்துள்ள கூர்முனை நிலப்பகுதியின் அகட்டில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதை வழியாக பெரியதொரு வாய்க்கால் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்க்கால் வரலாறு கொண்ட முதல் இராசேந்திரனுடைய பெயரால் ''இராசேந்திரன் கால்'' என்று அழைக்கப்படுகிறது.

தஞ்சையிலிருந்து வடக்கே திருவையாறு என்னும் சிற்றூர்க்குச் செல்லும் நேர்வழியின் இடையே அம்மன்பேட்டை என்றழைக்கப்படும் கிராமம்உளது. பல்லவர் ஆட்சிக்காலத்தில் இப்பகுதி ''காடவன் மகாதேவி (சதுர்வேதிமங்கலம்)'' என்றழைக்கப்பட்டுள்ளது. காடவன் என்பது, பல்லவர்கட்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். பல்லவ மன்னனொருவனின் மனைவியார் செய்த அறமாகவோ, அல்லது அவரின் நினைவாகவோ இப்பகுதி இருந்திருக்கின்றதென்பதையே ''காடவன் மகாதேவி'' என்னும் பெயர் சுட்டுகின்றது.

பல்லவ மன்னருடைய ஆட்சியில் சோணாடு பல்லவப் பேரரசிற்குட்பட்டிருந்த தென்பது வரலாறு கண்டதேயாம். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்ட நிருபதுங்க பல்லவனுடைய காலத்தில் 'வீர மகாதேவி' 'பிருதிவீ மகாதேவி சதுர்வேதி மங்கலம்' ''மகாதேவி'' என்றெல்லாம் ஊர்களின் பெயர்கள் பல்லவ அரசியரின் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளதை வரலாறுகள் கூறுகின்றன. மற்றும் நிருப துங்கனுடைய ஆட்சிக்காலத்தில் ''காடவன் மகாதேவியார்'' என்னும் பல்லவ அரசியார் திருவாலங்காடு முதலிய கோயில்களுக்குப் பல நிபந்தங்கள் அளித்துள்ளதாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. (A. R. No. 460 of 1905) எனவே அப்பல்லவப் பேரரசியாரின் பெயராலேயே இப்பகுதி விளங்கி இருக்கக்கூடுமென்று தோன்றுகின்றது.

இதனைப் பல்லவர் ஆட்சியைச் சார்ந்து வளர்ந்தோங்கிய சோழர் ஆட்சியில், "செம்பியன் மாதேவி" "திரிபுவன மாதேவி" என்றெல்லாம் சோழவரசியரின் பெயர்களால் ஊர்கள் வழங்கப் பட்டு வந்துள்ளதைக் கொண்டும் ஒப்பிட்டறிய எதுவாகின்றது.

பல்லவர் காலத்தில் காடவன் மகாதேவி என்ற பெயருடன் நின்ற இப்பகுதி வளமின்றி இருந்தமையால் வளம் செய்தல் வேண்டியே, "தென்பெரம்பை" என்று தேவாரம் சுட்டும் பகுதி யிலமைந்த தென்பெரம்பூரிலிருந்து மேற்குறித்த கால்வாயினைப் பிற்காலச்சோழர் ஏற்படுத்தி அதன் வழியாக இப்பகுதியை வளம் பெறச்செய்ததோடு பழம் பெயரை மாற்றி "இராசேந்திர சோழநல்லூர்" என்றும் அழைத்துள்ளனர். இவ்வாறு காடவன் மகாதேவி யென்றும், பின்னர் இராசேந்திர சோழநல்லூர் என்றும் வழங்கப்பட்டுவந்த இப்பகுதி பிற்காலத்தில் இருபிரிவாகி, மேற்புறம் பழைய பெயர் சுருங்கியவடிவில் இராசேந்திரம் என்றே இருக்கவும் கீழ்ப்புறம் கி. பி. பதினாறும் நூற்றாண்டில் தஞ்சை நாயக்க அரசில் அமைச்சராகவும் அரசகுருவாகவும் இடம் பெற்று விளங்கிய கோவிந்த தீட்சதருடைய மனைவி நாகமம்மா என்பவரின் நினைவாக "அம்மன் பேட்டை" என்று மாற்றம் பெற்றும் உள்ளது.

எஞ்சி நிற்கும் இராசேந்திரத்தின் இடையே செல்லும் இராசேந்திரன் வாய்க்காலின் தென்கரையில் பழமையான சிவன்கோயிலொன்றுளது. இங்குள்ள கல்வெட்டுகளில் இப்பகுதி "பிடாகை இராசேந்திர சோழ நல்லூர் என்றும், கோயில் "பொது முத்தீசுவரம்" என்றும் கூறப்பட்டுள்ளன. தஞ்சைப்பெருநகரின் வடக்கு எல்லையைச் சார்ந்துநின்ற சிற்றூர்களில் ஒன்றாக இப்பகுதி யிருந்தமையினாலேயே பிடாகை யென்று குறிக்கப்பட்டுள்ளது. பொது முத்தீசுவரத்தின் சூழல் இன்று நன்செயும் தரிசுமாகக் கிடப்பினும், நிலத்தை அகழும் காலங்களில் மக்கள் ஒரு காலத்தில் வாழ்ந்தமைக்குரிய பொருள்கள் கிடைக்கின்றன.

கருவறை, முகமண்டபம், திருமுற்றம் என்ற அளவில் அமைந்துள்ள பொது முத்தீசுவரத்தின் கருவறை மேற்புறச் சுவரில் கிராமகாரியம் செய்கின்ற கூட்டப் பெருமக்கள் செய்வித்த கல் வெட்டொன்றும், முகமண்டபச்சுவரில், கோமாறபன்மர் திரிபுவன சக்கரவர்த்திகள் குலசேகர தேவரின் ஆட்சி யாண்டு முப்பதில் எழுந்த கல்வெட்டொன்றும் முழுவடிவில் உள்ளன. அவற்றுடன் மண்டபத்தின் வடபுறச் சுவரில் கோயிலைக்கட்டிய சிற்பியருடன் தலைமைக் கொற்றனுடைய பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

o——o

# இராசேந்திர சோழநல்லூர், பொது முத்தீசுவரம் கோயில் கல்வெட்டுகள்.

## கல்வெட்டு—1

கல்வெட்டுள்ள இடம் :– கருவறை மேற்புறச்சுவர்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ விருதராச பயங்கரச் சருப்பேதி மங்கலம் பன்னிரண்டாவதுக்கு மஹநாயிறு முதல் கிராம காரியஞ் செய்கிற கூட்டப்பெருமக்கள் எழுத்து. நம்மூர் கணக்கு

2 பலிவலமுடையான் கிர்ரமவூழியன் கண்டு நம்மூர் பிடாகை இராசேந்திர சோழநல்லூர் உடையார் பொதுமுத்தீஸ் வரமுடைய நாயனுர்க்கு நாமத்துக்காணியான

3 நிலங்கள் அருடியாய் வரிசை செல்லாத இன் நிலத்துக்கு ஊர்மரியாதி இறுக்கப் பற்ருமையாலே இக்கோயிலில் சிவ பிராமணன் ஓடி பொய்யூரைச் செல்கையில் பெரு

4 மாள் திருமேனி கல்யாண திருமேனியாகவும் ஒய்யா நதமாகவும் இன் நாயனுர்க்கு பூருச்செல்ல இந்நாயனுர் திருநாமத்துக் காணியான நிலங்களில் பாவதி வதிக்கு மேற்கு வேளான் வாய்க்காலுக்குத் தெற்

5 க்கு முதல் கண்ணுற்று கரு ஆம் சதிரத்தில்...... நாலாஞ் சதிரத்திலும் மிகுதிக்குறை உள்பட ரூ ஞ7S இன்னிலம் அரைமா அரைக்காணியும் இந்நாயனுற்கு பூசை இறையிலியாகக் குடுத்தோம் இன்னிலம் ௰உ – ஆவது

6 முதல் இறையிலியாக பேசி கணக்கிலே நிறுத்திச் செய்யக் கடவன்ருகச் சொன்ளும். இப்படி செய்கையால் ஊர்க் கணக்கு உத்தம பிரியன் எழுத்து. நிலம் அரைமா அரைக் காணி சீரங்கநாத பட்ட (ஸ்ய) ருடையதும் இருஷிகேஸ பட்டருடையதும்

7 விஞயக தாஸப்பட்டருடையதும் நிலம் அரைமா அரைக்காணி. விசையபட்ட ருடையதும் வேணைய பட்டருடையதும் சீராம பட்டருடையதும் பாதமுக்தி பட்டருடையதும் நிலம் அரைமா அரைக்காணிக்கு மகாபட்ட ருடையதும் மஹாதேவ பட்ட ருடையதும் மஹாதேவபட்ட புஷ்பவன நாயக தக்ஷணமூர்த்தி பட்டருடையதும் மஹாதேவ பட்டருடையதும் கந்த குமார பட்டருடையதும்...............................(unfinished)

## கல்வெட்டு.—2.

கல்வெட்டுள்ள இடம் :— முகமண்டபத்தின் தென்புறச்சுவர்.

1 (a) ஸ்வஸ்திஸ்ரீ சோமாறபன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகர தேவற்கு யாண்டு ௩௰ ஆவது, அகரம் ஸ்ரீ காடவன் மஹாதெவி........(சதுர்வேதிமங்கலம்)...... ...

1 (b) ஸ்ரீ விருதராஜ பயங்கரச் சருப்பேதி மங்கலம் கான நாயிறு முதல் கிராமகாரியஞ் செய்கிற கூட்டப் பெருமக்களோம்.

2 இவ்வூற்ப் பிடாகை இராசேந்திர சோழநல்லூர் உடையார் பொது முத்தீஸ்வரம் உடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு

3 இன்த ஊர் உடையார் பொது முத்தீஸ்வரம் உடையார்க்கு இறையிலியாகக் குடுத்த நிலத்தால்

4 பூசை நடவாமல் பெருமாள் திருமேனி கல்யாண திருமேனி யாகவும் உடையார் தொண்டைமானுர்க்கு வி

5 ஜை யார்த்த மாகவும் கிராமத்துக்கும் அற கார்யார்த்தமாகவும் இன் நாயனுர்க்கு பூஜை இறையிலியாகக் குடுத்த பிடாகையான

6 இராசேந்திர சோழநல்லூரில் பாவதி (வ) திக்கு மேற்கு விவற்ஸா வாய்க்காலுங்கு வடக்கு முதல் கண்ணுற்று இரண்டாஞ் சதிரத்து இன்த

7 நாயனுர்க்கு திருநாமத்துக்காணி இக்கோயிலுக்கு தெற்கும் வடக்கும் தடி இரண்டினுல் தடி உள்பட ரூ ம் மா 7 s ௫ கூ இந்நிலம் அரைமாவரைக்காணிக் கீழ் நாலுமாவும்,

இவ்வாண்டு கார்முதல் இந்நாயனுர்க்குப் பூசை இறையிலிக்குக் குடுத்தோம் இந்நிலம் பற்றி பூசைக் குற்றப்படாமல் நட

8 த்தவும் இய் நிலம்... ...ஒன்ருவது ஒழுகவு ....... யாக்கவும் இந்நாயனுர்க்கு இறையிலியாக நிறுத்த விட்டோம் இந்நிலம்

9 கொண்டு பூசையில் குற்றப்படாமல் நடத்தவும் சொன்னேம். இப்படி செய்க பணியால் ஊர்க்கணக்கு புலிவலம் உடையான் கிராம பிரியன் எ...(ழுத்து).

## கல்வெட்டு—3

கல்வெட்டுள்ள இடம் :— முகமண்டப வடபுறச்சுவர்.

1 உதயமூர்த்தி போதராயன்.

2 வேலப்ப சேர்வை.

முருக கொத்தன்.

# புடமிட்ட பொன் மதுரை.

K. S. மகாதேவன் M. A. B. Sc.

பொன்னைப் புடமிட்டு மாசு நீக்குவது பொற்கொல்லர் செய்யும் தொழில். மாசேறிக்கிடந்த மதுரையைப் புதுக்கக் கண்ணகியின் கற்புக்கனலை அடிகளார் கருவியாகக் கொண்டதோடு, பொற்கொல்லன் ஒருவனையும் படைத்துச் செயல்படச் செய்திருப்பது பெரிதும் சுவைபயக்கும் ஒன்ருக உள்ளது!

**சிலம்பு மதுரை.**

சிலம்பில் நாம் காண்கின்ற 'தீதுதீர் மதுரை'யை ஊன்றிப் பார்க்கும் எவரும் அதனை ஏனைய சங்க இலக்கியங்களிலே சொல்லப்படும் 'தமிழ் நிலை பெற்ற' நன்மதுரையோடு ஒப்பிடுவதற்கு உளந்துணிய மாட்டார்! சிலப்பதிகார மதுரையில், முன்னர்த் தமிழகம் என்றுமே கண்டிராத அளவில் பரத்தையர்ப்பாசியும், வருணைக்களிம்பும் படிந்து காணப்படுகின்றன. புயலெனத் தோன்றிப் பூம்புகாரில் புகுந்து அலைக்கழித்த 'உருப்பசியின் வழித்தோன்றல்கள்' மதுரையிலும் இடம் பெற்றுத் திரண்டிருந்தனர் என்ற செய்தியினை,

' தாக்கணங்கனையர் நோக்குவலைப் பட்டாங்கு
அரும் பெறலறிவும் பெரும் பிரிதாகத்
தவத்தோராயினும். ......... ..........
... ... ... ... ... ... ... ... ... ... ... ...
ஏம வைக லின்றுயில் வதியும்
பண்ணும் கிளையும் பழித்த தீஞ்சொல்
எண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்''

நமக்கு அறிவிக்கின்றன.

எண்ணெண்கலையோர் எண்ணிக்கையில் மிகுந்ததனுல், கலையுலகம் கடமையுலகத்தை விழுங்கும் நிலையும் ஏற்பட்டிருந்தது! பூம்புகாரில் ஓலை தூக்கிச் சென்ற ஒரு கோசிகாமணியைத்தான் காண்கின்ரேம் ஆனுல், மதுரையிலோ, கடமைக்கு முழுக்குப்போட்டு விட்டுக் கலையுலகை நாடித் திரிபவர் ஒரு தனி ஊரே அமைத்துக் கொள்ளும் அளவிற்கு எண்ணிக்கையில் பெருகிவிட்டனர் என்ற செய்தியை,

'வரி நவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரி நூல் மார்பர் உறைபதி.''

நமக்கு அறிவிக்கின்றது.

மேலும், அகமும் புறமும் குழம்பியதால் ஏற்பட்ட கலை-காதல் குழப்பம் அரசர் பின்னேனிடம் இருந்ததைப் பூம்புகாரில் கண்ட நாம் அதனை இங்கு அரசன் அரண்மனையிலேயே காண்கின்ரேம்.

கூடன் மகளிர் ஆடற்றோற்றமும்
பாடற்பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலனுள்ளங் கவர்ந்தன ... ... ...''

என்று மன்னனின் தேவியே முடிவு செய்யும் நிலை ஏற்படுகிறது!

எல்லாவற்றினும் மேலாக, ''யாது மூரே யாவருங் கேளிர்'' என்று உலக ஒருமைப்பாட்டிற்கு முதற்குரல் எழுப்பிய தமிழினம் மதுரையில் எவ்வாறு நிலை குலைந்து கிடந்தது என்பது நெஞ்சம் உடைக்கும் செய்தியாக உள்ளது! தமக்கே உரிய நடையில் அடிகளார் அந்த அவல நிலையை எழுதிக்காட்டி இடித்துணர்த்திச் செல்வது பெரிதும் இறும்பூது விளைவிப்பதாக இருக்கின்றது ''பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும்'' என்ற பொதியில் மணம் கமழும் பாண்டிநாட்டுக் காடுகளிலே வாழ்ந்த அஃறிணை விலங்குகளும், இயற்கைக் கூறுகளும் ஒத்த உரிமையோடு நட்பும் பாராட்டி நடந்து கொண்ட முறையைக்

''கோள் வலுளியமுங் கொடும்புற்றகழா
வாள் வரிவேங்கையும் மான்கண மறலா
அரவும் சூரும் இரைதேர் முதலையும்
இடியும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா''

என்று எடுத்துக்காட்டி விட்டுப் பின்னர் நாட்டின் தலைநகரிலே மக்களாகப் பிறந்தவர்கள் எத்தகைய 'நாகரிகத்தைக்' கொண்டிருந் தனர் என்பதை முரண்படுத்திக் கூறுகின்றார்! அடிகளார் எடுத்துக் காட்டிச் செல்லும் அந்த 'நாட்டு நாகரிகத்தை'க் கவிமணி யவர் களின் நடையில் கூறவேண்டுமானால்

''காட்டில் ஓநாயும்—நரியும்
கடுவாயும் புலியும்
நாட்டு நாகரிகம்—கண்டு
நகைக்கலாச்சுதையோ!''

என்றுதான் சொல்ல வேண்டும்! விலங்குகள் காட்டில் கூடிவாழ்ந் தாலுங்கூட மக்களால் நாட்டில் ஒத்துவாழ முடியாத அவல நிலை ஏற்பட்டு விட்டது. ஒன்றாகத் தோன்றி உலகில் தழைத்திருந்த தமிழ் இனம் வருணச்சுவரால் பிரிக்கப்பட்டுப் 'பால் வேறு தெரிந்த நால்வேறு தெருவில்' வாழவேண்டிய இழிநிலைக்கு இறங்கிவந்து விட்டது! வருணப் பாகுபாடு தமிழன் கண்ட செந்நெறிக்கு ஒவ்வாத வொன்று என்பதில் இருவேறு கருத்து எவருக்கும் இருத்தல் இயலாது.

''ஓடும் உதிரத்திலும்
ஒழுகுங் கண்ணீரிலும்
தேடிப்பார்த்தாலும் சாதி
தெரிவதுண்டோ அப்பா?''

என்று கவிமணி கேட்பது போன்று, அன்றும் வருணத் தீயை

நாட்டில் பரப்பித் தீத்திறம் புரிந்தோரை எதிர்த்து நின்று

"முற்சடைப்பலனில் வேருகிய முறைமை சொல்

நால் வகைச்சாதியிந் நாட்டில் நீர் நாட்டினீர்!"

என்று முழங்கிய நற்றமிழர்களும் தமிழகத்தில் இருந்தே வந்திருக்கின்றனர். இருந்தாலும் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற பொதியில் நெறி குன்றி, 'நால்வருணம் இறைவனின் படைப்பு' என்று பேசும் புன்மை நெறி எப்படியோ தலையெடுத்து விட்டது. தமிழர்களுக்கிடையில் தகர்க்க முடியாத வருணச்சுவர்கள் எழும்பின! வரலாற்று உணர்வுபெற்று வருணச்சுவரை எவரேனும் தகர்த்தெறிந்து விடாதபடி காவல் புரிவதற்கென்றே 'வருணப்பூதங்கள் மதுரைத் தலைநகரிலே வாழ்ந்துகொண்டிருந்தன! வருணவேற்றுமை என்றும் அழியாச்சின்னமாக இருக்க வேண்டுமென்பதையே நோக்கமாகக் கொண்ட இப்பூதங்கள், உணவிலும் உடையிலும், தொழிலிலும் ஒவ்வொரு சாதியும் வேறுபாட்டினை எப்படிக் கீட்டிக் கொள்ள வேண்டும் என்பதனை முன்மாதிரியாக இருந்து நிகழ்த்திக் காட்டிவந்த செய்தி சிலப்பதிகாரத்திலே பரக்கப் பேசப்படுகிறது.

மதுரையின் இந்த அவலநிலையைக் காணும் எவர்க்கும் அதனைப் புடமிட்டு மீண்டும் பொன்மதுரையாக்கிப் பொதியில் ஒளி வீசச் செய்யத்திறம்படைத்த தமிழ்நெஞ்சம் ஒன்று பிறந்து வாராதா என்ற ஏக்கமே எழுந்து நிற்கும். இத்தகைய நன்மக்களின் ஏக்கத்தினைப் போக்கும் அருமருந்தாகவே கண்ணகி என்னும் கற்புக்கனல் தமிழுலகில் தோன்றியது! ஆனுலும், மாசேறிக்கிடந்த மதுரையை எடுத்துச் சென்று கற்புக்கனலின் காலடியில் இடும் பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வது? இளங்கோ படைத்த பொற்கொல்லன், அப்பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்து நிற்கின்ருன்! பொற்கொல்லன் பாத்திரம் ஒருபுதிர்.

பொற்கொல்லன் பாத்திரம் இளங்கோவின் இணையற்ற படைப்பு என்பதை இன்றும் பலர் உணர்ந்ததாகத் தெரியவில்லை! அடிகளார் அவனுக்குக் கொடுத்துள்ளபாகம் சிறிது; ஆனுலும், ஒரே காதையில், சில வரிகளிலே மின்னி மறையும் அவன் கதையின் போக்கிற்கே திருப்பு மையமாக அமைந்து விடுகிருன்! உலகில் தீயவர் என்று எவரும் தனியாகப் பிறப்பதில்லை. மக்களாகப் பிறந்தவர்கள் தாம் சூழ்நிலையின் நெருக்கடியால் தீயவராக மாறிவிடுகின்றனர். எனவே, ஒருவன் செய்யும் செயல்களுக்கு அவனைச் சூழ்ந்தபடி இருக்கும் சமூகமும் பொறுப்பேற்றே ஆகவேண்டியிருக்கின்றது! பொற்கொல்லனைப் படைத்த அடிகளார், பல நிலைகளில் வைத்து அப்பாத்திரத்தை நமக்கு அறிமுகப்படுத்துகின்ருர். 'நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர' முன் நடந்து வரும் பொன்வினைக் கொல்லனைப் 'பொய்த் தொழிற் கொல்லன்', 'கருந் தொழிற் கொல்லன், கூற்றத் தூதன்' என்றெல்லாம் படிப்படியாகப் பல பெயர் கொடுத்து அழைக்கின்ருர்.

பொன்வினைக் கொல்லனாகப் பொலிவு பெற்றிருந்தவன் இறுதியில் கூற்றீத்தூதனாகிக் கொடுஞ்செயல் புரிய வேண்டிய கட்டம் எப்படி உருவாகிறது? எதுஅவன் உள்ளத்தில் நின்று அவனை இழிசெயல் புரிய இழுத்துச் செல்கின்றது? இவை, சமூக உளவியலாராய்ச்சியாளர்கள் ஆய்ந்து முடிவுகாண வேண்டிய சுவையான செய்திகளாகும்,

"கரந்து யான் கொண்ட
காலணி ஈங்குப்
பரந்து வெளிப்படா முன்னம்
புலம் பெயர் புதுவனில்
போக்கு வன் யான்"

என்ற அவன் தனிமொழி அவன் ஒரு குற்றவாளி என்பதையும், அரச முறைமையினின்றும் தப்ப வேண்டியே முன்பின் அறியாத ஒருவன் மீது பழிசுமத்தப் போகிறான் என்பதையும் தெளிவு படுத்துகின்றது. ஆனாலும், இத்தனிமொழி அவன் கூற்றத் தூதனாகக் கோலங்கொண்ட அவன் வாழ்க்கையின் இறுதிக் கட்டத் திற்கு விளக்கம் தருகின்றதேயன்றி நேர்மைப் பாதையிலிருந்து விலகிப் பொய்த் தொழிற் கொல்லனாக, கருந்தொழிற் கொல்லனாகத் திரிந்த வாழ்வின் முற்பகுதி நிலைக்கு விளக்கம் கூறவேயில்லை.

"தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன் வினைக் கொல்லன்"

என்று அறிமுகப்படுத்தும் ஒரு பெருமகன் ஏன் காலணியைக் கரந்து கொள்ளும் கயமையைச் செய்யவேண்டும்? தன் திறமைக்கும் பெருமைக்கும் ஏற்ப நன்மகனாக அவன் மதுரையில் வாழ்வதற்குக் குறுக்கே நின்றது எது?

### மதுரை அளித்த மதிப்பு

பொன்னும் மணியும் கொண்டு அருவிலை நன்கலம் அமைக்கும் கலைவல்லோனாகவே பொற்கொல்லனை அடிகளார் அறிமுகப்படுத்து கின்றார். நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வருவதும், தென்னவன் பெயரொடு சிறப்புப்பெற்றதும், அவன் முடிவேந்தராலும் மதித்துப் பாராட்டப்படும் தகுதியுடையவன் என்பதை அறிவிக் கின்றன. ஆனாலும், வருணமாசேறிக் கிடந்த மதுரைச் சமூகத்தின் கண்முன்னர் மன்னன் கொடுத்த விருதுகள் மதிப்புப்பெறவில்லை! பொற்கொல்லனின் பிறப்புத்தான் எந்த ஆற்றலாலும் மாற்ற முடியாத ஒரு களங்கமாக முன்வந்து நின்றது. அதன் விளைவாகத் தெருவில் போகும்போதுகூட அவன் மனிதன் என்ற உரிமையோடு நிமிர்ந்து நடக்க முடியாத நிலையில் 'விலங்கு நடை' நடந்து விலகிச் செல்கின்றான்! மனிதனாகப் பிறந்தவன் நடந்துகாட்டும் இந்த விலங்கு நடைக்கு.

"இழிகுலத்தோனாகலின் உயர்ந்தோர் வந்த விடமெல்லாம் விலங்கி நடத்தல்" என்று அரும்பத உரைகாரரும்,

"மேன்மக்களைக்கண்டு ஒதுங்கி நடத்தல்" என்று அடியார்க்கு நல்லாரும் விளக்கம் தருகின்றனர்!

ஆம்! 'சான்றோர் சான்றோர் பாலராப' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்துவதுபோன்று பொன்னையும், மணியையும் ஒரு வழிப்படுத்தி நன்கலம் அமைக்கும் நாட்டின் விருதுபெற்ற ஒரு நற்கலைஞனைப்போற்றிப் பெருமையடைவதற்குமாறாக 'இழிகுலத்தோன்' என்று பழித்துப் பேசும் தீத் திறத்தை மதுரைச் சமுதாயம் புரிந்துவந்தது. உலகில் "பிறந்த" குற்றத்திற்காகவே ஒருவன்மீது 'இழிந்தவன்' என்ற பழியைச் சுமத்தியதோடு, அதனை அவன் உளம்விரும்பி ஏற்றுத்திரியவேண்டும் என்று எண்ணுவதினும் 'தீத்திறம்' வேறு இருக்க முடியாதன்றோ? தன்னை உரிமையோடு வாழவிடாமல் கொடுமை செய்யும் சமூகத்தினிடத்தில் தான்மட்டும் நன்றியுடையவனாக, நல்லவனாக நடந்துகாட்டவேண்டும் என்று எண்ணுவோர் உலகில் எத்துணைப்பேர் இருந்துவிடமுடியும்? 'இழிந்தவன்' என்று ஒதுக்கப்பட்ட ஒருவனிடம் திருடாமை, பொய் சொல்லாமை போன்ற மக்கட் பண்புகளை எதிர்பார்க்கத்தான் ஒரு சமுதாயத்திற்கு என்ன உரிமை இருக்கமுடியும்?

உலகமே தலைவணங்கிப் பாராட்டவேண்டிய உயர்வினைப் பெற்றிருந்த ஒரு கலைஞன் வருணத்தின் கொடுமையால் மக்கட் பாதையிலிருந்தே 'விலகி' நடந்து விடுகின்றான்; மனிதத்தன்மை மடியப் பெற்றுச் சமுதாயத்திடம் நீங்காத காழ்ப்புக்கொண்டு விடுகிறான்! சமுதாயத்திடத்து அவன் கொண்டிருந்த குமுறல், அரசர்பின்னோன் என்ற தன் வருணப் பெருமை தோன்றக் கோவலன்,

"காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதியோ?"

என்ற ஒருமைக் கூற்றில் வினவியபோது

"அடியே னறியே னாயினும் வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான்"

என்று அவன் கூறும் மறுமொழியில் பொங்கி வழிகின்றது! இத்தகைய காழ்ப்புத்தீயே பொன் தொழிற் கொல்லனைக் கருக்கிக் கருந்தொழிற் கொல்லனாக மாற்றிவிட்டது. தனக்குக் கிடைக்காத நீதிக்கும் முறைமைக்கும் தான்மட்டும் ஏன் மதிப்புக்கொடுக்க வேண்டும்? கலைபயின்ற கை கரவாடலையும் பயின்றது; கலைஞனாக வாழவழிவிடாத சமூகத்திற்குப் பாடம் கற்பிக்கக் கூற்றத் தூதனாக மாறவும் அவன் ஆயத்தமாகிவிட்டான்! கலைஞனைக் கொலைஞனாக்கிய மதுரைச் சமுதாயம் விதைத்ததை அறுக்கவேண்டிய நேரமும் இறுதியில் வந்துசேர்ந்தது!

அரசும் விரும்பும் அளவில் பொற்கொல்லன் கொண்டிருந்த அறிவு நுட்பம், சூழ்ச்சித்திறம், நாவன்மை ஆகிய அனைத்தும் சமுதாயத்திற்கு எதிராக இனித் திரும்பிச் செயல்படப் போகின்றன!

அவன் விரிக்கும் வலையிலிருந்து புலம்பெயர் புதுவோனுயினும், புவியாளும் மன்னனுயினும், அருந்திறல் மாக்களாயினும் தப்புவது என்பது இனி என்றுமே இல்லை!!

**களத்திலே பொற்கொல்லன்**

கோவலன், பொற்கொல்லனிடம்தான் யார் என்பதைக் கூற வில்லை. ஆயினும்,

"காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவி லையிடுதற் காதியோ......"

என்ற அவன் கேள்வியினைக்கொண்டே அவனைப் 'புலம் பெயர் புதுவன்' என்று பொற்கொல்லன் புறிந்துகொண்டதோடு, கோவலன் கையிலிருக்கும் சிலம்பினைக் காவலன் தேவியின் காலணி யோடு தொடர்புபடுத்தி நீதியை நெளிக்க ஒரு திட்டமும் தீட்டி விடுகிருன்!

மன்னன் கோவலனை நேரில்காண நேர்ந்தால் தன் சூழ்ச்சி வெளிறித் திட்டம் தகர்ந்துவிடலாமன்றோ? எனவே,

"விறன்மிகு வேந்தற்கு விளம்பியான் வரவென்
சிறுகுடி லங்கணி ருமான்......"

என்றுகூறிக் கோவலனைத் தன் வீட்டிலேயே 'சிறை' வைத்து விடுகிருன்.

இனி, மன்னன் அவையகத்து அறிஞர்களைக் கலக்கும் வாய்ப் பில்லாத நிலையில், 'மந்திரச் சுற்றம் நீங்கி' மனைவியின் ஊடல் தீர்க்க வகையறியாது சிந்தரி நெடுங்கண் சிலதியர் துணையை நாடி நிற்கும்நேரம் பொற்கொல்லன் எதிர்பார்த்திருந்த ஒரு பொன்னுன நேரமாக அமைந்துவிடுகிறது!

ஆனுலும், கட்டுக்காவலோடுகூடிய அரண்மனைச் சிலம்பினை உளவறிந்த ஒருவன்தானே கவர்ந்து சென்றிருத்தல்கூடும்? புலம் பெயர் புதுவனெருவன் அதனை எப்படித் திருடியிருக்க முடியும்? இந்த ஆராய்ச்சி மன்னன் உள்ளத்தில் எழுந்துவிட்டால் ...? பொற் கொல்லன் மன்னனையும் முந்திக்கொண்டு

"கன்னக மின்றியும் கவைக்கோ லின்றியும்
துன்னிய மந்திரம் துணையெனக் கொண்டு
வாயிலாளரை மயக்கு துயிலு றுத்துக்
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்"

என்று விளக்கங்கூறி ஆராய்ச்சியை முளையிலேயே கிள்ளி முற்றுப் புள்ளி வைத்துவிடுகிருன்!

அரியணையிலிருந்து 'கொல்லச் சிலம்பு கொணர்க' என்று பிறக்கவேண்டிய கட்டளை அந்தப்புர வாயிலிலிருந்தபடியே 'கொன்றச் சிலம்பு கொணர்க' என்ற தீர்ப்பாகத் திரிந்து வெளிப் பட்டுவிடுகிறது!

பொற்கொல்லன் எதிர்பார்த்தது இதுவே! நீதியை நெளித்து எண்ணியது முடித்த மகிழ்ச்சியிலேயே பொற்கொல்லன் இருந்துவிட

வில்லே. மாருக, நிர்வாக இயந்திரத்தையும் தானே முன்னின்று சுழற்றத் தொடங்குகிருன்! ஏவலாளரை இழுத்துக்கொண்டு கோவலன் இருந்த இடத்தை குறுகுகிருன். கோவலன் வாய்திறந்தாலுங்கூட உண்மை உலகிற்கு வெளிப்பட்டுவிடும் என்று எண்ணிய பொற்கொல்லன் அவன் வாய்திறந்து 'வந்தவர் யார்' என்று கேட்பதற்குள் தானே முந்திக்கொண்டு

"வலம்படு தானே மன்னவன் ஏவச்
சிலம்பு காணிய வந்தோர் இவர்"

என்று செய்தியை முடித்துவிடுகிருன். ஆனுலும், கோவலனின் தோற்றத்தைக்கண்ட அருந்திறல் மாக்களோ,

"இலக்கண முறைமையினிருந்தோ னீங்கிவன்
கொலேப்படு மகனலன்"

என்று கூறிவிட்டனர். இறுதி நேரத்தில் காரியம் கெட்டுவிடுமோ என்று ஐயுற்ற பொற்கொல்லன் தன் நாவன்மையைக் கட்டவிழ்த்து விடுகின்ருன். கள்வர்கள் கைக் கொண்டு திரியும்

"மந்திரம் தெய்வம் மருந்தே நிமித்தம்
தந்திரம் இடனே காலம் கருவி"

ஆகியவற்றைத் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் நீண்டதொரு சொற்பொழிவைக் கேட்டோர் மெய்சிலிர்க்கும்படி செய்து முடிக்கின்ருன். அருந்திறல் மாக்களும் குயவன் திரிகைக் கள்ளிமண்ணுகிக் கொல்லன் வழி நெளிந்து விடுகின்றனர். இறுதியில்

"கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள் வாள் எறிய"க்

காரியத்தை முடித்துக்கொண்ட பொற்கொல்லன் மதுரையைப் புடமிட்டுப் பொசுக்கக் கற்புக் கனலுக்கு அழைப்பு விடுத்து விடுகின்ருன்!

கதையின் இடையில் தோன்றி நடமாடிய கூற்றத்தூதன் பின்னர் என்ன ஆனுன் என்ற செய்தி சிலப்பதிகாரத்தில் இல்லே. இருந்தாலும் எண்ணியது முடித்த ஒரு வெற்றிப் பாத்திரமாகவே இளங்கோவடிகளார் அவனேப்படைத்து விட்டிருக்கின்ருர். ஏனெனில் 'விலங்கு நடை'யிட்டு அவனே மதுரையின், தெருக்களிலே நடக்கச் செய்த 'நாற்பால்' வருணப்பூதமும், இப்பொழுது மதுரையில் இல்லே; அவை 'பாற்பாற் பெயர்ந்து' பறந்தோடி விட்டன! பொதியில் பண்பிற்கே புறம்பான வருண ஆட்சி தழைப்பதற்கு இடங் கொடுத்துக் கடமை தவறிய மன்னனும்

"தென்புலங்காவல் என்முதல் பிழைத்தது" என்று தவற்றை ஒப்புக்கொண்டு உலகிலிருந்தே மறைந்துவிட்டான். இனி, எல்லாவற்றிற்கும் நிலைக்களமாக இருந்து இடங்கொடுத்துவந்த மதுரை எங்கு ஓடித் தப்பமுடியும்? பொசுங்கிப் பொசுங்கி மாசு நீங்க வேண்டியதைத் தவிர வேறு வழி அதற்கு இல்லை!

**நெருப்பை வென்ற நீர்!**

தீயைத் தெய்வமாகக்கொண்டு கண்ணகி வாய்திறவாது வலம் வந்தகாலம் இன்று மாறிவிட்டது! ஏனெனில், இன்று கண்ணகியின் கண்கள் உதிர்க்கும் நீரின் ஆற்றலைப் பொறுக்கலாற்றாது தீக் கடவுளே பின்னின்று ஏவல் கேட்கின்றது!

"மாபத்தினி, நின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி யிந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவலுடை யேனால் யார் பிழைப்பாரீங்கு"

என்றுகேட்ட தீக்கடவுளுக்குக் கண்ணகி கட்டளையிடும் நிலையை எய்திவிட்டாள்.

இப்பொழுது எவரை நோவது? எய்தவனிருக்க அம்பினை நோவது அறிவுடைமையாகாதன்றோ? பொற்கொல்லன் கூற்றத் தூதனாக மாறினான், மன்னவன் அறிவு மழுங்கித் தவறிழைத்தான். கோவலன் கொலைக்கு இவ்விருவரைமட்டும் காரணமாகக்கொண்டு விடலாமா? மதுரையில் ஏறிக்கிடந்த வருணக்களிம்பு பொன்தொழில் வல்லோனைக் கூற்றத் தூதனாக்கியது; அந்நகரில் படிந்துகிடந்த பரத்தையர்ப்பாசி மன்னவன் குடும்பத்தில் பூசலை எழுப்பி அவன் அறிவை அறைபோகச் செய்துவிட்டது. இவ்விருவகைக் கேட்டிற்கும் இடமளித்துத் தீத்திறம் புரிந்துவந்த மதுரைச் சமுதாயமே உண்மைக் குற்றவாளி! இவ்வுண்மையை உணர்ந்தே கண்ணகியும்

"யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோ நகர் சீறினேன் ..... .....!

என்று குற்றத்தை நகரின்மீதிட்டுக் கூறுகின்றாள்.

அறிஞரையும், அறவோரையும், பசுவையும், பத்தினிப் பெண்டிரையும் தன் சினத்தினின்றும் விலக்கி, வருணத்தை வளர்க்கும் தீத்திறத்தைப் புரிந்துவந்த 'தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்ற கட்டளையைத் தீக் கடவுளுக்குக் கண்ணகி பிறப்பிக்கின்றாள்.

தீத்திறத்தார் பதியும், பரத்தையர் மனைகளும் மதுரையிலிருந்து மறைகின்றனர். வருணமாசும், பரத்தையர்ப் பாசியும் நீங்கிய மதுரை புடமிட்ட பொன் மதுரையாகிப் பொதியிலொளி வீசத் தொடங்கியது!

# ஒரு சொல்.

## சாலை இளந்திரையன்.

இலக்கண நூற்பாக்களில் அடைமொழியாகவோ அசைநிலையாகவோ ஒரு சொல் வரும். அந்தச் சொல் இல்லாமலே நூற்பாவின் பொருள் தெளிவாகவும் நிறைவாகவும் இருக்கும். உரையாசிரியர், "இந்தச் சொல்லை ஆசிரியர் சொல்லியிருப்பதால் இன்னின்ன செய்திகளையும் கொள்ளவேண்டும்" என்று நூற்பாவில் சொல்லாத செய்திகள் சிலவற்றையும் அடுக்குவார். "இந்தச் சொல்லை வைத்துக்கொண்டு தொடர்பில்லாதவைகளை எல்லாம் நூற்பாவில் புகுத்தலாமா?" என்றால், "விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்" என்பது இலக்கணம் என்பார்.

உரையாசிரியர், இந்த விதப்புக்கிளவியின் பேரால் விவரிக்கும் செய்திகள் காலப்போக்கில் வளர்ந்தவைகளாக இருக்கும். அவைகளைக்கொண்டு பழைய இலக்கணத்துக்குள் ஏன் புகுத்தவேண்டும் என்று பலர் முகம் சுளிப்பார்கள். ஆயினும், சுருங்கிய நூற்பாவில் இலக்கண விதிகளை அமைக்கும்போது எங்கோ ஒன்றிரண்டு விடுபட்டுப்போகவும் கூடுமாகையால், விதப்புக்கிளவி வாய்ப்பையும் உரையாசிரியர்களுக்குக் கொடுக்கவே வேண்டியிருக்கிறது.

இலக்கணத்தில் உள்ள நிலை இது. சிலபோது கவிதையிலும் இப்படிச் சிலசொற்கள் இடம் பெறுவதுண்டு. பாடலின் ஓசை குறையுமிடங்களில் நிரப்புவதற்குப் பெரும்பாலும் இச்சொற்கள் வரும். அளபெடையும் இந்த வகையைச் சேர்ந்ததே. ஆனால், கவிதையைப் பொறுத்தவரையில் இச்சொற்களைப் பற்றி நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். காரணம், கவிஞன் அறிந்தோ அறியாமலோ 'உபரி'யாகப் பயன்படுத்துகிற சொற்களே கவிதையின் உயிர்நிலையாக அமைந்துவிடுவதுண்டு. ஒரு சிறிய அளபெடையே சாதாரணமாக நாம் அந்தக் கவிதையில் காணாத அகன்றாழ்ந்த கவிதைச் சிந்தனைகளை நம் உள்ளத்தில் எழுப்பி விடுவதும் உண்டு.

"தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்,
வானம் வழங்காது எனின்"

என்பது வள்ளுவ வான்சிறப்பு. "மழை பெய்யாதாயின் அகன்ற உலகின்கண் தானமும் தவமும் ஆகிய இரண்டு அறமும் உளவாகா" என்பது இதன் உரை. இதில் "உலகம்" என்று சொல்லவந்த வள்ளுவர் "வியன் உலகம்" என்று சொல்லுவானேன்? அகன்ற உலகத்தில்தான் இப்படி, சுருங்கிய உலகத்திற்கு மழை தேவை இல்லை என்று பொருளா? பொதுவாக "உலகம்" என்று சொல்லியிருந்தால்தான் போதுமே; வியன் உலகம் என்று ஏன் சொல்ல வேண்டும்? முதலடியில் ஓசை குறைகிறது; அதற்காக "வியன்" என்பதைச் சேர்த்துக்கொண்டார் என்று சொல்லிவிடலாமா?

இந்தச் சொல் ஓசையைச் சரிக்கட்டுவதும் உண்மைதான். ஆனால் அதே ஓசையை, ஏதாவது பொருளற்ற ஒரு சொல்லால் நிறைவு செய்திருக்க முடியாதா? வள்ளுவர் ஏன் அப்படிச் செய்யவில்லை?

இப்படி எண்ணிப்பார்க்கும்போதுதான் இச்சொல்லின் கவிதைத் தன்மை நமக்குப் புலப்படுகிறது: இரண்டு வீரர்களில் ஒருவனின் வலிமையைப் பற்றிப் பேசும்போது, மற்றவனுடைய வீரதீரங்களை எல்லாம் விவரித்து விட்டு, 'அந்தப் பெரிய வீரனையே இவன் வென்றுவிட்டான்' என்று சொன்னால் வெற்றி வீரனின் பெருமை மிகைப்பட்டுத் தோன்றுகிறது. வான்சிறப்புப் பேசுகின்ற வள்ளுவரும், இந்த ஒரு சொல்லை (வியன்) ஆண்டதன் மூலம் இப்படி ஒரு காட்சியைத்தான் நம்முன் கொண்டுவந்து நிறுத்தி விடுகிறார்.

இந்த உலகம் இருக்கின்றதே, இது மிகப் பெரியது, — "வியன் உலகம்"! நீண்டு அகன்றது; ஏரியும் குளமும் எடுத்தது; மலையும் மடுவும் நிறைந்தது; இடத்துக்கு இடம் வெவ்வேறு வளங்கள் மலிந்தது. மிகப் பெரியது. ஆயினும் என்ன? மழை ஒன்றுமட்டும் இல்லாவிட்டால் இந்தப் பெரிய உலகத்தில்; — எத்தனையோ வளங்கள் மலிந்த இந்த உலகத்தில், எதுவும் நடைபெறாது. இதுவே வள்ளுவர் நம் உள்ளத்தில் எழுப்ப விரும்பும் உணர்ச்சி: சிந்தனை. "வியன்" என்னும் சொல் இல்லாமல் பாட்டைப் படித்தால் இப்படி ஓர் எண்ணமே எழாது.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்"

என்பது கல்வியின் பெருமையைப் பற்றிக் கூறுமிடத்தில் வருகிற ஒரு பாடல். இதில் வரும் "இலங்கு நூல்" என்னும் தொடர், விலங்கொடு" என்பதனோடு இனிய பிராசமாக அமைகிறது. ஆனால் வள்ளுவர் மிகமிகச் செட்டானவர். ஒரே ஒரு நோக்கத்தில் மட்டும் ஒரு சொல்லை அவர் பெரும்பாலும் ஆள்வதில்லை. எதுவும் பன்னோக்கு (Multipurpose) உள்ளதாக இருக்கவேண்டுமென் பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர் வள்ளுவர்.

சாதாரணமாக, "இலங்கு நூல் கற்றார்" என்பதற்குக் கற்றார் என்றும் ஏனையவர் என்பதற்குக் கல்லார் என்றுமே பொருள் உரைப்பதுவழக்கம். அதைக்கூடத்தெளிவாகச்சொல்லத்தெரியாமலா அல்லது அப்படிச்சொல்ல விரும்பாமலா, "இலங்கு நூல் கற்றார்" என்று சொல்லியிருப்பார் வள்ளுவர்? இல்லை. விளக்கமுற்ற, சிறந்த என்னும் பொருள் உடைய இலங்கியம் என்னும் சொல்லை வேறொரு நோக்கத்தையும் கருதியே அவர் இந்த இடத்தில் ஆண்டுள்ளார்:

வள்ளுவரின் சிறப்பு என்னவென்றால், அவர் எந்தப் பொருள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலும் அவருடைய அடிப்படைக் கொள் கைகள் சிலவாயினும் அந்த ஒன்றில் குவிந்து நிற்கும்படியே பேசுவார். இக்காலத்தில், அவ்வத் துறையாளர் அவரவர் துறை

பற்றியே பேசுவர். பிறரைப் பற்றி எண்ணிப் பார்ப்பதுமில்லை; சில காலத்துக்கு முன்வரை சில தமிழ்ப் பேச்சாளர்கள் யாரைப் பற்றிப் பேசுகின்றார்களோ அவரையே (அன்றைக்கு மட்டும்!) 'உலகப் பெரியார், உலகப் பேரறிஞர், உலக மகாகவி' என்றெல்லாம் பேசி வந்தார்கள். வள்ளுவர் அப்படிப்பட்ட "விடுபூச் சிந்தனையாளரல்லர்; அவர் சிந்தனை ஒவ்வோரிடத்திலும் அவர் கருத்துக்களில் சிலவற்றை யாயினும் பொருள்களையும் ஊடுருவியே நிற்கும்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை" என்று கொல்லாமையின் சிறப்பினை எடுத்தோதுமிடத்திலேயே, "யாம் மெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற" என்று சொல்லியிருப்பதை மறவாமல்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்று முடித்த திறனாளர் அவர். ஆதலினால்தான், இலங்கு நூல் என்னும் இடத்திலும் நமக்கு வேறு ஒன்றையும் நினைவுபடுத்துகிறார்.

அது என்ன? அதுதான் கல்வியைப் பற்றி மற்றோரிடத்தில் அவர் தந்துள்ள செய்தி. முன்பு, "கற்க கசடறக் கற்பவை" என்று, "கற்கத் தக்க சிறந்த நூல்களை மட்டுமே கற்க" என்பதனைக் கூறினார். அதை நினைவுபடுத்துவதன் மூலம் இப்பாடலின் பொருளை ஆழ அகலங்கள் மிக்கதாக ஆக்கிவிட்டார் வள்ளுவர். கற்கவேண்டிய சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்பவர் மனிதர் என்றால் பிற ரெல்லாம் விலங்குகள். இங்கே கல்லாதாரை மட்டுமல்ல. பயனற்ற வைகளைக் கற்றுப் பொழுதை வீணாக்குகின்றவர்களையும் விலங்குகள் என்றே தள்ளிவிடுகிறார் வள்ளுவர். 'இலங்கு" என்னும் சொல்லுக்கு இவ்வளவு ஆழமான பொருள் இந்த இடத்தில் இருக் கிறது. "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" என்பதுபோல, "கல்வி என்பது கற்கத் தகுந்த சிறந்த நூல்களைப் பயில்வதே" என்பது வள்ளுவர் கருத்து. அந்தப் பெரிய அரிய கருத்தை "இலங்கு" என்னும் ஒரு சொல்லை ஆண்டதன் மூலம் விளக்கி விட்டார் இப்பெருந்தகை,

அந்தகக்கவி வீரராகவர் பாடியதாகத் தனிப்பாடல் திரட்டில் உள்ளது பின்வரும் பாடல்:

"தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக் கினியானே?" — வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்?"

வினாவும் விடையுமாக அமைந்துள்ள இப்பாடல், திருவேங்கடம் சிறந்தவன் (வள்ளல்) என்றும் அவன் தமையனான கண்ணுக்கினி யான் யார்க்கும் ஒன்று ஈயாதவன் என்றும் குறிப்பிடுகிறது. இந்த

வள்ளலுக்கு இப்படிப்பட்ட ஒரு தமையன் பிறக்கலாமா? என்று வருந்துகிறார் முதல்வர்; இரண்டாமவர் வினாவாகவே தம் விடையைச் சொல்லுகிறார்: "உலகம் புகழும் சீதேவி (திருமகள்)க்கு ஒருமூதேவி அக்காளாகப் பிறந்தாளே; அது ஏன்?'"

இவ் வினாவின் வலிமையினாலேயே விடை கிடைக்கின்ற சிறப்பு ஒருபுறம் இருக்க, "முன்" என்னும் சொல்லை இறுதியில் வைத்து, கவிதைக்கு ஒரு துடிப்பைக் கொடுத்துவிட்டார் கவிஞர். மூதேவி என்பதே மூத்தவள் என்னும் பொருளைத் தருவதால் "முன்" என்பதற்குத், 'திருமகளுக்கு மூத்தவளாக' என்று பொருள்கொள்ள வேண்டியதில்லை.

வேறு எப்படிப் பொருள் கொள்ளலாம்? இந்த ஒரே சொல்லுக்கு இரண்டு வகையாகப் பொருள்கொண்டு இருவேறு துடிப்பு மிக்க காட்சிகளை அந்த ஒரு சொல்லில் காணும்படி அச்சொல் அமைந்திருக்கிறது. "ஏதோ, இப்போதுதான் முதல் முதலாக இப்படி ஓர் அதிசயம், — நல்ல தம்பிக்குத் தீய அண்ணன் பிறந்த அதிசயம், — நடந்துவிட்டது போலக் கேட்கின்றீரே. முற் காலத்திலேயே ஆக்கம் நல்கும் சீதேவிக்கு, அதையே போக்கும் ஓர் அக்காள் பிறந்திருக்கிறாளே உமக்குத் தெரியாதா? என்று வினவுவதாகக் கொள்ளலாம். கொண்டால், "இது உலக இயல்புதான்" என்ற செய்தி கிடைக்கிறது.

'முன்' என்னும் இச் சொல்லின் கவிதை ஆற்றல் வேறொரு பொருளையும் விரிக்கிறது. சீதேவியாருடனே செய்ய திருப்பாற்கடலில் மூதேவி ஏன் பிறந்தாள் முன்? இருவரும் பாற்கடலில் பிறந்தவர்கள்; உடன் பிறந்தவர்கள். அதிலேயே மூதேவி எப்போது பிறந்தாள் என்று கவனித்தீரா? முன்; ஆம், முதலில் பிறந்தாள்; முந்திக்கொண்டு பிறந்துவிட்டாள்! மோசமானவைகள் அவசரப்பட்டு முந்திக்கொள்வது உலக இயல்பு. இங்கேமட்டும் கண்ணுக்கினியான் முந்திப் பிறவாமல் பிந்தியா பிறப்பான்?

இதையே, 'தம்பியின் (அல்லது தங்கையின்) நற்குண நல்லொளி தொடக்க முதலே நன்கு தெரிவதற்காக, அண்ணன் (அல்லது தமக்கை) முந்தியே பிறந்து கொடுங்குண இருள்பரப்பித் தயாராக நிற்கின்றார்கள்' என்றும் வேடிக்கையாகச் சொல்லலாம்.

தனியே பார்க்கையில் ஒரே ஒரு சொல். அது கவிதையில் இடம்பெறும்போது அதற்கு இத்துணைச் சிறப்பு ஏற்பட்டு விடுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் தொடக்க முதல் இன்றுவரை இவ் ஒருசொற் சிறப்பு மண்டிக் கிடக்கிறது. அவற்றைத் தொடர்ந்து சென்று காணும் இன்பம் சிறந்த கவிதை இன்பம் என்று சொல்லவும் வேண்டுமோ?

---

# ஊருணி.

மருதூர்: மணிவண்ணன்.

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.'

என்பது திருக்குறள் நூலில் உள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்களில் ஒரு குறளாகும். இது ஒப்புரவறிதல் என்ற அதிகாரத்தில் ஐந்தாவது குறள்.

## உலகு அவாம் உத்தமன்.

பிறருக்குத் துன்பம் இழைப்போன் அதமன் என்றும், தன்னலம் மட்டும் விழைவோன் மத்திமன் என்றும், பொதுநலம் பேணி இன்பம் அடைபவன் உத்தமன் என்றும் மக்களைப் பெரியோர் மூவகையாகப் பிரிப்பர்.

இம் மூவரில் உத்தமனாலேயே உலகம் வாழ்கிறது. உலகம் வாழ உறுதுணை புரிபவன் உத்தமனே யாவன். அவனுடைய எண்ணம், சொல், செயல் அத்தனையும் உலகைப் பற்றியும், உலக மக்களைப் பற்றியுமே சூழ்ந்திருக்கும். குறுகிய எண்ணமும், சிறுத்த அறிவும் இல்லாதவனாய்ப் பரந்த சிந்தையும், நிறைந்த அறிவும் உடையவனாய் விளங்குவான்.

தன்னிடம் உள்ள செல்வத்தைத் தான்மட்டும் துய்க்காமல் உலக மக்கள் அனைவரையும் விரும்பி, அவர்களுக்கு வாரி வழங்குவான். அதனால் செல்வம் நிறைந்த ஒருவன் தான்மட்டும் வாழ நினைப்பது தவறு; உலக மக்கள் யாவர்மீதும் விருப்பங்கொள்ள வேண்டுமென்றே திருவள்ளுவர், 'உலகு அவாம்' என்று கூறினார்.

## பெருமை அறிவாளன்.

பேரறிவாளன் என்பதற்குப் பெருமை வாய்ந்த அறிவினை உடையவன் என்பது பொருள். அறிவாளன் என்றுமட்டும் கூறாமல் பெருமை என்ற அடைகொடுத்துப் பேரறிவாளன் என்று சிறப்பித்துக்கூறி இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அறிவு என்றவுடன் நம் நினைவுக்கு வருவது நூலறிவு மட்டுமே யாகும். மணலில் தோண்டத் தோண்ட நீர் சுரப்பதைப்போல, பல நூல்களைக் கற்கக் கற்க வளர்ச்சி அடைவது அறிவாகும். துன்பம்

வந்த சமயத்தில் காப்பாற்றிப் பகைவரால் அழிக்க முடியாததாய், நன்மை தீமைகளை உய்த்துணர வைப்பதும் அறிவாகும். ஆனால் அறிவு என்பது இத்துடன் நின்று விடுவதில்லை. அதனைத் தெய்வப் புலவர் திருவள்ளுவனாரே.

'அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போல் போற்றாக் கடை.'

என்று எடுத்தியம்பி யுள்ளார்.

பிற உயிர்களின் துன்பத்தைத் தனக்குவந்த துன்பமெனக் கருதி அதைத் தீர்க்க வில்லையேல் அறிவினைப் பெற்றதனால் என்ன பயன் என்று வினா மூலம் நம்மை வினவுகின்றார். அதனால் அறிவு என்பது உயிர்களின் துன்பம் தீர்த்து இன்பம் மிகச்செய்வதில்தான் அடங்கி இருக்கிறது. இதுவே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறிவாகும். மனிதர்க்குச் சிறப்பாக அமைந்த ஆறாவது அறிவும் இதுவேயாகும்.

இத்தகைய அறிவைப் பெற்றவனே பிறர் படும் துன்பம் உணர்ந்து அதை நீக்கத் தன்னிடம் உள்ள செல்வத்தையும் கொடுத்து உதவுவான். அதனால்தான், அவனை அறிவாளன் என்று சொல்லாமல் பேரறிவாளன் என்று சொன்னார் இது எத் துணையோ சிறப்புப் பொருந்தியது அல்லவா!

## பேரறிவாளன் திரு.

நல்ல மனமும் ஈகைக் குணமும் கொண்டவனிடம் செல்வம் சேர்வதில்லை; செல்வம் சேர்ப்பவனிடம் மனமும் குணமும் அமைவதில்லை. இது உலகின் இயற்கைக் கூறுபாடாக இருக்கிறது. இக்கருத்தையே 'நல்லார்கண் பட்ட வறுமை' என்ற தொடரும் வலியுறுத்துகிறது. ஆகவே, இயற்கை எதுவாயினும் பிறர் நலம் நாடும் பேரறிவாளனிடமே பொருள் சேரவேண்டும் எனவும், அப் பொருள் உலக மக்களுக்குப் பயன்பட வேண்டும் எனவும் விரும்பு கிற திருவள்ளுவரின் எண்ணம் இக்குறளில் நன்கு வெளிப்படு வதைக் காணலாம்.

திரு என்றால் செல்வம். செல்வம் என்றால் பொருட் செல் வத்தை மட்டும் குறிப்பிடுவதில்லை. திருவள்ளுவரே கல்விச் செல்வம், செவிச் செல்வம், அருட் செல்வம், என்று செல்வம்

பலவகைப் படுதலை எடுத்தியம்பி யுள்ளார். அதனால் திரு என்பது செல்வத்தை மட்டும் குறிக்கவந்ததன்று. பேரறிவாளன் உலகிற்குத் தன்னால் இயன்ற அறிவாலும், பேச்சாலும், செயலாலும் நன்மை புரியத் தயங்கமாட்டான் என்பதையும் 'பேரறிவாளன் திரு' என்ற தொடர் நன்கு விளக்கி உணர்த்துவதையும் உணரலாம்.

## ஊருணி நீரும் பேரறிவாளன் திருவும்.

ஊரில் வாழும் மக்கள் நீர்குடிக்கத்தக்க குளத்திற்கு ஊருணி என்று பெயர். ஊரின் நடுவில் இருக்கும் குளம் ஏற்றத் தாழ்வு கருதாமல் அவரவர் நீர்வேட்கைக்குத் தக்கவாறு நீர் வழங்குவதைப் போல பேரறிவாளனும் மக்களில் உயர்வு தாழ்வு கருதாமல், அவரவர் விரும்பும் அளவுக்கு மனம், மொழி, மெய், செல்வங்களால் உலக மக்களுக்குப் பயன்படுவான்.

நீர்க்குளம் காலை, பகல், மாலை, இரவு, நடுஇரவு என்ற கால வேறுபாடு இன்றி, நல்லோர்க்கும் தீயோர்க்கும் நீர்வழங்கி வேட்கையைத் தணித்தல்போல, பேரறிவாளனும் காலமும்பொழுதும் கருதாமல், இன்னார் இனியர் என்று எண்ணாமல் உதவுக என வந்தோர்க்கு உடம்பாலும், பொருளாலும் உதவி செய்வதில் தவற மாட்டான்.

குளத்தில் நிறைந்த நீர் எப்பொழுதும் குளிர்ந்திருப்பதைப் போல பிறர் நலம் நாடும் பேரறிவாளனின் மனமும் எப்பொழுதும் குளிர்ந்து கருணை நிறைந்ததாக இருக்கும்.

ஊருணி ஊரவர் அனைவரும் ஒன்று சேர்ந்துவரினும் உண்ணு வதற்குத் தக்க வசதியைப் பெற்றிருப்பதைப் போலத் தம்மிடம் எத்தனைபேர் தம்மை நாடிவரினும், உள்ளங்களங்காமல் அத்தனை பேருக்கும் உள்ளத்தில் இடம் அளித்து வரவேற்கும் பேரன்பைப் பேரறிவாளனும் பெற்றிருப்பான்.

குளம் ஊரின் நடுவில் அமைந்து அழகு செய்வதுடன் மக்கள் எளிதில் சென்று நீர்கொண்டுவரத் தக்க எளிமை உடையதைப்போல, பேரறிவாளனும் காட்சிக்கு எளியவனாயும், பழகுவதற்கு இனிய வனாயும் விளங்குவான் என்ற கருத்தும் இங்கே தொக்கி நிற்கிறது.

மக்களின் நன்மையைக் கருதியே நல்லவன் ஒருவன் ஊருணியை வெட்டி வைத்திருக்கிறான். அதுபோல, உலக மக்களுக்கு

உதவிசெய்ய வேண்டுமென்று கருதியே இறைவன் பேரறிவாளனைப் படைத்திருக்கிறான்.

குளம் அழுக்கு நீரைத் தவிர்த்து மழைநீர், ஊற்றுநீரையே தன்னுட்கொண்டு, உயிர்களுக்குச் சுவைநீர் தருவதுபோல, பேரறிவாளனும் கெட்டவழியில் வரும் பொருளைப் பெறாமல் நீக்கிவிட்டு, நல்வழியில் வந்த பொருள்களைக்கொண்டே மக்களுக்குச் சேவை புரிகின்றான்.

இத்தகைய கருத்துக்களைத் தன்னுட்கொண்ட ஊருணிநீர் என்ற உவமையைத் தெய்வத் திருவள்ளுவரால் அன்றி வேறு யாரால் இயம்ப இயலும்!

## நீர் நிறைதலும் செல்வம் பெருகுதலும்.

பேரறிவாளன் செல்வம், ஊருணி நீரைப்போன்றது என்னுமல் நீர் நிறைந்திருந்ததைப் போன்றது என்று விரித்துக் கூறியிருப்பதால் செல்வம் நிறைந்து இருத்தலைக் குறிக்கிறது.

குளத்து நீர் எடுக்க எடுக்கக் குறைந்தாலும் பருவகால மழை நீரும், இயல்பாய் வரும் ஊற்றுநீரும் சேர்ந்து எப்பொழுதும் வற்றிப் போகும் நிலைமை அடையாமல் இருத்தலைப்போலபேரறிவாளனுடைய அறிவு, பொருட் செல்வங்களும் தன்னளவில் சுருங்காமல் வேண்டிய அளவு நிலைத்து நின்று மக்களுக்குப் பேருதவியாக நிற்கும் என்பதாயிற்று.

ஆகவே, முடிவாக முழுப்பொருளையும் காண்போம். 'உலகை விரும்பும் பெருமைவாய்ந்த அறிவினையுடையவன் பெற்றுள்ள செல்வம், ஊர் மக்கள் நீர் அருந்துகின்ற குளம் நீரால் நிறைந்த தன்மையைப் போன்றது.

இவைபோன்ற பொன் துகள்களைத் தன்னகத்தே கொண்டு வற்றாத சுரங்கமாய்த் திருக்குறள் விளங்குவதால்தான்

'ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் — தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.'

என்று மாங்குடி மருதனார் பாராட்டிப் பாடியிருக்கிறார். பாடியதில் வியப்பு ஒன்றும் இல்லை அல்லவா!

வாழ்க தமிழ்!

# உயர்வு நவிற்சியோ?

தமிழ்தோய் இளையன், பச்சையப்பன் கல்லூரி.

"ஓம்பா ஈகை விறல் வெய்யோனும்," கொல்லிமலைக் கிழவனுமாகிய வல்வில் ஓரி என்னுங் கொடைமன்னன் மலைதழுவி மிளிரும் கானிடை வேட்டந்தலைப்பட்ட ஞான்று தொடுத்த கூர்ங்கணை யானையை வீழ்த்தி, உழுவையை உருட்டி மானினை மாய்த்து, பன்றியைத் தேய்த்து உடும்பிற்செற்றது எனப் புலவர் வன்பரணராற் குறிக்கப்பெற்ற அருநிகழ்ச்சி உயர்வு நவிற்சியின்பாற் பட்டதா? அன்றா? என்பது நன்கு ஆராய்ந்து தெளியற்பாற்று. பெரும்பாலார் அந்நிகழ்ச்சி உயர்வு நவிற்சியின்பாற் பட்டதே என மொழிகின்றனர். அது பொருந்தாது. அஃது உயர்வு நவிற்சி எனக் கருதுதற்குரிய காரணம் ஒன்றேனும் அவர்கள் சொல்லிற்றிலர். மற்று, அஃது உண்மையொடு பொருந்திய நிகழ்தற்குரிய நிகழ்ச்சியேயாம் எனத் துணிவதற்கு, அப்பாட்டின்கண் பலசான்றுகள் பொதிந்து கிடக்கின்றன. அச் சான்றுகளை ஈண்டு நோக்குவோம்.

## க. வன்பரணர் புலமைத் திறம்.

இனிக் கானிடை நிகழ்ந்த நிகழ்ச்சி உண்மையே என்பதை நோக்குமுன் அந்நிகழ்ச்சியை அரிய செந்தமிழ்ப் பாடலாக வடித்துக் கொடுத்த வன்பரணரின் புலமைத்திறம், ஒருசிறிது ஆராயற்பாற்று. ஆசிரியர் வன்பரணர் என்பார், பாணர், பாடினியர், கருவிதாங்கும் இளையர் முதலானோர் சூழ்ந்து பொலியும் ஓர் இனிய பெரிய சுற்றத்திற்குத் தலைவராவர். பண்டைக்காலத்தே பாணர் சுற்றம் போன்ற சுற்றங்கள் பல இருந்தமையும், அச்சுற்றத்திற்குத் தலைவராக ஒரு சிறந்த நல்லிசைவாணர் பொலிவர் என்பதும், வள்ளல்பாற் பரிசு பெறல் வேண்டி இத்தலைவராவார். அரண்மனைக்கண்முத லிற்போய்ப் பரிசுபெறற்குரிய செவ்விபார்த்து வருவர் என்பதும், பின்னரே பாணர் விறலியர் எல்லாம் தலைவன்பின் சென்று வள்ளல் திருமுன்னர்க் கலைநலங்காட்டி அணிகலன் பெறுவர் என்பதும் 'பதிற்றுப் பத்து' போன்ற பல புறப்பாடல்களால் நாம் நன்னர்த் தெளியலாம். ஈண்டு, இயற்கையோடும் இசையோடும் இயைந்து வாழும் அவ்வினிய பாணரின் சுற்றத்திற்குத் தலைவராய் வன்பாணர் மிளிர்ந்தார் என்னுங் கூற்று முற்றும் வாய்வதேயாம். என்னை? "நள்ளியென்னுங் கொடைமன்னன் தன்னுடன் பொலியும் தகைசால் சுற்றத்தார்க்குத் தண்ணளிபுரிந்து வண்மை தோன்ற வளம்பல நல்கும் புரவொழுக்கம் பூண்டுள்ள காரணத்தான், அச்சுற்றத்தின் பசிநோய் தணிந்தொழிந்தது என்றும், அங்ஙனம் அவ்வெம்மை நோய் மடிந்த பெருமகிழ்ச்சியான் காலையில் இசைக்க வேண்டிய

மருதப்பண்ணை மாலைக் காலத்தும், மாலையில் இசைத்தற்குரிய செவ்வழிப்பண்ணைக் காலையிலும் மரபுமாறி முறைபிறழ்ந் திசைக்கின்றது" எனக் கூறுதலானும் (புறம் கசக) 'வல்வில் ஓரிபாற் பெற்ற பெருவளத்தால் அவர்கள் தமக்குரிய ஆடலும் பாடலும் மறந்திருந்தனர்' எனக் கூறுதலானும் (கருடு. புறம்) என்க.

இங்ஙனங் கலைநலஞ்சான்ற பாணர் சுற்றத்தின் தலைவராய்ப் பொலிந்த வன்பரணர்பால் பண்டைய நாள் தண்டமிழ்ப் புலவர்க்கே உரித்தான புலமையியல்புகள் யாவும் பொதுளப் பெற்றிருந்தன என்பதில் எட்டுணையும் ஐயமின்று. அவர் யாத்த பாக்களைப் பயிலுந் தோறும் பயிலுந்தோறும், நிகழ்ச்சிகள் நம் அகக்கண் முன் எழுந்து நம்மைப் பெரியதோர் இன்ப வெள்ளத்துள் ஆழ்த்துகின்றன.

"உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி
மான்கணந் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதனன் எழுவேற் கைகவித்(து) இரீஇ" (புறம் கருo)

எனவரூஉம் செழுமையான அடிகள், உலகியற் பொருளையும், நிகழ்ச்சியையும் உள்ளவாறே உணர்ச்சிமிக்குப் பாடும் வன்பரணரது திறமையை நன்கு புலப்படுக்கும்.

அன்றியும் புலமைநலஞ்சான்ற அவர்கள் வறுமைக் கொடு நோய் மீக்கூர்ந்த காலத்து கையிறுக்கம் வாய்ந்த மன்னனுழைச் சென்று, எல்லாப் பெருமைகளும் அவனிடமே இருக்கைகொண்டுள்ளனவாகக் கூறுதலும், வள்ளலென வாழ்த்துதலும், அவனிற் சிறந்தோர் யாண்டும் இரார் என முகத்தெதிர்ப் பழிச்சலும் செய்யார் என்பதும் உணர்ந்து மகிழற்பாற்று. பண்டைநாட் புலவர்கள் இத்துணை இழிதக்க செயல்களை ஓரிடத்தேனும் செய்திற்றிலர். ஈண்டு நாம் காணும் புலவர் பெருமான் வன்பரணரும் இத் தன்மையறியார். கலை உணர்ச்சியையே விழுமிதாகக் கொண்டொழுகும் இவர்போன்ற புலவர் பெருமக்களே இறைபொருள் முன்னரும் தலைநிமிர்ந்து நிற்றற்குரியராவர். தன்னுடைய வறியநிலையை நோக்காது, கலையின் வளமையொன்றனையே கருதும் பெருந்தன்மை வன்பரணர்பால் மிக்கிருந்தது.

"பீடின்மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி,
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யாதாகின்றெஞ் சிறுசெந் நாவே (புறம், கசஅ)

என வரூஉம் அவரது புறப்பாடலை நோக்குக.

இதுகாறும் விளக்கியவாற்றான், அறியப்பட்ட வன்பரணரது புலமை யியல்புகள் மூன்றும். அவை, வன்பரணர் பாணர் சுற்றத்தின்

தலைவர் என்பதும், நிகழ்ச்சிகளை நேர்ந்தவாறே உணர்ச்சிமிக்குப் பாடுவதில் திறன் சான்றவர் என்பதும், செய்யா கூறிக் கிளவாச் சிறுசெந்நாவுடையர் என்பதுமாம். இன்னும் பல உயரிய புலமை நலங்கள் இவர்பால் மிக்குத் திகழ்கின்றனவேனும், மேலெடுத்துக் காட்டிய தன்மைகளே ஈண்டைக்குப் போதுமானவையாம்.

## ௮. வல்வில் ஓரியின் வில்லாண்மை.

இனி, வண்மைசான்ற ஓரி என்னும் வள்ளலின் வில்லாண்மை ஒருசிறிது ஆராயற்பாற்று ஓரியைப் பாடிய புலவர் பெருமக்கள் அனைவரும் இவனை 'வல்வில் ஓரி' என்றே அடைகொடுத்துச் சிறக்க வழங்குகின்றனர். ஒரு புலவராயினும் இவனை இங்ஙனம் சிறப்பியாதில்லை.

"வல்வில் ஓரி கானம் நாறி" (நற்றிணை ௬)

எனப் பரணரும்,

"கொல்லியாண்ட வல்வில் ஓரி" (புறம் ௧௫௮)

எனப் பெருஞ் சித்திரனாரும்,

"செல்லா நல்லிசை நிறுத்த வல்வில் ஓரி" (அகம் ௨0௯)

எனக் கல்லாடனாரும்,

"வல்வில் ஓரிக் கொல்லிப் படப்பை" (குறுந்தொகை ௧00)

எனக் கபிலரும், ஒரே அடைமொழியைப் புணர்த்து ஓரியின் வில்லாண்மைத் திறத்தை ஓதுதல் காண்க. இதனான், குறிவழுவாமற் கூர்ங்கணை எய்யும் திறத்தில் ஓரி என்பான் மற்றை யெல்லா மன்னர்களினுஞ் சிறந்து விளங்கினான் என்பது நன்கு புலனாகும். மாற்றானின் மார்பகம் ஊடுருவி அப்பாற் போம்படிக் கணைதொடுக்க வல்லவனான வேந்தன் கரிகாற் பெருவளத்தான், யாண்டேனும் 'வல்வில்' என்னும் சிறப்படை புணர்த்துப் புகழப்படுகின்றனனா? இல்லையன்றே! அக்கால மன்னராயினும் பிறராயினும் இங்ஙனம் மார்பூடுருவக் கணைதொடுப்பதில் வல்லவராகவே மிளிர்ந்திருந்த காரணத்தான், அவன் அங்ஙனம் புகழப்படவில்லை. மற்று, 'வல்வில்' என்னும் சிறப்படைச் சொற்பெய்து வழங்கப்பெறும் விறல் மன்னனோ வில்லாண்மைத் திறத்தில் ஏனையோரைக் காட்டிலும் மேலோங்கித் திகழ்ந்ததோடு அமையாது பல பொருள்களையும் ஊடுருவிப்போமாறு அம்புதொடுக்கும் அருந்திறன் சான்றவன் என்பது தெளிவு.

## ௯. உயர்வு நவிற்சியாகாமைக் குரிய காரணங்கள்.

௧. இனிப் பாட்டு முதற்கண் நின்ற

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற்பன் றி வீழ அயல(து)
ஆழற்புற்றத் துடும்பிற் செற்றும்." (புறம் ௧௫௨, 1–5)

என்னும் ஐந்தடிகளிற் செவ்விதாகத் தெளிந்துரைக்கப்படும் வேட்ட

நிகழ்ச்சி உண்மையில் நிகழ்ந்ததொன்றேயென மொழிவதற்குரிய காரணங்கள், அதற்குப் பின்வரும் அடிகளில் நிரலே பெய்யப் பெற்றிருக்கின்றன. அத் தன்மைத்தான அடிகளில் முதற்கண் திகழ்வது

"வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்" (ஷை 6)

எனவரூஉம் செவ்விய அடியாகும். எழிலிறையின் நலந்துருமிய பெண்ணின் நல்லாள் கூந்தல்போன்று மணங்கமழ்வதும், குமிழமும், பலாவும், இருப்பையும், பாலையும் ஏனைப்பிற மரங்களும் குழீஇ எழுச்சி வாய்ந்ததாய்த் தழைந்து பொலியப் பெற்றதும், மான், யானை, புலி முதலான கான்விலங்குகள் நிறைந்திருக்கப் பெற்றதுமான அக்கொல்லிமலைக் கானிடையே பாணர்சுற்றம் தொடர்ந்துடன் வரப் புலவர்பெருமான் வந்துகொண்டிருந்த ஞான்று ஓரி வள்ளல் மேமெடுத்துக் காட்டியவாறு கணையைத் தொடுத்து அத்துணை விலங்குகளையும் ஒரு நொடிப் பொழுதில் கொன்றொழித்தானாதல் வேண்டும். தன் கண் முன்னமேயே நடந்த இவ்வரிய நிகழ்ச்சியையே ஆசிரியர் வன்பரணர் முதலைந்து அடிகளிற் செவ்விதாகக் காட்டுகின்றார். பின்னரே, 'வலிய வில்லாலுண்டாய வேட்டத்தை வென்றிப்படுத்தியிருந்தவன்' எனத் திறம்படக் கூறுகின்றார் அறிவொழுக்கமிக்க வன்பரணரின் இக்கூற்று ஆராயத்தக்கது. மேலே காட்டிய நிகழ்ச்சி நடவாத பொய்க்கதையாயின் புலவர் இங்ஙனம் கூறவேண்டிய தேவையின்று. அன்றியும் மற்றைச் செவ்விகளிற் போலப் புலவர், வள்ளலை அரண்மனையிற்கண்டு அவன்றன் வில்லாண்மையைப் பாடவில்லை. காட்டிடையேதான் அவனைக்கண்டு பாடுகின்றனர் என்பது 'சுரத்திடை நல்கியோனே' எனப்பின்வரும் தொடரால் நன்கு துணியப்படும்! அல்லதூஉம், அவனே ஓரி என்னும் மன்னன் என்பதைப் பின்னால் உய்த்துணர்கின்றாராகலின், வேட்டுவ உருவில் தோன்றிய ஓரியினது வில்லாண்மையை உயர்த்துப் புகழ்வதில் புலவர்க்குக் கருத்தில்லை என்பது தெளிக. காட்டிடை வந்துகொண்டிருந்த புலவர் அப்பொழுது தான் கண்ட காட்சியைப் பாடப்புகுகின்றாராகலின், ஆங்கே உயர்வு நவிற்சிக்கு இடமில்லையன்றே! ஆகலின், 'வல்வில் வேட்டம் வலம் படுத்திருந்தோன்' என்னுமித்தொடர், வேட்ட நிகழ்ச்சியின் மெய்ம்மையைத் தெளிவுறுத்தல் காண்க.

உ. ஓரியின் சிறந்த தொடையமைந்த அம்பு அத்துணை விலங்குகளையும் கொன்ற நிகழ்ச்சியை நேரிற்கண்ட புலவரின் உள்ளம் எத்துணை வியப்பும் அச்சமும் எய்தியிருக்குமென எண்ணிப்பார்மின்! அளக்கவொணு உணர்ச்சி வெள்ளத்திற் புலவரதுள்ளம் ஆழ்ந்த காரணத்தானன்றே,

"புகழ்சால் சிறப்பின் அம்புமிகத் திளைக்கும்
கொலைவன்! யார்கொலோ கொலைவன்! (7–8)

எனக் கதறுகின்றது! மற்று, அவ்வம்பு யானையை மட்டுமே வீழ்த்தி

அப்பாற் சென்றிருந்ததாயின் புலவர் இத்துணை உணர்ச்சியுடன் கூவியிருப்பரோ? உணர்ச்சித்தேன் விரவிய இவ்வடிகள் தாமும் புலவர் வாயினின்றும் அவிழ்ந்திருக்குமோ? எனவே, ஓரி தொடுத்த அம்பு அத்துணை விலங்குகளையும் கொன்றொழித்தது என்பதும் திண்ணம்.

௩. இங்ஙனம் கதறிய பின்றை ஓரியைக் கண்ணுற்ற புலவர்க்கு அவன் மன்னனென்னும் மாண்மிகு உருவிற் றோன்றானாய் விலங்கு கொல்லும் இயல்பு வாய்த்த வேட்டுவனாகவே தோன்றினான் என்பதும், அங்ஙனம் அவன் வேட்டுவனாகத் தோன்றிடினும் செல்வ மிக்க தோற்றப் பொலிவுடையனாய் மிளிர்ந்தான் என்பதும்

"... ... ... ... ... ... ... ... ... ... ... மற்றிவன்
விலைவன் போலான்; வெறுக்கை நன்குடையன் (8-9)

என அவர் பாடுமாற்றான் நன்கு தெளியப்படும். புலவர் ஈண்டு ஓரியின் வில்லாண்மைத் திறத்தை உயர்வுநவிற்சியாற்பாடப் புகுந்திருப்பராயின் இங்ஙனம் வேட்டத்திற்குப் பின் நிகழ்ந்த நிகழ்ச்சியை ஒரு கோவைப்படுத்திப் பாடியிருக்கமுடியாது. மற்று, வேட்டத்தின் வெற்றியையும், தான் கதறியதையும், அதன் பின்னர் வேட்டுவ உருவில் தோற்றப் பொலிவுடன் வில்கெழு கையனாய் நின்றுகொண்டிருந்த ஓரியைக் கண்ட திறத்தையும் ஒன்றன்பின் ஒன்றாய் அழகுறத் தொடுத்துக் கூறுகின்றாராகலின், வேட்டநிகழ்ச்சி உண்மையில் நடந்ததொன்றேயாகல் வேண்டும்.

௪. புலவர்பெருமான் வன்பரணர் இந்நிகழ்ச்சிக்கு முன் ஓரி வள்ளலைப் பார்த்தவர் அல்லராயினும் அவன் வில்லாண்மையிற் றலைசிறந்தவன் என்பதும் இசைத்துறையில் வேட்கையுடையான் என்பதும், இப்பொழுது தானும் தன்சுற்றமும் இயங்கிக் கொண்டிருக்கும் காடு ஓரிக்குரித்தான கொல்லிமலையைச் சார்ந்தது என்பதும் பிறர் வாயிலாக முன்னமே அறிந்திருந்தனராகலின், இத்தகைக் கானிடை மிகத்திறம்படக் கூர்ங்கணை தொடுத்து வேட்டுவ உருவில் நின்றுகொண்டிருந்த ஓரியைக்கண்டதும் புலவர் நெஞ்சம்,

"ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
சாரல் அருவிப் பயமலைக் கிழவன்
ஓரிகொல்லோ அல்லன் கொல்லோ" (10—12)

என ஐயுறுகின்றது. அங்ஙனம் ஐயுற்ற புலவர், அவன் ஓரிமன்னனா? அல்லனா என்பதைத் தேற்றமாகத் தெளிய சில நுண்ணிய விரகுகளைக் (உபாயங்களை) கையாளுகின்றனர். ஓரி இசைத் துறையில் நாட்டங் கொண்டவன் என்பதைக் கேள்விப்பட்டிருந்தனராகலின், வேட்டுவ உருவில் இருந்தவனது இசைநுகர்ச்சித் திறத்தைத் தெளிதற் பொருட்டுப் புலவர்பெருமான் தன்பின் தொடர்ந்து கொண்டிருக்கும் விறலியரையும் பிறரையும் இசை வங்கியங்களை இயக்குமாறு பணித்துத் தானும் இருபத்தொரு பாடற்றுறையையும் பாடி முடிக்கின்றார்.

"பாடுவல் விறலியோர் வண்ணம் நீரும்
மண்முழா வமைமின், பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமின், ஆகுளி தொடுமின்
பதலை யொருகண் பையென வியக்குமின்
மதலை மாக்கோல் கைவலந்த(ம்)மின்என்
றிறைவனுகலிற் சொல்லுபு குறுகி
மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி" (13—20)

என வரூஉம் இனிய அடிகளை நோக்குக. இவர்களின் இசையமிழ்தை வேட்டுவ உருவில் இருந்த ஓரிவள்ளலும் உண்டுகளித்தின்புற்றிருந்தானாக, அவன்றன் இசை நுகர்ச்சித் திறத்தைத் தெளிவு செய்துகொண்ட புலவர்பெருமான் அவனைக் குறுகிக் "கோவே," என அழைத்தலும், உடனே ஓரிவள்ளல் நாணிய செய்கையும் எத்துணை நுண்திறம் வாய்ந்த செயல்கள் என்பதை உய்த்துணர்மின் !

"கோவெனப் பெயரிய காலை யாங்கது
தன்பெய ராகலின் நாணி மற்றியாம்
நாட்டிடன் நாட்டிடன் வருதும், ஈங்கோர்
வேட்டுவ ரில்லை நின்னெப் போரென
வேட்டது மொழியவும் விடாஅன்.." (21—25)

எனவரூஉம் அடிகளில், வேட்டுவ உருவில் நின்றிருந்தான் மன்னனேயாம் என்பதைத் தெளிவுசெய்த புலவரின் உய்த்துணர் அறிவு, எவ்வளவு செவ்விதாகத் திகழ்கின்றது. உணர்மின்! வேட்டுவ நிகழ்ச்சியை முதலிற்குறித்துப் பின்னிகழ்ந்த செயல்களையும் ஒவ்வொன்றுய் அழகுறத் தொடுத்துக்காட்டும் புலவர், அவன் மன்னனே என்பதைத் தெளிவுசெய்துகொண்ட திறத்தைக் கடையிற் குறிக்கின்றுராகலின். முதற்கண் குறிக்கப்பெற்ற வேட்ட நிகழ்ச்சியில், உயர்வு நவிற்சிக்கு ஒரு தினையளவுதானும் இடமில்லையென்க. என்னை? புலவர் பெருமான் வேட்டநிகழ்ச்சி குறித்துப் பாடும்போழ்து, ஓரிமன்னன் வேட்டுவ உருவிற் செல்வப் பொலிவுடையனுய்த் திகழ்ந்திருந்தானுதலானும், 'செய்யா கூறிக் கிளவாச் சிறுசெந் நா'வுடைய புலவர். அங்ஙனம் திகழ்ந்திருந்தான்றன் வில்லாண்மையை உயர்த்துப் புகழ்வதில் உள்ளம் போக்கியிரார் ஆகலானும் என்க. எனவே, ஓரிதொடுத்த அம்பு 'யானையை வீழ்த்தி...... உடும்பிற் செற்றது' என்னுங்கூற்று உண்மையாகின்றது.

ரு. அடுத்துவரும் அழகிய பாடல் வரிகளில் குறிக்கப்பெறும் நிகழ்ச்சியொன்றே, ஓரிமன்னன் அத்துணை விலங்குகளையும் ஒரே தொடுப்பில் கொன்றுன் என்னுங் கூற்றுக்கு உண்மை மொய்ம்பு ஊட்டுவதாய்ப் பொலிகின்றது.

"..............................வேட்டத்தில்
தானுயிர் செகுத்த மானிணப் புழுக்கோடு,
ஆனுருக் கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கியோனே........" (25—30)

எனவரூஉம் அடிகளிற் குறிக்கப்பெற்ற நிகழ்ச்சியைச் சிறிதளவாவது உற்று நோக்குவோமாகில், பாட்டு முதற்கண் குறிக்கப்பெற்ற வேட்ட நிகழ்ச்சி எத்துணையளவு உண்மையொடு பொருந்தி மிளிர்கின்றது என்பது இனிது புலனாகும். 'வேட்டத்தில் தானுயிர் செகுத்த மானிணப் புழுக்கோடு' எனப் புலவர் பெருமான் குறிக்கின்றாராகலின் மான் இறந்துபட்டது துளக்கலாகா உண்மையாகின்றது. அம்மான் தானும், யானையையும் புலியையும் வீழ்த்தி விரைந்து வரும் பகழியால் மாய்க்கப்பட்டதாகல் வேண்டும். என்னை? அம்பினது மூன்றாவது செய்கையாக மான் மாய்க்கப்பட்டதைக் கூறுகின்றாராகலின். ஆகவே எவ்வளது குறைந்தபடியாய்ப் பார்த்தாலும், யானை, புலி, மான் என்னும் மூன்று விலக்குகளும் இறந்துபட்டன என்பது உண்மையாகின்றது. மற்று, கேழற்பன்றி வீழ்ந்தது என்னும் கூற்றும் உண்மையே. என்னை? 'உடும்பின்மேற் சென்று அம்பு செறிந்து நின்றது' என ஓவியம் வரைந்தாற்போல் அம்பினது செம்மையைத் திறம்படக் கூறும் புலவர், கேழற்பன்றி வீழ்ந்துபட்டதை வேண்டுமென்றே கூறியிருக்கமாட்டாரன்றே! அற்றன்று, வேட்டத்தில் ஓரி மானொன்றனையே கொன்றொழித்தானாதலின் அம் மானிணத்தைப் புலவர்க்கும் சுற்றத்திற்கும் வழங்கினான் எனக் கூறலாமோவெனின்; அதுவும் பொருந்தாது. மானொன்றனையே வீழ்த்தியிருந்தானானல், 'கொலைவன் யார்கொலோ கொலைவன்,' எனப் புலவர் பெருமான் கதறியிருக்கமாட்டாராகலானும், மான் இறந்துபட்ட நிகழ்ச்சியை முதலிற்கூறாது யானை இறந்துபட்டதை முதலிற் கூறுகின்றாராகலானும், 'ஓரி மானொன்றனையே மாய்ந்தான்' என்னுங் கூற்று ஒரு சிறிதும் பொருந்தாதென்க. கொன்றொழிக்கப்பட்ட விலங்குகளுள்ளும் உண்டற்குரியதாகச் சிறந்து திகழ்ந்தது மானொன்றேயாதலால் ஓரி வள்ளலும் அதனையே வழங்கினான்.

இதுகாறும் விளக்கியவாற்றால், ஓரி தொடுத்த அம்பு யானையை வீழ்த்தி உழுவையை உருட்டி மானினை மாய்த்து, பன்றியைத் தேய்த்து உடும்பின்மேற் செறிந்து நின்றது என்னுங்கூற்று உயர்வு நவிற்சியாகாமை பெற்றாம். மற்று, அந்நிகழ்ச்சியோ, நிகழ்தற்கரியதாயும், காண்டதற்கரியதாயும் அத்துணை இறும்பூது சான்றதாய் இலங்குகின்றது! கோழைத் தன்மையை எருவிட்டு வளர்க்கும் இயல்புவாய்த்த 'துப்பாக்கிகளோடு' நட்புரிமை பூண்டார்க்கு, நாம் எத்துணைமுறைத் தெருட்டினாலும் இஃது உயர்வு நவிற்சியாகவே தோன்றும்.

NNEMARA PUBLIC LIBR

# " அருமையும், பெருமையும் "

(புலவர், திரு. வி. சச்சிதானந்தம், அலங்காநல்லூர்.)

உலகில் நாள்தோறும் பல அரிய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. மனிதன் இமயத்தின் முடியிலும், ஆழ்கடலினடியிலும் குகைகளுக்கு உள்ளேயும் வானத்தின் பரப்பிலும் சென்று மறைந்து கிடக்கும் பொருள்களை அறிந்து அறிமுகப்படுத்துகின்றான். அறிவியல் துறையில் முன்னேற்றம் கண்ட இவ்விருபதாம் நூற்றாண்டில் விண்வெளியிலும் மண்ணுலகிலும் வியக்கத்தக்க செயல்கள் நிகழ்வதையும் காண்கிறோம் சமுதாயத்திலே ஒருவன் நன்றாக இசை பாடினால் அருமை என்கிறோம்; நடிப்பவனைக் கண்டு அருமை என்கிறோம்; அழகுடைய பொருளைக் கண்டு அருமை என்கிறோம்; அறிவிற் சிறந்தவனை அருமை என்கிறோம்; பொல்லாத செய்தொழுகும் மாந்தரையும் அருமை எனப் பாராட்டும் நிலை ஏற்பட்டு விடுகிறது. நடைமுறையில் 'அருமை' என்பது ஒரு மனிதன் தன்னைவிட எந்தத் துறையில் சிறிது அதிக ஆற்றலுடையவனாகத் தென்படுகின்றானோ – எந்தச் செயல் சிறிது வியக்கத்தக்கதாக உள்ளதோ அதனையே குறிப்பதாகும் என்பதை அறியலாம்.

எல்லாச் செயலும் திறமையால் ஏற்படுவதேயாகும். திறமை என்பது பொதுச் சொத்து; இன்னவர்க்குத்தான் உரியது என்ற வரம்பு கிடையாது; நல்லார்க்கும் உரியது; பொல்லார்க்கும் உரியது. திறமையற்றவர் என்ற பகுப்பு இறைவனது படைப்பிலேயே கிடையாது சூழ் நிலை, ஊழ்வினை, சமுதாய அமைப்பு இவை காரணமாகச் சிலர் திறமையற்றவர்களைப் போலத் தென்படலாமே தவிர வேறில்லை. திறமையுள்ளவர் அரிய செயல்மட்டுமல்ல; அடாத செயலையும் செய்வார்கள். வாங்கும் கத்தி உடையானைப்பொறுத்து வெங்காயம் நறுக்கவும் உதவும்; ஒருவனை வெட்டவும் உதவும். வெட்டுகிற காரணத்தால் கத்தியைப் பழித்துக் கூறிப் பயனில்லை. கத்தியை உடையவன்தான் பழித்தற்குரியவன். அதுபோன்றதே திறமையும். திறமை நன்மைக்கும் பயன்படும்; தீமைக்கும் பயன்படும். நேர்மையாகப் பொருளீட்டுபவனைவிட கள்ள வாணிபம் செய்பவனுக்குத் திறமை அதிகம் தேவைப்படுகிறது. கடமையை ஒழுங்காகச் செய்பவனுக்குரிய திறமையைவிட காக்காய் (கால்கை) பிடித்து வாழ்பவனிடம் திறமை அதிகமிருக்கிறது. திறமையை நல்வழியில் பயன்படுத்திச் செய்யும் வினையே அரிய வினையாகும். அரிய செயல் செய்பவர்களையே பெரியவர்கள் என உலகம் பாராட்டுகின்றது; போற்றுகின்றது. பெரியவரின் நிலை குறித்துப் பேசிய பெரு நாவலரும் சுருக்கமாக "செயற்கரிய செய்வார் பெரியர்" என்று கூறிச் சென்றுள்ளார். கோடிக்கணக்கான மக்கள் உலகிடைப் பிறந்து, வாழ்ந்து, அழிந்தாலும் ஒரு சிலரைமட்டுந்தானே 'பெரியவர்' என்றும், 'அரியவர்' என்றும் உலகம் போற்றியுள்

ளது. ஏன் இந்த நிலை? திறமை மட்டும் ஒருவனைப் பெரியவனுக்காது. திறமையை நல்வழியில் செலுத்துவதற்கும், தவருன பாதையில் செல்லும்போது இடித்துரைத்துத் திருத்துவதற்குமாக ஒரு சிலரைத் தேடிக் கொள்ளவேண்டும். அவர்கள் யார்? வீட்டிற்குத் துணை மனைவி; வெளியுலகத்திற்குத் துணை நட்பு. மனைவியிடத்துச் சொல்லும் கருத்துக்கள் சில; மற்றவர்களிடத்துக் கூறும் எண்ணங்கள் சில. மனத்திலே தோன்றும் அத்தனை எண்ணங்களையும் கூறி, வருத்தம் போக்கித் தெளிவும் அமைதியும் பெறுகின்ற இடம் ஒன்றுதான் நட்பு. தன்னுடைய இயல்பிற்கேற்றவாறு தேடிக்கொள்ளாமல், தகுதிவாய்ந்த முறையில் பண்புடையாளர் தொடர்பினை ஒருவன் பெற்றிருப்பானேயாளுல் அதுவே செயற்கரிய செயலாகும் என்பதை ''செயற்கரிய யாவுள நட்பின்'' — என்ற வினுவின் மூலம் விளக்கிக் காட்டுகின்ருர் வள்ளுவஞர்.

திறமையும் நட்பும் மட்டும் அரிய செயல் செய்வதற்கு — பெருமை பெறுவதற்குப் போதாது. அரிய சாதனைகள் பலபுரிந்த விஞ்ஞானிகளும், மக்களை அடக்கி வாழ்ந்த மன்னர் பெருமக்களும், அறிவாலும் திருவாலும் சிறப்புப்பெற்ற மனிதர்களும் நிறைந்திருக்க புத்தரின் அறிவையும், இயேசுவின் கருணையையும், வள்ளுவரின் ஒழுங்கையும், வள்ளலாரின் உணர்வையும் மட்டும் அருமையுடையது; பெருமையுடையது என உலகம் போற்றுகிறது. ஒரு சிலர்க்கு மட்டும் உரித்தாகவிளங்குகின்ற அருமையும் பெருமையும் மாந்தரனைவரும் பெற வழியுண்டா? ஏன் அவர்கள் மட்டும் பாராட்டப்படுகின்ருர்கள்? வாழ்வுப் பெருநூலாகிய திருக்குறளில் அருமை பெருமை பற்றிக் கூறுகின்ற கருத்துக்களை ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறமை, துணை இவற்ருேடு வீரமும் வேண்டும். வீரம் என்பது என்ன? பழிக்குப்பழி வாங்குதல் வீரமா? படைக்கலக் கருவி கொண்டு மக்களை வதைப்பது வீரமா? வஞ்ச நெஞ்சம் கொண்டு பிறரை வருத்துவது வீரமா? அதிகார வெறிகொண்டு பிறரை அல்லற்படுத்தி அடக்கியாள்வது வீரமா? போட்டியிலே வெற்றி பெற்று பொருமைக்கும், பூசலுக்கும் இடங்கொடுப்பதுதான் வீரமா? இவையாவும் வீரத்தின் சிறு பகுதியாகலாம். முழு வீரம் என்பது தன்னலத் தேய்வில், பிறர் இன்னலைத் துடைப்பதில், பிறர் செய்யும் கொடிய செயலைப் பொறுத்துக் கொள்வதில், பழிபாவங்கட்குப் பயப்படுவதில், அதிகாரமிருப்பினும் தவருன வழியில் பயன்படுத்தாதிருப்பதில் அடக்கமும் பணிவும் மேற்கொள்ளுவதில்தான் ஒளிவிட்டு விளங்கும். செந்தமிழ்ச் சான்ருேராய சேக்கிழாரடிகள்,

''ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னுல் விளம்பும் தகையதோ? —என்ற பாட்டின்

மூலம் இரக்க குணம் உள்ளவர்களே குறைபாடு இல்லாதவர்கள். அத்தகையாருடைய வீரத்தை எவ்வாறு விளம்புவது என்று வியந்து

உரைக்கின்றார். மனித வாழ்விற்கெனத் தன்னைப் பயன்படுத்திய வர்களே வீரமுடையவர்கள். கருணையுள்ளம் படைத்தவர்கள் எப்போதும் பிறருக்கு உதவிபுரிந்து வாழ்வார்கள். உதவி என்பது பிறர்க்குத்தேவையானது என்பதை அறிந்து கொடுப்பது ; உள்ளன் போடு கொடுப்பது ; நிலையறிந்து நல்வழியில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக்கொடுப்பது ; உதவியின் அளவு சிறி தாயினும் செயப்பட்டாரின் சால்பிற்கேற்பப் பயன்தருவது. கால மறிந்து, பயன்கருதாது உதவி செய்பவர்களைக் காணல் முடியாது. அவ்வாறு ஒருவன் பிறருக்கு எவ்வித உதவியும் செய்யாமல் அடுத்தவர் அவனுக்குச் செய்த—செய்கின்ற உதவிக்கு ஈடாக எவ்வுலகத்தைக் கொடுத்தாலும் ஈடாகாது என்பது மட்டுமல்ல அரிய செயலுமாகும் என்பதை உணர்ந்து கூறுகின்றார் வள்ளுவனார்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது –(குறள் 101) என்பது குறளாகும்.

செயல் செய்வதற்குக் காலமும் கருவியும் தேவை. காலம் வேகமாய்ச் சுழன்றுகொண்டிருக்கிறது. மக்களின் கருத்துக்களும் மாறிக்கொண்டே வருகின்றன. பழையன கழிதலும், புதியன புகுதலுமாகிய செயல்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. ஒரு காலத்து அரியன என்று போற்றப்பட்ட செயல் பிறிதொரு காலத்துப் பொருந்தாதன எனப் புறக்கணிக்கப்படுகின்றன. ஆகவே காலநிலைக் கேற்றவாறு செயல் செய்தல் வேண்டும். கருத்தால் செய்யும் காரியங்கள் சில ; கருவியாற் செய்யும் காரியங்கள் சில காலம். கருவி இவற்றை நன்கு ஆய்ந்து ஒருவன் செயலை மேற் கொள்ளின் முடியாதது ஒன்றுமில்லை என்கிறது குறள்.

“ அருவினை என்ப உளவோ கருவியாற்
கால மறிந்து செயின். — என்பது குறளாகும்.

ஆண்டி முதல் அரசன் ஈருக உள்ள அனைத்து மாந்தர்க்கும் மறதி உண்டு. மறதியால் நன்மைகளுமுண்டு ; தீமைகளுமுண்டு. நற்செயலுக்கு மறதி பகை ; தீச்செயலுக்கு மறதி உறவு. கடமை மறந்தவர்களின் செயல்களால் நாட்டில் ஏற்பட்ட–ஏற்படும் கேடுகள் பல. பொறுப்புள்ள அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள் கடமையுணர்ச்சி இல்லாதவர்களாகத் தாம் எப்படியாவது வாழ்ந்து விட்டால் போதும் என்று நினைக்கின்ற தன்னலப்பேய் பிடித்தவர் களாக, செல்வாக்குப் பெறவேண்டி நீதியையும் நேர்மையையும் மறந்தவராக இருப்பார்களேயானால் நம்பி வாழுகின்ற அத்தனை மக்களும் எப்படி நன்கு வாழமுடியும்? அத்தகைய மறதியுடையவர் கள்–கடமையை மறந்தவர்கள் எவ்வாறு அரியசெயல் செய்யமுடியும்? நீட்டித்துச் செய்யும்நிலை, மறதி, சோம்பல், அதிக உறக்கம் இந் நான்கும் தீயவர்கள் விரும்பியணியக்கூடிய ஆபரணங்கள் என்று அறிவுறுத்தினர் அறிஞர். எனவே மறதியின்றி ஒருகாரியத்தைச்

செய்வோமானுல் அரியகாரியம் என்ற ஒன்று உலகிடை கிடையாது என்று கூறுகிறது குறள்.

"அரியவென் ருகதவில்லை பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்".—என்பது குறளாகும்.

அரிய செயல் செய்வார்க்கு மருளுண்டாக்குவது பொருளே. பொருளின் காரணமாகப் பொல்லாத செயல்கள் நிகழ்வதையும் அதே நேரத்தில் பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பதையும் அறிவோம். எல்லோர்க்கும் பொருள் மீது ஆசை உண்டு.; ஆனுல் பொருள் தேடும் வகையில்-துறையில் ஆர்வம் இல்லை. ஏமாற்றிப் பிழைப்பதும், பிறர் உழைப்பால் உண்பதும், குறுக்குவழியில் பொருளீட்ட விரும்புதலும், கையூட்டுப் பெறுதலும் சமுதாயத்திலே நீக்கமுடியாத-நீங்காத செயலாக ஆகிவிட்டன. பொருள் உள்ளவர்கள் அருள் உடையவர்களாக மாறினுலன்றி வேற்றுமைகள் மறையாது என்பதை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பேயே வள்ளுவர் உணர்ந்து பொருளையும் அருளையும் இணைத்து ஒரே குறளில் கூறி வலியுறுத்தியுள்ளமை வியப்பிற்குரியதாகும். பொருளும் அருளும் போட்டியிடின் பொருளையே பெரும்பாலோர் விரும்பி ஏற்பர்; சிறுபான்மையோரே அருளைநாடிச் சிறப்பர். அருள் நல்லவரிடத்திலே மட்டும் நிற்கும்; பொருள் எல்லோரிடத்திலும் இருக்கும். பொருள் உடையானை வாழவைக்கும்; அருள் எல்லோரையும் வாழவைக்கும் பொருள் இம்மையில் பயன்தரும்; அருள் இருமையிலும் பயன்தரும். பொருள் தன்னலத்தை வளர்க்கும்; அருள் பிறர்நலத்தை நாடும் பொருள் சென்ருல் வருவது; அருள் போனுல் வராதது. எளிமையாகக் கொள்ளக் கூடியது பொருள்; அருமையாகப் பெறக்கூடியது அருள். அரிய வினைசெய்வோர் அரிய பொருளான அருளையும் மேற்கொள்ளல் வேண்டும் இத்தகைய கருத்துக்கள் நிறைந்த குறட்கருவூலத்தைக் காண்போம்.

பொருளற்ருர் பூப்ப ரொருகால் அருளற்ருர்
அற்ருர் மற்ருத லரிது.—என்பது குறளாகும்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" – என்று குறளும் பிறர்க்கென வாழுகின்ற பெரியவர்களால் இவ்வுலகம் உண்டு என்று புறநானூறும், எவ்வழி நல்லவர் ஆடவர்-அவ்வழிநல்லை வாழிய நிலனே' என்று ஔவையாரும் கூறுகின்ற பெரியோர்கள் யார்? அவர்களே சான்ருேர்கள்- பெரியவர்கள்; அரியகாரியம் செய்பவர்கள். எல்லா நற்குணங்களும் அமைந்து கிடப்பதே சான்ருண்மை எனப்படும். மனிதவாழ்வின் முழுத்தன்மையை அடைந்தவர்கள் அவரே. "மனத்தை அடக்கியவர் சான்ருேர். நீர்மேல் நடக்கலாம்; நெருப்பில் குளிக்கலாம்; வானத்தில் பறக்கலாம். ஆனுல் மனத்தை மட்டும் அடக்க முடியாது. மனமெனுமோர் பேய்க்குரங்கு மடப்பயலே". என்ருர் வள்ளலாரும். அடக்கமுடியாத மனத்தை

அடக்கியவரே அரியசெயல் செய்தவராவர். சான்ருேர் அன்பு நாணம், ஒப்புரவு, கண்ணுேட்டம், வாய்மை முதலிய உடையவர்; சிறியவரிடத்தும் தோல்வியை ஒப்புக்கொள்ளும் தன்மையுடையவர்; இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யும் இயல்பு உடையவர்கள்; ஊழி பெயர்ந்தாலும் உறுதி தளராத உள்ளம் உடையவர்கள். இத்தகைய சான்ருேர்களை-அறிஞர்களை எந்தநாடு போற்றுகிறதோ அதிகமாகப் பெற்றிருக்கிறதோ அந்த நாடு தான் வாழும். முன்னேற்றமும் அடையும். தமிழகத்திலே தக்கவர்களைப் பாராட்டிப் போற்றும் பழக்கமும், உயிருடனிருக்கும்போது பாதுகாக்கின்ற தன்மையும் எவ்வாருே குறைந்து விட்டது. உழைக்காதவர்களும் எவ்வாறு பொருளீட்ட முடிகிறதோ அதுபோலத் தகுதியில்லாத வர்க்கும் புகழ் அமைந்து விடுகிறது. உலக அரங்கின் நடுவிலே வைத்துப் போற்றக்கூடிய சான்ருேர் உலகத்தின் மூலையிலே, காலத்தின் கோலங்கண்டு, பெயர்கூடத் தெரியாமல் ஒதுங்கி வாழ்கிருர்கள். அவர்களையெல்லாம் தேடிக்கண்டுபிடித்து, ஆவன செய்து போற்றலே தமிழரது கடமையாகும். தமிழகத்திலே பிறந்து விட்ட குற்றத்திற்காக எத்தனையோ அறிஞர் பெருமக்கள் உள்ளம் நைந்து உருக்குலைந்து உயிரைவிட்டிருப்பதைக் காண்கிருேம். இனியாவது தமிழக அரசும், மக்களும் தக்காரை—பெரியவர்களைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும். அத்தகைய பெரியவர்களைப் போற்றிக்காப்பதே அரிய செயல்கள் எல்லாவற்றினும் சிறந்தது என்று தெரிவிக்கின்ருர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனுர். இதோ அக்குறளைப் படியுங்கள்!

அரியவற்று ளெல்லா மரிதே—பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.—என்பது குறளாகும்.

இதுவரை குறளிலே உள்ள அருமை கண்டோம். இனிப் பெருமை காண்போம். அருமையானவர்களும், அரிய செயல்களும் பெருமைக்கு உரியனவேயாகும். பெருமையாளர் இன்னுர் என்ற பட்டியல் ஒன்றைப் பெருநாவலர் தருகின்ருர். அன்னுரது இயல்பு அறிந்தால் பெருமையும் இன்னது என அறிந்து கொள்ளலாம். நீத்தார், துறந்தார், அறம்பூண்டார், நிறைமொழி மாந்தர் ஆகிய வர்களே பெருமைக்கு உரியவர்கள். நீத்தார் யார்? உலகப்பற்றுக் களை வெறுத்தவரே நீத்தார். பற்றுக்களை விடுவது யாரால் இயலும்? உறுதி கொண்டவர்களால் இயலும். உறுதி கொண்டவர் களெல்லாம் பற்றுக்களை விடுத்தவரா? இல்லை. நல்லொழுக்கத்திலே தளராத உறுதி கொண்டவர்கட்கு மட்டுந்தான் பற்றுக்களை நீக்கி வாழமுடியும். பள்ளம் நோக்கிச் செல்லும் வெள்ளம் போல பற்றுக் களை நாடிச் செல்லும் மனத்தை அடக்கித் தன்வயப்படுத்துவது அரியசெயல் மட்டுமல்ல—பெருமையான செயலும் ஆகும். இதனை,

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை—விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு"—என்ற குறள் விளக்குகிறது.

துறந்தார் யார்? மண்ணை விடுத்து, பெண்ணை வெறுத்து, பொன்னை மறந்து, காடுசென்று கடவுளை வேண்டுபவரே துறந்தவர்–துறவி என நாட்டிலே கருதப்படுகிறது. துறந்த நிலைக்கு அவை உரிய வாகலாம்; ஆனால் சிறந்த நிலைக்கு உரியன வல்ல. தான் மட்டும் தனியே சென்று பெரு நலம் நாடுதல் தன்னலமாகும். உலகிடையிலே இருந்து, வாழ்ந்து பிறரையும் வாழவைப்பதே பெருநலமாகும். துறத்தல் என்பதற்கு விடுதல், நீக்குதல் என்று பொருள். இல்வாழ்க்கை மேற்கொண்டு மனைவி, மக்களைக் காப்பாற்றிப் பின்னர் தாம் வாழும் சமுதாயத்தையும் காப்பாற்றுவதே சிறந்ததாகும். பிறர் நலத்தை நாட நாடத் தன்னலம் தேயும்; பன்னலம் பெருகும். தனக்குரிய பற்றுக்கள் தாமாக விலகும்; உலகப் பொதுமையை உணரும் வாய்ப்பு ஏற்படும். உற்ற நோய் பொறுத்து, எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாத நல்லுளம் வரும். அதுவே தவம்–துறவு என்பதாகும். பிறர் வாழத் தொண்டு செய்வதற்காகவே தன் வாழ்வைப் பலியிட்டவர்களைத் தான் தியாகிகள் என்பர். இத்தகைய நன் மக்களின் பெருமையை அளவிட்டுக் கூற இயலாது என்பதை அறிவிக்கும் குறளினைக்கண்டு மகிழ்வோம்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை யெண்ணிக் கொண்டற்று"–என்பது குறளாகும்.

அறம் மலிந்த நாடு–அறத்திற்குப் பொருள் கூறியநாடு தமிழ்நாடு என்பதை நாம் மறக்க முடியாது. செய்வதெல்லாம்–பிறருக்குக் கொடுப்பதெல்லாம் அறம் என்று சொல்லிக் கொண்டிருக்க புறச்செயல் மட்டும் அறச்செயலாகாது. அகத்தின் தூய்மையே உண்மையான அறம் என்று உணர்த்திய திறமை குறளுக்கே உண்டு. அறம் பயன் கருதிச் செய்வது; பலரறியச் செய்வதன்று. அறம் எப்பொழுதும் ஏதாவது ஒன்றைக் கொடுப்பது; ஏதாவது ஒரு சமயத்தில் மட்டும் கொடுப்பதன்று. வீடுவரை உறவினரும், வீதிவரை மனைவியும். சுடுகாடுவரை பிள்ளைகளும் துணையாக இருக்க இறுதிவரை உறுதுணையாக இருப்பது அறம் ஒன்றேயாகும். இம்மை மறுமையாகிய இருமைக்கும் பயன்படும். எண்ணம், சொல், செயல் இம் மூன்றையும் அறநெறிப்படுத்தி வாழ்பவரையே "அறம் பூண்டார்" எனக் கூறுகின்றார் நாவலர். அறநெஞ்சு அனைவர்க்கும் எற்படின் பிறரை அல்லற் படுத்தவேண்டும் என்ற நோக்கமும், அடுத்தவருடைய உழைப்பை உறிஞ்சி வாழவேண்டும் என்ற நிலைமையும், எல்லாவற்றையும் தாமே அனுபவிக்க வேண்டும் என்ற நினைப்பும் ஏற்படாதல்லவா? ஆகையால்தான் திருவள்ளுவர் அறம் பூண்டார் செயல் உலகிலேயே சிறந்தது எனப் பாராட்டுகின்றார். இனி அக் குறளினைக் காண்போம்.

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு" — என்பது குறளாகும்.

ஒழுக்கமும், பிறர்நலத் தொண்டும், அற நெஞ்சும் உள்ளவர்களே நிறைமொழி மாந்தராவார். இவர்கள் சொல்வதை யெல்லாம்

செய்து காட்டுவார்; செய்ய முடிவதையே சொல்லும் இயல்பினர். சொல்லியபடி செய்ய முடியாது என்று வாதிடுவோர் பலரிருக்க, எல்லாவற்றையும் செய்துமுடிக்கக் கூடிய ஆரிய செயலை மேற்கொள்வர். புத்தரையும், வள்ளுவரையும், காந்தியையும் போன்றவர்கள். அன்னுருடைய சொற்கு உலகில் மதிப்பு மிக உண்டு. சான்று வேறு வேண்டாம். அன்னூர் கூறிப்போந்த சொற்களே சொல்லால் ஏற்படும் விளைவுகளே சாலும் எனப் பேசுகின்ருர் பெருநாவலர்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" — என்பது குறளாகும்.

அருமைக்குரிய மாந்தர்களே யன்றி பெரும்பான்மையான மக்களும் பெருமையடைய சில கருத்துக்களைக் கூறுகிறது குறள். அளவு சிறிதாயினும் நல்ல சொற்களைக் கேட்டல் வேண்டும். தன் மானத்திற்கு இழிவு தரும் செயல்களில் பெண்கள் ஏவினுல், அத்தொழிலைச் செய்துவாழும் பேடித்தன்மையை நீக்கவேண்டும்: பணிவும், பெருமிதமின்மையும், பிறர் குற்றம் பொறுத்து குணத்தைக் கொள்ளும் நிலைமையும் கொள்ளவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னையறிந்து தான் சமுதாயத்தில் ஒருவனுகப் பிறந்ததை யெண்ணி-தான் செய்யக்கூடிய-செய்ய வேண்டிய கடமைகளை நினைத்துச்—செய்து வாழ்தலே பெருமையும்-பெருமிதமுமாகும். பெருமையை எவ்வாறு ஒருவன் மேற்கொள்ளவேண்டும் என்று அறிவிக்க வந்த வள்ளுவர் "ஒருமை மகளிரை" உவமையாகக் கூறுகின்ருர். ஒருமை மகளிர் இரக்ககுணம் உள்ளவர்கள்; நடையிலும் உடையிலும் எளியநிலை உள்ளவர்கள்; பிறருடைய கருத்தைக் கவரும் வகையில் பகட்டான ஆடை அணியார்; பிறர் பார்த்துப் பொருமை கொள்ளும் அளவில் ஆபரணங்களையும் அணியார்; குடிப்பெருமையையும், குடும்பவாழ்வையும் சிறப்புற அமையுமாறு செயல் செய்பவர்கள்; அறக்கற்பும் மறக்கற்பும் உடையவர்கள; சமுதாயத்தின் கலங்கரை விளக்கம் கற்புடைப் பெண்களே யாவர். எளிமைக்கு இரையாகி, ஆடையிலும் அணிகலன்களிலும் அளவுகடந்த ஆசைவைத்து, வேறுபட்ட மனம்கொண்டு வாழும் பொதுவான பெண்களைவிட உள்ள உறுதியால் சிறப்பு பெற்று ஒருமை மகளிர் உயர்வடைந்ததைப்போல சிறுமைக்குரிய செயல்களிலேயே செல்லுகின்ற இயல்பான மனத்தைத் தடுத்துத் தன்னைப் பாதுகாப்பவனுக்கே பெருமை நிலைத்து நிற்கும் என்ற கருத்துக்களைக் கூறும் குறளைக்காண்போம்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு"—என்பதுகுறளாகும்.

தனித்தனியாக அருமை, பெருமை குறித்துப் பேசிவந்த வள்ளுவர் இரண்டையும் ஒரே குறளில் இணைத்து இரு குறள்களில் பேசுகிருர். ஓர் குறளில் அருமையை முதலாகவைத்தும் பிறிதொரு குறளில் பெருமையை முதலாகக் கொண்டும் குறள் கூறியிருக்

கின்றார். செயற்குரிய செயலும் செய்யாத மாந்தர் பலர் உண்டு. எதற்கெடுத்தாலும் "தலைவிதி" "ஊழ்வினை" என்று சொல்லி உள்ளம் சோம்பி, வாழ்வையே வறண்ட பாலைவனமாக ஆக்கிக் கொள்ளும் நிலையறிந்தார்; வாழ்வதற்குப் பிறந்த மக்கள் விதியின் மீது பழிபோட்டு அழிகின்றார்களே என்று வருந்தினார். ஊழின் வலிபற்றி அறத்துப்பாலிலே "ஊழிற்பெருவலி யாவுள?" என்று வியந்து கூறிய வள்ளுவர், பொருட்பாலிலே 'ஆள்வினையுடைமை' என்ற அதிகாரத்தில் 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்-தாழாது உஞற்று பவர்" என்று ஊழைவெல்லக்கூடிய வழியையும் கூறினார். ஊழைவென்று, முயற்சி மிகக் கொண்டால் அரிய செயல் செய்யமுடியும். ஊழை வெல்லக்கூடிய முயற்சியைப் பெருமை யளிக்கும் எனக் கூறுகிறது குறள்.

"அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" — என்பது குறளாகும்.

அருமையான செயல் செய்பவர்களெல்லாம் பெருமைக்குரியவர்கள் என்று பல குறள்களில் கூறிவந்த பெருநாவலர் பெருமை யுடையவர்களுக்கே அரிய செயலை ஆற்றுகின்ற திறமை உண்டாகும் என்று கூறுகிறார். இக் கருத்தினை,

"பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல்"— என்ற குறள்மூலம் அறியலாம்.

திருக்குறள் முழுவதும் அருமையும், பெருமையும் உடையது. அவற்றுள் அருமை, பெருமை பற்றிக் குறித்த குறள்களிலே பொதிந்துள்ள கருத்துக்களை மட்டும் ஆராய்ந்தோம். குறள் வாழ்விற்கோர் வழிகாட்டி; கரையறியாது தடுமாறுவோர்க்கோர் கலங்கரை விளக்கம்; ஆழங்காண முடியாத கடல்; எடுக்க எடுக்கக் குறையாத இன்றமிழ்ச் செல்வம்; மனித இனத்தின் பெருமையைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடி. நாட்டிலே உள்ள மாந்தர் அனைவரும், வழக்குரைஞர்களும், நீதிபதிகளும், நல்வழிகாட்டும் எல்லோரும் குறள் படிக்க வேண்டும். அரிய காரியங்கள் செய்து பெருமையடைய வேண்டும். "நல்லது செய்தல் ஆற்றீராயினும்-அல்லது செய்தல் ஓம்புமின்" என்ற புறநானூற்றின் வாக்கு. நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுச் சங்ககாலத் தமிழ்ச் சமுதாயமாக இன்றைய சமுதாயம் விளங்கவேண்டும். சான்றோர்களை—நல்லவர்களை அறிந்து போற்றுகின்ற கடமையை இனியாகிலும் தமிழகம் மேற்கொள்ளவேண்டும். பண்டைப் பெருமையை மட்டும் பேசி மகிழ்வதோடு அமைந்துவிடாது, இன்றைய சமுதாயத்தையும் அருமையும் பெருமையுமாக ஆக்குவதும்; நீதியும் நேர்மையும் நிலவும்படிச் செய்வதும் அரசியலாரின்—அனைத்து மாந்தர்களின் கடமையும்-உரிமையுமாகும். குறள் நெறிஒன்றே ஒருமையை உணர்த்தும். வளரட்டும் குறள்நெறி! வாழட்டும் வையகம்!!

தமிழ் வாழ்க!

# ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

## காட்சி 1.

நடிகர்:—கூத்தன், இசை முகிலோன். இடம்:—கூத்தன் இல்லம்,
ஆட்டனத்தி—சரத் குமாரன் காலம்:— காலை.

[பூம்புகாரில் பாணர் சேரியில் மன்னனுல் மதிக்கப்பெற்றுவாழும் பாணர்குலச் செம்மல் 'கூத்தன்' தன்மகன் இசை முகிலோனுக்கும் வளர்ப்பு மகன் ஆட்டன் அத்திக்கும் கூத்தும் இசையும் பயிற்றுகிருன் ஆட்டனத்தி பாடுகிருன் இசை முகிலோன் மெய்ப்பாடு காட்டி ஆடுகின்ருன் — கூத்தன் தாளமிட்டுக் கண்காணிக்கின்ருன்]

(முதற்கண் பொதுவாகத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுகின்றனர்)

பாடல்

முதனிலை

அன்பு கமழும் தமிழே — புவி
ஆளும் பெருந் தமிழே — (அன்பு)

இடை நிலை

மன்பதைக் காக்கமும் மாட்சியும் ஊக்கமும்
இன்பமும் அறிவருள் ஆண்மையும் தேக்கிநல் —(அன்பு)

நிறைவு நிலை

முறையர சோச்சிபல் மொழிக்கர சாகிய
மூதறிவே யியலால் துறை போகிநன்
நெறிபெற வளரிசை நாடக மோங்கியிந்
நிலமிசை கவினுறு கலைபல தாங்கிடும் — (அன்பு)

உண்ணிறை வாகியெம் உயிர்க் குறவாகி
ஒளிதரும் பொருளாய் உணர்வினில் ஓங்கித்
தண்ணமிழ் தாய்எழும் அன்னையுன் தாளே
தாழ்ந்து மகிழ்ந்தகம் வாழ்த்துதும் யாமே —(அன்பு)

[அபிநயத்திற் கேற்ப ஒரு பாடலை அத்தி பாடுகிருன் முகிலோன் ஆடத் தொடங்குகிருன்]

ஆட்டனத்தி பாடல்:—

(1) வில்லைவளைத் துலகெல் லையெலாம் பணி
கொள்ளும் கரிகாலன் — கலை
வல்லவர் செந்தமிழ்க் காயிரம் ஆயிரம்
பண்ணும் கரிகாலன் — புகும்

எல்லைவ குத்துயர் பொன்னிக் கணையிட்ட
ஏந்தல் கரிகாலன் — அறம்
சொல்லும் நெறிதனில் மல்லல்விளைத் தெமைக்
காக்கும் பெருவீரன் (வில்)

அள்ளும் சுவைத் தமிழ் அன்னை யளித்தநம்
வேந்தன் கரிகாலன்—உயர்
வெள்ளிப் பனிமலை மீதினில் வேங்கையை
ஏற்றிய போர்வீரன்
மள்ளர் பெரும்படை மாய்த்துவ டவரைத்
தேய்த்த கரிகாலன் — அலை
துள்ளிவரும் பெருங் காவி ரிக்கே கரை
சூழ்ந்த மதிவாணன். (வில்)

[முகிலோன் பாணியும் சீரும் பிறழ ஆடுவதுகண்ட கூத்தன்]

**கூத்தன்:—**

களிமண்ணா உன் தலையில்? காலை ஊன்றிக்
கதியோடு நில்லேன்! நான் எத்தனை நாள்
தெளிவாகச் சொன்னாலும் தெரிய வில்லை
சிறிதளவும் மெய்ப்பாடே இல்லை; ஏடா!
நெளிக்கின்றாய் உடம்பை? இது கூத்தா? அத்தி
நீவாயிம் முத்திரையைப் பிடித்துக் காட்டு
புளிக்கிறதே நடனம் என்றால்—சோற்றுப் பிண்டம்
போயும்போய் எனக்குவந்து பிறந்தாயேநீ (1)

**முகிலோன்:—**

காலையிலே எழுந்தவுடன் கலையின் தொல்லைக்
கடும்பகலில் இயற்கல்வி அதற்குப் பின்னர்
மாலையிலே இசை யென்றால் எதைத்தான் செய்வார்?

**கூத்தன்:—**

மடையர்களுக் கிவை வேம்பாய்த் தானிருக்கும்

**முகிலோன்:—**

வேலையுனக் கிவைதவிர இருந்தால் தானே

**கூத்தன்:—**

மேற் பேச்சா பேசுகின்றாய்! கலையைக் கட்டி
மூலையிலே வைத்து தலை முழுகு போ போ
முயலாமல் எதைத்தான் நீ பெறுவாய் வாழ்வாய்? (2)

ஆட்டனத்தி நீ வா! நான் நேற்றுச் சொன்ன
அபிநயத்தை நினைவில் வைத்துள்ளாயோ? சொல்!

ஆட்டனத்தி.—

“வெகுண்டோன் அபிநயம் விளம்புங்காலை
மடித்த வாயும் மலர்ந்த மார்பும்
துடித்த புருவமும் சுட்டிய விரலும்
கன்றின உள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோ டயர்ந்தனர் கொளலே”

(2) களித்தோ னபிநயம் கழறுங்காலை
ஒளித்தவை ஒளியான் உரைத்தல் இன்மையும்
கவிழ்ந்துஞ் சேர்ந்தும் தாழ்ந்தும் தளர்ந்தும்
வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலும்
களிகைக் கவர்ந்த கடைக்கணைக் குடைமையும்
பேரிசை யாளர் பேணினர் கொளலே

கூத்தன்:—

காட்டந்த வெகுளியபி நயத்தை—நன்று
களித்தோன் அபிநயம் எவ்வாறு காண்பி?
பாட்டினுக் காம் மெய்ப்பாடு காட்டு பார்ப்போம்
பாடேன்டா—சரத்குமரா நீயும் பாடு.

[அப்பொழுது அங்கு வந்திருந்த சரத்குமாரனும் இசைமுகிலோனும் பாடுகின்றனர். ஆட்டனத்தி ஆடுகிறான்]

பாடல்

முதனிலை

முத்தமிழ் மலர்ந்தது மூண்டது பேரொளி
மூதறி வாம் மணம் நிறைந்தது பாரினில் (முத்தமிழ்)

இடை நிலை

புத்த முதாய்க்கவித் தேன் பொழிந்தொழுகுறப்
பொற்புடனே கலை இதழ் விரிந் தழகுற (முத்தமிழ்)

நிறைவு நிலை

வித்தையும் கல்வியும் வெற்றியும் சேரவும்
வெண்மையும் இன்மையும் வேரொடு தீரவும்
ஒத்தநல் லன்பினில் இன்பமிங் காரவும்
ஒப்புர (வு) ஒழுக்கமிவ் வுலகினில் நேரவும் (முத்தமிழ்)

[ஆட்டனத்தி இடையிலே ஆட்டத்தை நிறுத்துகிறான்]

கூத்தன்:—

வாட்டமென்ன ?

ஆட்டனத்தி:—

.......................பள்ளி செல்லும் பொழுதாயிற்று

கூத்தன்:—

மகிழ்ச்சி நீங்கள் உணவருந்திப் பள்ளி செல்க! (3)

[எல்லோரும் போகிறார்கள்]

முதற்காட்சி முடிவு.

## காட்சி 2.

நடிகர்:— இளஞ்சேரல் — அவையோர்

இடம்:— சேரவேந்தன் அரண்மனை ஓலக்கமண்டபம்

காலம்:— முற்பகல்

[சேர நாட்டுப் பெருமக்களும் — தமிழகப் பெரும் புலவர்களும் கூடியுள்ளனர்; சேர வேந்தனின் இரண்டாம் மகன் இளஞ்சேரலின் முடிசூட்டு விழா அமைச்சர் – படைத் தலைவர்களுக்குமுன் புலவரால் நிறைவேற்றி வைக்கப்பெறுகிறது.]

(அரசவைப் புலவர் முதற்கண் எழுந்து பேசுகிருர்.)

புலவர்:—

அரசென்ற பயிர்வளர்க்கும் மழையாய் என்றும்
அன்புதரும் குடிமக்காள்! அரசைக் காக்க
முரசறைந்து பகைதவிர்க்கும் மொய்ம்பு சான்ற
முனைமக்காள்! மூதறிவால் நடுவு நின்று
துரிசகன்ற அறங்கூறும் அவையீர்! நாளும்
தோலாத மொழியுடைய புலமைச் சான்றீர்!
அரசுக்குத் துணைபுரியும் அலுவல் பூண்ட
அமைச்சர்படைத் தலைவர்முதல் பல்சான்றீரே! (4)

அனைவருக்கும் முதற்கண்என் வணக்கம் ஆர்வம்
அகத்திலெழப் பேரவையில் நாமெ தற்கு
நினைவுடனே கூடியுளோம் என்ற செய்தி
நீவிரெலாம் நன்கறி வீர்; நேயஞ்சான்ற
பனைமலரோன் ஆட்சியிலே பசியும் நோயும்
பகையொடுபாழ் செய்குறும்பும் அறிந்தோ மில்லை
தினையளவும் தீங்கின்றி நம்மை யாளும்
சேரர்பெரு மான்குலச்சீர் செழித்து வாழ்க! (5)

தாயாக நமைப்புரக்கும் தரணி வேந்தன்
தமிழ்க்குடியில் முதற்குடியாம் மரபில் வந்த
சேயாம்நம் சேரர்பெரு மானுக் கிந்நாள்
திருவளரும் முடிசூட்டும் பெருநாள் — உங்கள்
வாயார வாழ்த்த இளவரசாய் வந்த
வன்னிகுலத் தோன்றல் இளஞ்சேர வேந்தர்
சாயாத செங் கோலைத் தாங்குகின்ற
தனிப்பொறுப்பை ஏற்கஉளம் இசைந்தார் வாழி! (6)

தந்தைக்குத் தந்தைமுதல் முன்னோர் சீர்த்தித்
தங்குலத்தின் தனிப் பெருமை குறையாவாறு
சிந்தைநடு நிலையாகச் செய்கோ லோச்சிச்
சீறிவரும் பகையழித்துச் செம்மை சான்ற

செந்தமிழ்நூல் நெறியாலே ஆட்சி செய்யச்
செம்பொருளை உளமார வந்திப்போம் நாம்
அந்தமிலாப் புகழ் வளர்த்திந் நாடுவாழ
அமைந்தூழி நமையாள வேண்டும் என்று (7)

நெஞ்சார வாழ்த்தி, யிந்த முடியை ஓங்கும்
நேயமிகும் உங்களின்சார் பாகநின்று
செஞ்சுடர்போல் ஒளிர்கவெனச் சூட்டுகின்றேன்
செந்தமிழோர் அறிஞர்அரு மறையோர் எல்லாம்
எஞ்சாமல் வாழ்த்துங்கள்! இமயம் மட்டும்
எம்பெருமான் வெற்றிமிகு செங்கோல் செல்க!
வஞ்சிக்கோன் வாழிய! சீர்பெருகிக் கொற்றம்
வளருக! செங்கோலுயர்க! வாழ்க! வாழ்க! (8)

[முடிசூட்டு நிகழ்ச்சிகண்டு பெருமக்கள் எல்லோரும் வாயார வாழ்த்துகின்ருர்கள். இளஞ்சேரலுக்குப் புலவர் முடிசூட்டியபின் படைத்தலைவர் அமைச்சர் முதலிய அரசச் சுற்றங்கள் — உறுதி ஏற்றுச் சூளுரைக்கின்றனர்]

படைத் தலைவன்:—

பேரரசே! பெருமக்காள்! வணக்கம் இந்நாள்
பெறற்கரிய திருநாளாம் இந்நாள் வாழ்க!
போரெங்கே எனப்புகன்று புகழை நாட்டும்
புலிமறவர் தலைவனென்ற முறையிற் சில்சொல்
கூறுகின்றேன் குருதியுடன் ஆவி யிந்த
கூட்டிலுள்ள வரையரசைக் காப்போம் சேரர்
சீருயர்ந்த ஆட்சியொடு புகழார் வெற்றி
திக்கெட்டும் பரவும்வகை செய்வோம்; உங்கள் (9)

ஒத்துழைப்பால் உள்நாட்டின் பகையும், எங்கள்
உடல்வலியின் உரத்தாலே வெளிநாட் டாரின்
எத்தகைய பகையும் நாம்வெல்வோம், வேந்தன்
ஏவுகின்ற எப்பணியும் புரிந்து நாட்டை
இத்தரையின் மேலாக மதிக்கச் செய்வோம்
இதுஉறுதி! இதுஉறுதி! உறுதி! என்று
கத்தியின்மேல் ஆணையிட்டுக் கழறுகின்றேன்
காவலன்சீர் ஓங்குக! விற் கொடியோன் வாழ்க! (10)

[வீரர்கள் எல்லோரும் ஆணையிட்டு உறுதி கூறுகின்றனர்]

அமைச்சர்:—

வாழியநம் வேந்தர்பிரான்! வளங் கொழிக்கும்
மலைநாடு வாழிய! எம் மறிவிற் கேற்பத்
தோழமைசெய் அவையத்தார் துணையுங் கொண்டு
துறைதோறும் மக்களுக்குத் தொண் டியற்றி

ஆழிசெலுத் தரசருக்குத் துணையா வோம்எம்
ஆவியுள்ள வரையுமிது உறுதி! எந்த
நாழியிலும் நாட்டுநலம் குறிக்கோ ளாக
நடுநிலை தவறோமீ துறுதி! வாழ்க! (11)

புலவர்:—1.

குடிமக்கள் உயிராக வீரர் கையாக்
குணஞ்சான்ற அமைச்சர் மதி யாக, நல்ல
படிசொல்லும் புலவோர்கண் ணாகச், சேனை
பதிதோளா அலுவலர்கள் அருங்கா லாக
நடிகர்முதற் கலைஞர்வயி றாகச், சீர்த்த
நடுக்கூறும் அவையத்தார் முதுகெ லும்பாக்
கடையோகக் காத்துயர்ந்த கடமை என்ற
கருத்தாலே அரசோச்சி ஊழி வாழ்க! (12)

(பாடல்]

செந்தழல் சுடர்வெண் திங்கள் தேர்ந்தஇம் மூன்ற னுள்ளே
முந்திய குலத்திற் றோன் றி முறையினாற் சுடரோன் ஒத்துச்
செந்தமிழ்க் கல்வி யாலே திங்களை ஒத்து மக்கள்
வந்தனைக் குரியை யாகி வாழ்கநின் செங்கோல் வாழி!

புலவர்.—2.

அன்பினால் தாயை ஒப்பாய்
அருளினால் மழையை ஒப்பாய்
இன்பினாற் சேயை ஒப்பாய்
எழுச்சியால் மலரை ஒப்பாய்
நண்பினால் நீரை ஒப்பாய்
நடுவினால் துலையை ஒப்பாய்
பண்பினால் மலையை ஒப்பாய்
பணியினால் காற்றை ஒப்பாய்

நாடிவரும் பாவலர்க்கு வான்மழையாய்
நாவலர்க்கு நல்ல மிழ்தாய்ப்
பாடிவரும் பாணருக்குப் பாலூற்றாய்ப்
பரிசிலர்க்குப் பசிய தேனாய்
ஆடிவரும் விறலியருக் காடையணி
தருந் தருவாய், அமையா தார்க்குக்
கூடிவரும் கூற்றாய், நற் குலக் கொடிக்குக்
கொழுகொம்பாய் வாழ்க வேந்தே

[எல்லோரும் வாழ்த்துகிறார்கள். பின்னர் இளஞ்சேரல் அரியணையினின்றும் எழுந்து ஆண்மையும் அரசும் சேர்ந்த நோக்கினை அவைக்கண் செலுத்தித் தான் நன்றியுரை கூறுகின்றான்]

இளஞ்சேரல்:—

அன்புடைய குடிமக்காள்! ஆற்றல் சான்ற
அவையத்துப் பெருமக்காள்! அமைச்சர் ஏறே!
இன்புடைய பாவலர்காள்! எழுச்சிமிக்க
இணையில்லா வீரர்களே! படைத் தலைவீர்!
மன்பதையை மகிழ்செய்யும் கலைவல் லோர்காள்!
மதிப்புடைய பெருந் தவத்தீர்! அனைவர்க்கும் என்
அன்பு நிறை வணக்கமுடன் நன்றி; உங்கள்
ஆதரவால் அருந்துணையால் அருமை மிக்க (13)

நுகம்பூண்டு காவல்செய நோக்கி னேன்என்
நுண்ணறிவும் தோள் வலியும் மட்டுமிந்தச்
சகந்தாங்கப் போதாஇச் சபையில் உள்ள
சான்றோர்கள் குடிமக்கள் எல்லோ ரும்தாம்
பகுந்தேற்க வேண்டும்; அதைப் பரிவாற் செய்யும்
பண்புடையீர் என்பதனை அறிவேன் உங்கள்
முகங்கோணு வகைநடக்க முயல்வேன் என்றன்
முன்னோர்கள் சென்றநெறி தவறேன்; மேலும் (14)

[சிறிது அமைதி]

அருள்மிகும் இவ் வவையோர் முன் அகத்தில் உள்ள
அல்லல்களைச் சிறிதுரைக்க எண்ணுகின்றேன்
இருள்கடியும் ஞாயிறென என்றன் தந்தை
இந்நாட்டைக் கண்ணுகக் காத்து நின்றூர்
பொருள்சேரும் மொழிக்கன்றிப் பகையாய் வந்தோர்
புன்மொழிக்குச் செவி சாய்த்த தென்றும் இல்லை
மருள் சேரும் பிறமன்னர் வலிமை யஞ்சி
மடங்குகின்ற மனப்பான்மை இல்லா வேந்தர் (15)

கோடாத நாவுடனே செங்கோல் கொண்ட
குணக்கடலாம் அவர் இறைவன் அடியைச்சேர்ந்தார்

[அமைதியாக எல்லோரும் எழுந்து மறைந்த பெருவேந்தனுக்கு வணக்கஞ் செலுத்தும் முறையில் நின்று பின்பு அமருகின்றனர்]

[கரகரத்த குரலுடன்]

வாடாத குலத்துதித்த மைந்தன் என்முன்
"வனையாத அழகுடைய தேவன் என்று
பாடாத புலவரில்லை என்பார்" அந்தப்
பைங்கன்றைப் பறி கொடுத்த ஏக்கத்தாலே
தேடாத இடமெல்லாம் தேடி உள்ளம்
தேய்ந்துடலம் சாம்பிநிலை குலைந்தார் என்ற (16)

வருத்தமிகு செய்தியைநீர் அறிவீர் — அந்தோ!
வணங்காத முடிவேந்தர், மைந்தன் பால்கொள்
அருத்தியினல் ஆவியினை விட்டார் — என்றன்
அண்ணனையான் இன்றளவும் கண்டே னில்லை

பொருத்தமுள்ள வேந்தனிந்த நாட்டின் தெய்வம்
போய் ஒளிந்தான் – புல்லியன்யான் இளையேன், ஆட்சிக்
கருத்தறிந்து யானெவ்வா றுள்வேன்? என்றன்
கடமையினை உங்கள்துணை யாலே செய்வேன் (17)

மணிமுடியை யானேற்கும் இந்த நாளில்
மதிப்புடைய தந்தையிணை அடிக ளுக்கென்
பணிவுடைய வணக்கத்தைச் செலுத்து கின்றேன்
பார்த்திபரின் புகழ்வாழ்க! அவர்தம் ஆவி
துணைபுரிய வேண்டுகின்றேன் — எனக்கு முன்னோன்
துயர்நீக்க வரும்வரையில் நும்சொற் போற்றிப்
பணிபுரிவேன் பைந்தமிழ்த்தாய் அருள் வாளாக!

புலவர்:– பண்புடைய மன்னர் பிரான்!..................

அவையோர்:- ... ... ... ... ... ஊழி வாழ்க! (18)

புலவர்:—

மூவுலகை ஒருகுடைக்கீழ் ஆண்டோரும்பின்
முடிந்துபிடி மண்ணுதல் இயற்கை — இங்கே
சாவினைப்போல் நிலைத்தபொருள் இல்லை; – அத்தால்
தன்கடனைச் செய்தவரே வாழ்வோ ராவார்
மேவியதைச் செய்யாதார் உயிரிருந்தும்
மேதினியோர் இறந்தவராய்க் கருது வார்கள்
பூவுலகிற் பொன்றுதார் இல்லை நல்லோர்
புகழுடம்பால் என்றும்நம் பக்கம் உள்ளார். (19)

பற்றின்றிப் பாராளு வோரே இந்தப்
பாரினிலே தெய்வமென மதிக்கத் தக்கார்
சுற்றமுடன் நட்பாசை சோர்வு, சூழ்ச்சி
சொல்வோ ரால் உளத்திரிதல் தனக்கேயன்றிக்
கொற்றமொடு நாட்டிற்கும் கேடு செய்யும்;
குறிக்கோளே மக்களைநன் னெறியிற் சேர்க்கும்
முற்றியநல் லறிஞருரை போற்றி நாட்டை
மொய்ம்பால்பல் லாண்டாண்டு வாழ்க வேந்தே! (20)

[எல்லோரும் வாழ்த்துகிறார்கள் – இளஞ்சேரல் தன்குறிக்கோள் நிறைந்த சூளுரைகளைக்கூறி நன்றியறிதலைப் புலப்படுத்துகிறான்]

இளஞ்சேரல்:—

மறக்குடியில் வில்லோடு பிறந்த சீர்த்தி
மறவர்களே! மாற்றாரின் குருதி நீரை
வெறுப்பின்றிப் பாய்ச்சிபரி யானை தம்மை
விளைநிலத்தின் சேருக்கி வீரம் வித்தி
அறத்துறையாம் எருவிட்டுப் பகைமை என்னும்
அருங்களையை எடுத்தாண்மை வெற்றி என்னும்
சிறப்புடைய பயிர்விளைக்கும் சேரர் என்றால்
திசைவணங்கச் செய்யுமரும் பெருவீரர்காள்! (21)

நாடென்ற தாய்க்கெவரும் மாசு செய்யின்
நற்குருதி நீராலே கழுவி இங்குப்
பாடிவரும் பாவலர்யாழ்ப் பாணர் அல்லால்
பகைஎன்று வருவோரில் லாமற் செய்வேன்.
காடன்றி வாழார்நம் கழல் சேராதார்
கனவிலும் நாம் பிறர்க்கடிமை கருதமாட்டோம்
ஆடன்றித் தோள்களிலே அலங்கல் இல்லை
அருளவன்றிக் கைகுவிதல் இல்லை இல்லை! (22)

பாண்டியரும் சோழருந்தம் ஆண்மை எண்ணிப்
பகைக்கின்உயிர் பறித்திடுவோம், அவர்தம் ஆட்சி
நீண்டிருக்க வேண்டுமெனில் நம்பால் நேயம்
நீங்காமல் இருக்கமட்டும் — நெறியால் யானிங்
காண்டிருக்க அனைவரையும் துணையா வேண்டி
அழைத்தன்போ டமைகின்றேன் வணக்கம் நன்றி!

[எல்லோரும் வாழ்த்தொலிக்க—அமைச்சர் நிறைவுரை கூறுகின்றார்]

**அமைச்சர்:—**

வேண்டியபோ துயிருடம்பும் உதவும் ஆண்மை
வீறுடையீர்! அவையினிமேற் கலையும் நன்றி. (23)

பாடல்

**புலவர் யாவரும்:—**

வில்லாற் பகைமாற்றி வீரர் புகழ்பரப்பி
எல்லாய் விளங்கும் இளஞ்சேரல் — சொல்லாலே
எண்டிசையும் வாழியவன் ஏற்றசெங் கோல்வாழி
தண்டமிழே போலும் தழைத்து. (24)

இரண்டாம் காட்சி முடிவு.

---

### காட்சி 3.

நடிகர்:— குன்றத்தோளான் — வேலன்

காலம்:— பிற்பகல்] [இடம்:— அரசப்பெருந்தெரு

[முடிசூட்டு விழாவில் கலந்துகொண்ட சேரநாட்டுப் பெருவீரன் குன்றத்தோளானும்–விழாவைக்காணக் கொல்லிமலையிலிருந்து வந்திருந்த அவன் தோழன் வேலனும் உரையாடுகின்றனர்.]

**குன்றத்தோளான்:—**

வேலா! நம் அரசரின்று சொன்ன வெல்லாம்
விளங்கிற்றா? தந்தையின்மீ தென்ன அன்பு!
மேலான மனம் அண்ணன்மீது கொண்ட
விருப்பத்தைப் பார்த்தாயா?... ... ... ...

**வேலன்:—**

.. ... ... ... ... ...ஆமாம் கேட்டேன்
கோலேந்தும் உரிமையுள்ள மூத்தோன் எங்கே?

குன்றத்தோளான்:—

குழந்தையிலே அவர்காணு மற்போய் விட்டார்,
நாலோடு நான்குதிசை எல்லாம் தேடி
நன்றாகப் பார்த்துமிந்நாள் வரையும் காணேம் (25)

வேலன்:—

எதிர்கால மன்னனையா? நண்பா! காவல்
இல்லாமல் வளர்த்தாரோ? உன்றன் பேச்சு
புதிராக இருக்கிறதே ... ... ... ...

குன்றத்தோளான்.—

... ... ... ... ... ...ஆமாம் கேளு
போதுமென்ற அளவிற்குப் பணியா ளர்கள்
எதிரேற்றுக் காக்கபல வீரர் எல்லாம்
இருந்தார்கள் ... ... ... ...

வேலன்:—

[எள்ளலாக] ... ... ... யாவருக்கும் தெரியாமல் ஓர்
சதிகார பூதம்வந்து விழுங்கி விட்டுத்
தந்திரமாய்ச் சென்றதுவோ? ஐயோ! பாவம்; (26)

குன்றத்தோளான்:—

கேளப்பா நையாண்டி செய்கிருயே

வேலன்:—

[நகைத்து] கேட்கின்றேன் உன்கயிற்றைத் திரிநீ ... ...

குன்றத்தோளான்:—

[வருந்தி] ... ... ... ... ... ... நல்ல
ஆளப்பா உன்னிடத்தில் பேச என்னல் —

வேலன்:—

அடடேநீ வெகுளாமல் சொல்லப்பா நான்
கேளிக்கைக்காக இதைக் கூறினேன் சொல்

குன்றத்தோளான்:—

கிட்டதட்டப் பதினைந்து பதினுருண்டு
நாளிருக்கும் அப்பொழுதோர் விழாஇவ் வூரில்
நாடெங்கும் கொண்டாட்டம் மக்களெல்லாம் (27)
மலையடிவாரம் எங்கும் மண்டினுர்கள்
மன்னர்முதல் எல்லோரும் கூடி...ஆ!...ஆ!...

வேலன்:—

தலைதெரியா மகிழ்ச்சியிலே தடுமாறிப்போய்......

குன்றத்தோளான்:—

தவறில்லை உண்மைதான் வேற்று நாட்டுக்
கலைவல்லார் பலர் ஆ! ஆ! என்ன காட்சி!
காணக்கண் ஆயிரந்தாம் வேண்டும்; வேலா
சிலைஉயிர்த்து வந்ததைப்போல் விறலிமார்கள்
தேனிசையாழ்ப் பாணரொடு கூத்துச் செய்தார் (28)

வேலன்:-என்ன அதற்கிதற்கும் உள்ள தொடர்பு ஏனப்பா?

குன்றத்தோளான்:—

ஏல்லோரும் அசையாமல் பார்த்தோம் — ஆண்டு
மன்னவனும் அரசியுமக் கலையில் மூழ்கி
மகிழ்ந்தார்பின் கூத்தரெலாம் பரிசு பெற்றார்

(சிறிது சிந்தனையிலிருந்து பின்)

இன்னு மென்றன் கண்களைவிட் டகலவில்லை
எல்லோரும் செல்லுகின்ற சமயம் அப்போ
"என்னுடைய குழந்தைஇள வரசன் எங்கே"?
என்றரசி எழுந்தார்கள் அரசர் பார்த்தார் (29)

"பக்கத்தில் இருந்தானே பாருங்கள் போய்ப்
பாருங்கள்" என்றுபர பரப்பாய்ச் சொன்னார்
அக்கக்காய்ப் பாசறையைத் தேடினார்கள்
அரசிக்குப் பெரு மயக்கம் ... ... ... ... ...

வேலன்:—

... ... ... ... ... ... அடடா! பின்னர்

குன்றத்தோளான்:—

மிக்க பெருங்கூட்டம் வெளியிடத்தில்; மேலும்
விளக்கேற்றும் பொழுதில் இக்குழப்பம்; நாலாத்
திக்கிலும் போய்த் தேடிவர வீரர் சென்றார்.
தெருவெல்லாம் பேச்சிதுதான் — விழாவும் இந்த (30)

வேலன்:—

நிலைமையிலே எப்படித்தான் நடக்கும் — பாவம்!

குன்றத்தோளான்:—

நெஞ்சாலே தாங்க முடியாத துன்பம்,

வேலன்:—

[ஐயுற்று] மலைநாட்டுப் பெருவேந்தன் பிள்ளையன்றோ
மதிப்புடைய ஆடையணி செய்திருப்பார்
அலையாமல் அடையாளம் தெரிந்திடாதோ?

குன்றத்தோளான்:—

அடடா நான் அதைக் கூற மறந்து விட்டேன்
தலைவாரிப் பின்னும்போ தழுதானென்று
தாயழைத்துச் சென்று விட்டார் உடனே கூத்தர் (31)
ஆட்டத்தைத் தொடங்கி விட்டார் அழுத பிள்ளை
அமைதியுற்றான் — ஆடையணி பூட்டவில்லை

வேலன்:—

[இரங்கி] கூட்டத்தில் அடையாளம்காண ஒண்ணுக்
குடிமகன்போல் ஆகிவிட்டான்—கெட்ட காலம்;

குன்றத்தோளான்:—

வாட்டமுடன் எல்லோரும் அரசன் முன்னே
வந்தார்கள் — இன்று வரை — காணவில்லை.

வேலன்:—

ஆட்டக்காரர் பின்னே சென்றிட்டானே?

குன்றத்தோளான்:—

ஆண்டவனுக்குத் தெரியும்.

வேலன்:—

... ... ... ... ... வேந்தர் செய்தி? (32)

குன்றத்தோளான்:—

அன்றடைந்த அதிர்ச்சியினுல் அருமை வேந்தர்
அகங்குழம்பி அறிவுதிரிந் தேக்கமுற்ருர்
ஒன்றுமியலாத பெருந் தேவிமட்டும்
ஓராண்டிற் பெருநாட்டிற் கெழுந்து சென்ருர்.
பொன்ற வழி யாய்ந்து வந்த மன்னருக்குப்
போரெங்கே எனும் நினைப்பு — வடநாட்டிற்குச்
சென்று வந்த கரிகாலன் சேரர் உள்ளம்
தெரியாமற் போர்க்கெழுந்தான் — உவந்தமன்னர் (33)

களஞ்சென்ருர் காலனெடு மாறுகொண்டார்
காலனுமே அஞ்சுகின்ற ஆண்மையாளர்
இளஞ்சிறுவன் எய்தபெரும் வேலை மார்பில்
ஏந்தி நின்ருர் எதிர்பாரா வகையிலந்த
வளஞ்சிறந்த வேல்புறத்தே உருவிச்செல்ல
வடக்கிருந்து வானடைந்தார் — அதனை எண்ணி
உளஞ்சிறந்த கரிகாலன் கண்ணிரண்டும்
உதிரத்தைக் கான்றவெனின் உயர்வென்
[சொல்வேன் (33)

வேலன்:—

சேயை யிழந் துயிர்வாழச் சிந்தியாத
சேரர்பெரு மான் முடிவிற் செப்பிச் சென்ற
வாயுரையை அமைச்ச ரொடு புலவரிந்நாள்
மறவாமற் கடனுற்றி மகிழ்ந்தார் போலும்!

குன்றத்தோளான்:—

தூய உளத்திளஞ்சேரல் சுருங்கச்சொல்லித்
துயர்கூர்ந்தார்; மறக்க வியலாததன்ருே
மாய மிக்க உலகில்எங் குளரோ மன்னர்?

வேலன்:—

மாவேந்தர் எந்நிலையில் இருக்கின்ருரோ? (35)

[வா வா போவோம் என்று இருவரும் செல்லுகின்றனர்]

மூன்ருங் காட்சி முடிவு.

---

(தொடரும்)